கோகுலம்

GOKULAM

ஏப்ரல் 84 ரூ.2





ருஷ்ய தேசத் தந்தை

லெனின்

பிறந்த நாள் - ஏப்ரல் - 22



கோகுலம்

மலர்—2 இதழ்—3 1984 ஏப்ரல் மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

கோகுலம்

அன்புள்ள சிறுவர் சிறுமியர்க்கு,

'கனகமணி சிம்மாசனம்'

—இந்தப் பெயரைக் கேட்டவுடனே, 'இது வண்ணப் படக் கதையின் தலைப்பாகத்தான் இருக்க வேண்டும்' என்று கூறிவிடு வீர்கள். ஆம், மே இதழில் வரப் போகும் 16 பக்க வண்ணப் படக் கதையின் தலைப்புத்தான் இது!

ஒவ்வொரு இதழிலும் வெளியாகும் வண்ணப் படக்கதையைப் பாராட்டி, தினந்தோறும் ஏராளமான கடிதங்கள் வருகின்றன. இந்த இதழில் 'ஸ்ரீஹர்ஷ சரிதம்' இடம் பெற்றிருக்கிறது. இதற்கும் நல்ல வரவேற்பு இருக்கும் என நம்புகிறோம்.

'மாலி — ஜாலி' கார்ட்டூன் எப்படி இருக்கிறது? தொடர்ந்து மாலியும் ஜாலியும் உங்களை மகிழ்விக்கப் போகிறார்கள்.


இந்த இதழில் 'பிருந்தாவனக் கவியரங்'கில் ஏறியிருக்கிறார்கள் ஐந்து உறுப்பினர்கள். அடுத்த இதழில், 'பிருந்தாவனக் கதையரங்க'த்தில் பல உறுப்பினர்களின் கைவண்ணத்தைக் காணப் போகிறீர்கள்.

'கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேர வேண்டும். விரைவில் உறுப்பினர் மனுவை வெளியிடுங்கள்' என்று, இதுவரையில் சேராத பலர் தினந்தோறும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆவலை இந்த இதழில் நிறைவேற்றியிருக்கிறோம்.

அடுத்த இதழ் 'கோகுலம்' வெளி வருவதற்கு முன்பே, தமிழ்ப் புத்தாண்டு பிறந்திருக்கும். நீங்களெல்லாம் ஆண்டுத் தேர்வு எழுதி முடித்திருப்பீர்கள்.

புத்தாண்டு உங்களுக்கு எல்லா நலன்களையும் தரவும், வெற்றி மேல் வெற்றி அளிக்கவும் ஆண்டவன் திருவருளை வேண்டுகிறோம்.

அழ. வள்ளியப்பா



சார், தபால்!

முன்கதைச் சுருக்கம் எதற்கு?

● 'கருணை விழிகள்' தொடர்கதை'யில் 'முன்கதைச் சுருக்கம்' வெளியிட்டு அரைப் பக்கத்தை வீணாக்கி விட்டீர்களே! நாங்கள் என்ன, 'கருணை விழிகள்' கதையை அவ்வளவு விரைவில் மறந்து விடுவோமா? அதுதான் நடக்காது.

—இரா. ஓம்பிரகாஷ், குன்னூர்.

(நீங்கள் முன்கதையை மறந்து விடுவீர்கள் என்பதற்காக அல்ல; தொடர்கதை ஆரம்பமான இதழ் கிடைக்கவில்லை என்று பலர் எழுதியிருந்தார்கள். அவர்களுக்கும், மார்ச் இதழிலிருந்து 'கோகுலம்' வாங்கத் தொடங்கியிருப்பவர்களுக்கும் முன்கதை தெரிய வேண்டுமே என்றுதான் 'முன்கதைச் சுருக்கம்' வெளியிட்டோம்.

—ஆசிரியர்.)

● பாக்கியவான், போளாஜி மட்டுமல்ல; வாசகர்களாகிய நாங்களும்தான்! எங்களுக்குத் தெரியாத ஒரு கதையை — அற்புதமான படங்களுடன் வெளியிட்டு எங்களைப் பரவசப்படுத்தி விட்டீர்களே!

—சித்ரா, ஸ்ரீநிவாசன், ஸ்ரீரங்கம்.

● உண்மையான குரு பக்தி இருந்தால், இறைவனே நமக்குத் தொண்டு செய்ய முன் வருவார் என்பதை இந்த வண்ணப் படக் கதை மூலம் அறிந்து கொண்டேன்.

—டி. சாவித்ரி (554), பழனி.

● 'ஹலோ மசால் வடை' என்ற சிரிப்பு நாடகம் எங்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்து விட்டது.

—க. நடராஜன் (5500), ஈரோடு—2.

● 'கருணை விழிகள்' மூலம் கோபக்காரனாகிய நான் திருந்தியுள்ளேன் என்னைத் திருத்திய கோகுலத்திற்கு நன்றி.

—கே. சங்கர், கும்மிடிப்பூண்டி.

● முகமூடித் திருடர்களைத் தந்திரமாகப் பிடித்த சின்னுவைப் போல, நாமும் செய்தால், வாழ்க்கையில் நன்மதிப்பை அடையலாம்.

—என். சந்திரன் (4785) பாவட்டக்குடி.

● 'தோசையும், ஆசையும்' மணமிக்க சுவைமிக்க ஒரு கவிதை. தமிழ்ச் சொற்களைப் பிழையின்றி எழுத உதவும் புலவர் தணிகை உலகநாதருக்கு நன்றி.

—ஆர். பி. சாரதி, தலைமை ஆசிரியர், கேளம்பாக்கம்.

● 'அப்புசாமி — குப்புசாமி'யைத் திடீரென்று நிறுத்தியதுபோல், 'பழைய கதை— புதிய பாடலை'யும் நிறுத்தி எங்களை ஏமாற்றி விடாதீர்கள்!

—என். பிருந்தா, வேலூர்.

● போளாஜி என்னும் சிறுவன் யாரென்றே தெரியாமல் இருந்தது. குருபக்தன் சரிதை படிக்கப் படிக்க ஆனந்தம்; பேரானந்தம்; மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

—பி. எம். ரங்கராமானுஜம், போளூர்.

● சுவிட்ஸர்லாந்து குட்டிக் கதைகள் இதயத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டன.

—நாகை பொன்னி, விருத்தாசலம்—1.

● 'கேள்வி நேரம்' ஏன் வெளியிடவில்லை? ஏப்ரல் இதழிலிருந்தாவது தொடர்ந்துவெளியிட வேண்டும். கண்டிப்பாக வெளியிட வேண்டும்.

—இரா. சம்பத்குமார், பெரிய நாயக்கன் பாளையம்.

(இதேபோல் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. 'கேள்வி நேரத்'திற்குப் பதிலாக 'மாவட்ட வினா—விடை' என்ற பகுதியைத் துவக்கயிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் ஓரளவாவது தெரிந்து கொள்ள இப்பகுதி உதவலாம்.

— ஆசிரியர்.)

● 'வீரம் காட்டினர்; விருது பெற்றனர்!' படிக்கும் பொழுது, அவர்களைப் போல் நாமும் பிறர்க்கு உதவி செய்ய வேண்டும் என்று மனத்தில் தோன்றுகிறது.

—சீ. பரமேஸ்வரன் (359), புதுப்பாளையம்

● 93 வயது எழுத்தாளரின் கட்டுரை மிகவும் அருமை. அந்தக் கால நிலையை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகிறது.

—தனம் கந்தசாமி, ஈரோடு—2.

இந்த இதழ் எழுத்தாளர்கள்



சி.மாணிக்கம்



அழகனூர்



நாரண மணிவண்ணன்




எம்.ஆர்.ஸ்ரீப்ரியா



கு.பழனிவேல்




டி.வெங்கடகிருஷ்ணன்



அட்டை வண்ணப்படம்: திலீப் பானர்ஜி ☆

மின்மினிக் கதைகள்

இருதலைப் பறவை!



காட்டிலே ஒரு பறவை இருந்தது. அதற்கு மற்றப் பறவைகளைப் போலவே வயிறு, உடம்பு, எல்லாம் இருந்தன. ஆனாலும், இரண்டு தலைகள் இருந்தன. அந்த இரு தலைகளும் ஒன்றை ஒன்று பார்த்தபடி நேர் எதிராக இருந்தன.

ஒருநாள் அந்தத் தலைகளில் ஒன்றிலிருந்த வாய்க்கு அமுதம் கிடைத்தது. அமுதத்தை அது உண்ணப் போகும் சமயம், ''எனக்கும் அதில் சரிபாதி வேண்டும்'' என்று மற்றொரு தலையிலிருந்த வாய் கேட்டது. 'முடியாது' என்று கூறிவிட்டது அமுதத்தை அடைந்த வாய்.

அமுதம் கிடைக்காததால், கோபம் கொண்ட வாய், ஆத்திரத்தில் மிகவும் கொடிய நஞ்சு ஒன்றைத் தேடிப் பிடித்துத் தின்றுவிட்டது. இரண்டு வாய்களுக்கும் வயிறு பொதுவாக இருந்ததால், நஞ்சு வயிற்றுக்குள் போனதும், இரண்டு தலைகளுடன் அந்தப் பறவை எமலோகம் போய்ச் சேர்ந்தது!

இறந்த சிங்கம் எழுந்தது!

நான்கு பேர் நண்பர்களாயிருந்தார்கள். அவர்களில் மூவர் பலவிதமான வித்தைகளைக் கற்றுக் கொண்டிருந்தார்கள். ஒருவனுக்கு எந்த வித்தையும் தெரியாது; ஆனாலும், உலக அறிவு உண்டு.

ஒருநாள், அந்த நால்வரும் காட்டுப் பாதையில் சென்றனர். அப்போது இறந்துபோன சிங்கத்தின் எலும்புகளைக் கண்டனர்.

உடனே, வித்தைகளை அறிந்த ஒருவன், ''நான் என் திறமையினால், இந்தச் சிங்கத்தின் எலும்புகளைச் சரியானபடி பொருத்தப் போகிறேன்'' என்றான்.


இன்னொருவன், ''நான் தோல், சதை, இரத்தம் எல்லாம் உண்டாகும்படி செய்வேன்'' என்றான். ''நான்மட்டும் சும்மா இருப்பேனா? உடனே நான் சிங்கத்துக்கு உயிர் உண்டாகும்படி செய்வேன்'' என்றான் மூன்றாமவன்.



இவர்கள் பேச்சைக் கேட்ட வித்தை தெரியாத நண்பன், ''வேண்டாம், இது மிகவும் ஆபத்து! சிங்கம் உயிர் பெற்றதும், நம்மைக் கொன்று தின்றுவிடும்'' என்றான். மற்றவர்கள் அவன் மீது சீறினார்கள். அவன் வேறு வழியில்லாமல், பக்கத்திலிருந்த உயரமான மரத்தில் ஏறி உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

மற்றவர்கள், சொன்னபடி செய்து, சிங்கத்திற்கு உயிர் கொடுத்தனர். உயிர் பெற்ற சிங்கம் கர்ஜனை செய்து கொண்டு எழுந்தது. அந்த மூவர் மீதும் பாய்ந்து அவர்களைக் கொன்று தின்றது! மரத்திலிருந்த நண்பன் அந்தப் பரிதாபக் காட்சியைக் கண்டு வருந்தினான்.

காவல் காத்த குரங்கு



ஓர் அரசன் ஒரு பழக்கப்பட்ட குரங்கை அன்பாக வளர்த்துவந்தான். அதன் கையில் வாளைக் கொடுத்துச் சிப்பாய் போல நடக்கச் சொல்வான். சில நாட்களில் அதையே தன் மெய்க்காவலனாக வைத்துக் கொண்டான்.

ஒருநாள் இரவு, நல்ல நிலா வெளிச்சத்தில் அரசனும் அரசியும் அரண்மனைத் தோட்டத்தில் உலவினார்கள். பிறகு, அங்கிருந்த உல்லாச விடுதியில் சென்று படுத்தார்கள். தூங்குவதற்கு முன்பு அரசன் குரங்கிடம், தன் உடைவாளைக் கொடுத்து, ''நீ இங்கேயே என் பக்கத்திலிருந்து காவல் காக்க வேண்டும். கவனமாகப் பார்த்துக் கொள்'' என்று கூறித் தூங்கி விட்டான்.

குரங்கு உருவிய வாளுடன் காவல் காத்துக் கொண்டிருந்தது. அப்போது, ஒரு வண்டு வந்து அரசன் தலையில் உட்கார்ந்தது. உடனே, குரங்கு அதைத் துரத்தி விரட்டியது. மீண்டும் அந்த வண்டு முன்போல் உட்காரப் போனது. திரும்பவும் குரங்கு விரட்டியது. மூன்றாவது தடவையும் வண்டு வந்து உட்காரப் போனது. உடனே குரங்குக்கு அபாரமான கோபம் வந்து விட்டது. வாளை ஓங்கி, வண்டைப் பார்த்து அடித்தது. வண்டு தப்பிவிட்டது. அரசனின் மண்டை இரண்டாகிவிட்டது!

நரியின் பேராசை



ஒரு வேடன் காட்டுப் பன்றியை நோக்கி அம்பை எய்தான். அம்பு பன்றியின் உடம்பைக் கிழித்துக் கொண்டு சென்றது. வேதனையைத் தாங்க முடியாத பன்றி மிகவும் கோபத்துடன் வேடன் மேல் பாய்ந்து அவனைக் கொன்றது. சிறிது நேரத்தில் அதுவும் இறந்து விட்டது.

வேடனும் பன்றியும் இறந்து கிடப்பதைக் கண்டது ஒரு நரி. ''நான் இந்த இரண்டையும் மறைவான ஓர் இடத்துக்கு இழுத்துச் சென்று அங்கே வைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகத் தின்பேன். பல நாட்களுக்கு எனக்கு இரையைப் பற்றிய கவலையே இராது'' என்று மகிழ்ச்சி அடைந்தது.


வேடனின் அருகில் கிடந்த வில்லை நரி கண்டது. உடனே அதை எடுத்தது. தோலினால் செய்யப்பெற்ற நாண் கயிற்றால், அந்த வில் கட்டப்பட்டிருந்தது. தோலைக் கண்டதும் நரிக்கு அதையும் தின்னவேண்டுமென்ற ஆசை தோன்றியது.

மெதுவாக வில்லின் நுனிப் பகுதியைக் கடித்தது. மறுவிநாடி, 'பட்' டென்ற சத்தம் கேட்டது. நாண் கயிறு அறுபட்டு, வில் வேகமாக நிமிர்ந்தது. நரியின் வாயில் இருந்த நுனிப் பகுதி, வாயைக் கிழித்துக் கொண்டு, தலைக்குள் சென்று விட்டது. அப்புறம்?...

வேடனைப் போல், பன்றியைப் போல், அதுவும் ஆகிவிட்டது!

பேனும் மூட்டைப் பூச்சியும்

அரசனது படுக்கையில் ஒரு பேன் இருந்தது. அது தினந்தோறும் அரசன் தூங்கிய பிறகு அவன் தலையிர்



களுக்குள் புகுந்து, அவனது தூக்கத்தைக் கெடுக்காமல் மெல்ல மெல்ல இரத்தத்தை உறிஞ்சும். நாளடைவில் அது நன்றாகக் கொழுத்துப் போனது.

ஒருநாள் அந்தப் படுக்கைக்கு ஒரு மூட்டைப் பூச்சி வந்து சேர்ந்தது. அதைப் பேன் விரட்ட முயன்றது. ஆனாலும், மூட்டைப் பூச்சி மிகவும் கெஞ்சிக் கேட்கவே, ''சரி, நீயும் இங்கே இரு. ஆனால், நீ அரசர் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கும் வரை அவரைக் கடிக்கக் கூடாது. கடிக்கும்போதும். கால் பக்கமே கடிக்க வேண்டும்'' என்றது.

''சரி'' என்ற மூட்டைப் பூச்சி, அரசன் வந்து படுத்ததுமே, தன் வேலையைத் தொடங்கி விட்டது. 'நறுக்'கென்று அரசனின் இடுப்பில் கடித்து விட்டது.


ஊசியால் குத்தியது போல் இருந்ததால் அரசன் துடிதுடித்து எழுந்தான். வேலையாட்களை அழைத்தான். அவர்கள் அரசனின் படுக்கை முழுவதும் தேடினார்கள். புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள்.

மூட்டைப் பூச்சி கட்டிலின் இடுக்கில் புகுந்து ஒளிந்து கொண்டதால் அதை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனாலும், படுக்கையில் பதுங்கியிருந்த பேன், அவர்கள் கண்களில் பட்டுவிட்டது. உடனே அதைப் பிடித்து நசுக்கிக் கொன்றுவிட்டார்கள். துஷ்டனுக்கு இடம் கொடுத்துத் தன் உயிருக்கே ஆபத்தைத் தேடிக் கொண்டது.

- பஞ்சதந்திர இதோபதேசக் கதைகள்

எல்லாம் பூச்சிகளே!

நாரண மணிவண்ணன்



படுக்கையில் வீழ்ந்தேன்;
மூட்டைப் பூச்சிகள்
பதுங்கிக் கடித்தன.
பாழும் கொசு, ஈ
சிலந்தியும் சேர்ந்து
பதமும் பார்த்தன.

குளிக்கச் சென்றேன்;
அட்டையும் மீனும்
கொத்திப் பிடுங்கின.
கூந்தல் தலையில்
ஈறும் பேனும்
கூடிக் கடித்தன.

உணவைத் திணித்தேன்;
வயிற்றுப் பூச்சிகள்
உயிரை வாட்டின.
ஊரும் எறும்பும்
பாம்பும் தேளும்
ஓங்கிக் கடித்தன.

தண்ணீர் குடித்தேன்;
சிறிய பூச்சிகள்
தானாய் நுழைந்தன.
தாவும் காற்றில்
நச்சுக் கிருமிகள்
தானும் புகுந்தன.

இருமிக் கொண்டேன்;
தும்மல், வாந்தி
என்னை வாட்டின.
இன்னல் தந்த
பல்நோய், கண்ணோய்
எல்லாம் பூச்சிகளே!

பரிட்சை நெருங்கிடும் காலம்?
கவனமாக படித்திடும் நேரம்



முழுதும் தயாராயிருந்திட வேண்டிய காலம்
காம்ப்ளான்®
பருக வேண்டிய நேரம்.

காம்ப்ளான் ஒன்றில்தான் அவனுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் 23 மூலாதார சத்துணவுகள் உள்ளன.

குழந்தைகள், முக்கியமாக பரிட்சைக்கு படிக்கும் காலத்தில், திடமாக இருந்திடுவது அவசியம். அதனால்தான் பரிட்சை நடக்கும் நேரம் **காம்ப்ளான்** நேரம் என்று அன்னையர் அறிவர்.

உடல் வளர்ச்சியில் பங்கு பெறுவதே புரதம் என்ற சத்துதான். **காம்ப்ளானில்** குழந்தைகளுக்குத் தேவையான புரதம் (20%) இருப்பது மட்டுமல்ல, அப்புரதம் மிகச்சிறந்த புரதமுமாகும் (பால் புரதம்). அத்துடன், அது குழந்தைகளுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் ஆகிய 22 கூடுதல் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும்.

துவங்குங்கள் **காம்ப்ளான்** உங்கள் குழந்தைகளுக்கு—அன்றாடம் இருவேளை. நினைவில் இருக்கட்டும் டாக்டர்களின் சிபாரிசுபெற்ற திட்டமிட்ட உணவு **காம்ப்ளான்**.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளாம் சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ, ஸ்ட்ராபெர்ரியும், சாதா ரகத்திலும்.

குழந்தைகள் மிகவும் விரும்பிடும் சுவைகள்.




GKBE.884,GLC.11 Tam.

காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

கேள்வி இங்கே, பதில் எங்கே?

18. இந்திய அரசு எந்த ஆண்டில், நம் தேசியப் பறவையாக மயிலை அறிவித்தது?
19. கிரஹாம்பெல் டெலிபோனைக் கண்டுபிடித்த ஐந்தாம் ஆண்டிலே, நம் தேசத்தில் ஒரு நகருக்கு டெலிபோன் வசதி வந்து விட்டது. எந்த நகருக்கு?
20. முதல் முதலாகப் பின்னணி இசையுடன் வெளிவந்த இந்தியத் திரைப்படம் எது? எந்த ஆண்டில்?
21. தற்போது நம் குடியரசுத்தலைவராயிருக்கும் ஜைல்சிங் எத்தனையாவது குடியரசுத் தலைவர்?
22. ரவீந்திரர் நினைவுப் பரிசு யாரால், எவருக்கு, எத்தனை ரூபாய் வழங்கப்படுகிறது?
23. நூறு கிராம் எடை வரையுள்ள அச்சிட்ட புத்தகங்களைப் புத்தக அஞ்சலில் அனுப்ப எவ்வளவு தபால் தலை ஒட்ட வேண்டும்?
24. இராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரம் எது?
25. லிங்க்ஸ் (LYNX) என்றால் என்ன?
26. லட்சுமணபுரியிலிருந்து லக்னோ எவ்வளவு கி. மீ. தூரத்தில் உள்ளது.
27. நமக்கு இராமாயணம், மகாபாரதம் போல இலியடு, ஆடிசி என்ற இரண்டு பெரிய காப்பியங்களை உடைய நாடு எது?



28. இதோ இந்தப் படத்தில் இருப்பவர் யார் என்று தெரிகிறதா?
29. டெலிவிஷன் இந்தியாவிற்கு வந்து 25 ஆண்டுகளாகப் போகிறது. அதன் வெள்ளி விழா எப்போது?
30. லண்டன் பார்லிமெண்ட் டவரில் உள்ள பிக்பென் கடிகாரத்தின் எடை எவ்வளவு?
31. அமெரிக்காவில் 'ஜனாதிபதிகள் தினம்' ஒவ்வொராண்டும் எப்போது கொண்டாடப்படுகிறது?
32. கவிச்சக்கரவர்த்தி கம்பரின் சமாதி எந்த ஊரில் உள்ளது?
33. கிலுகிலுப்பைப் பாம்பு என்ற மிகக் கொடிய நஞ்சுள்ள பாம்பு இனம் உலகில் ஒரே ஒரு நாட்டில்தான் உண்டு. அது எந்த நாடு?
34. இந்திய தபால் தலை எப்போது எங்கு முதன் முதலாக வெளியிடப் பட்டது?
35. குடந்தை என்றால் கும்பகோணத்தைக் குறிக்கிறது. கரந்தை என்றால் எந்த ஊரைக் குறிக்கும்?
36. மாணிக்கவாசகர் கட்டிய கோயில் எது?
37. ஈரான் நாட்டின் பழைய பெயர் என்ன?

பதில் இங்கே

18. 1964—ல்.
19. கல்கத்தாவுக்கு.
20. சண்டிதாஸ் என்ற வங்காளிப் படம், 1932—ல்.
21. ஏழாவது.
22. மேற்கு வங்க அரசால் ஆண்டு தோறும் வெளிவரும் சிறந்த புத்தக ஆசிரியருக்கு ரூ. 50001-வழங்கப்படுகிறது.
23. 15 காசுத் தபால் தலை.
24. ஜெய்ப்பூர்.
25. அது ஒரு பெரிய காட்டுப் பூனை.
26. இரண்டும் ஒன்றுதான்! ஆங்கிலப் பெயரே லக்னோ!
27. கிரேக்க நாடு.
28. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் ஜனாதிபதியாகிய ஜார்ஜ் வாஷிங்டன்
29. 15.9.1984.
30. சுமார் 13.7 டன்.
31. பிப்ரவரி மாதம் மூன்றாவது திங்கட்கிழமை.
32. இராமநாதபுரத்திலுள்ள நாட்டரசங்கோட்டையில்.
33. அமெரிக்கா.
34. கராச்சியில், 1825—ல்.
35. கருந்தட்டான்குடி.
36. ஆவுடையார்கோயில்.
37. பாரசீகம்.

பிள்ளையாரை ஏமாற்றலாமா?

திருமதி வசந்தா



``சுரேஷ் சீக்கிரம் வாடா, ஸ்கூலுக்கு நேரமாச்சு'', செந்தில் சுரேஷைக் கூப்பிட்டான். செந்திலும், சுரேஷும் பக்கத்துப் பக்கத்து வீட்டில் இருக்கும் நண்பர்கள். இருவரும் ஒரே பள்ளியில் நான்காம் வகுப்பில் படிக்கிறார்கள். சேர்ந்தேதான் பள்ளிக்குப்போவார்கள். வருவார்கள்.

பக்கத்துத் தெருவிலேயே பள்ளி இருப்பதால் நடந்தே போய் வருவார்கள். வழியில் ஒரு பிள்ளையார் அரச மரத்தடியில் வீற்றிருக்கிறார். செந்திலின் அம்மா செந்தில் ஒன்றாவது படிக்கும் போது பள்ளிக்கு அழைத்துச் செல்வார். போகும் வழியில் உள்ள பிள்ளையார் கோவிலில் நின்று சாமி கும்பிட்டு விட்டுச் செல்வார். தம் மகனையும் கும்பிடச் சொல்வார். அந்தப் பழக்கத்தில் செந்தில் பள்ளிக்குப் போகும் போது பிள்ளையாரைக் கும்பிட்டு விட்டுச் செல்வான்.

அன்றும் அப்படித்தான் செந்திலும், சுரேஷும் பிள்ளையார் முன் நின்று கும்பிட்டனர். இருவரும் பிள்ளையார் முன் நின்று மொண மொணவென்று என்னவோ வேண்டிக் கொண்டனர். அன்று அவர்களுக்கு மாதப் பரீட்சை—தமிழ்.

சுரேஷ், செந்திலிடம் ``டேய், நீ என்னடா வேண்டிக்கிட்டே?'' என்று கேட்டான்.

``நான் தமிழ் பரீட்சை நல்லா எழுதி பஸ்ட் மார்க் வாங்கணும்னு வேண்டிக்கிட்டேன். நீ என்னடா வேண்டிக்கிட்டே'' என்று செந்தில், சுரேஷைக் கேட்டான்.

அதற்கு சுரேஷ், ``நான் நேத்து சினிமாவுக்குப் போனேனில்லையா? அதுனாலே ஒண்ணுமே படிக்கலேடா. படிக்காததாலே 'தமிழ் ஆசிரியர் ஸ்கூலுக்கு வரக்கூடாது'ன்னு வேண்டிக்கிட்டேன். டீச்சர் வந்தால்தானேடா பரீட்சை நடக்கும்? இல்லாட்டி நடக்காதுல்லே! தமிழ் ஆசிரியர் இன்னிக்கு வரலேன்னா உனக்குத் தேங்காய்உடைக்கிறேன்னு வேண்டிக்கிட்டேன்'' என்றான்.

பள்ளியை அடைந்ததும் செந்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து தமிழ்ப் புத்தகத்தை எடுத்து வைத்துப் படிக்கத் தொடங்கினான். சுரேஷ் அவனை வேடிக்கை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். செந்தில் சுரேஷைப் பார்த்து, ``டேய் சுரேஷ், மணி அடிக்க இன்னும் நேரந்தான் இருக்குதே; நேத்தும் சினிமாவுக்குப் போனதாலே நீ படிக்கலேங்கிறே. இப்பவாவது படிக்கலாமில்லையா?'' என்று கேட்டான்.

``நான்தான் பிள்ளையார்கிட்டே தமிழ் ஆசிரியர் வரக் கூடாதுன்னு வேண்டிக்கிட்டேனில்லையா? அதனாலே ஆசிரியர் வர மாட்டாரு. நீ படிச்சதெல்லாம் வீணாகப் போவுது பாரு'' என்றான் சுரேஷ்.

செந்தில் ஒன்றும் பதில் சொல்லாமல் மும்முரமாகப் படித்தான். மணி அடித்தது. இறை வணக்கம் நடந்த போது தமிழ் ஆசிரியர் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து சுரேஷ் திடுக்

கிட்டான். அவன் முகம் பேயறைந்தது போல் ஆனது.

அன்று தமிழ்ப் பரீட்சையும் நடந்தது. அவர்கள் எப்படிப் பரீட்சை எழுதியிருப்பார்கள்என்பதுஉங்களுக்குத் தெரியும். நன்கு படித்த செந்தில் நன்றாகவும் படிக்காத சுரேஷ் மோசமாகவும் பரீட்சை எழுதினார்கள்.

அன்று சாயங்காலம் பள்ளி விட்டு வீடு திரும்பும்போது, "டேய் செந்தில், பிள்ளையார் என்னை ஏமாத்திட்டாருடா. தேங்காய் உடைக்கிறேன்னு வேண்டியும் இப்படி ஏமாத்திட்டாரே" என்று சுரேஷ், செந்திலிடம் அழமாட்டாத குறையாகச் சொன்னான்.

"நீ சினிமாவுக்குப் போகாமல் நல்லாப் படிக்கப் பிள்ளையாருகிட்டே வேண்டியிருந்தால் பரவாயில்லை. நான் நல்லாப் படிச்சு முதல் மார்க் வாங்கணும்னு கேட்டேன். பிள்ளையாரும் முதல் மார்க் வாங்கிக் கொடுத்திட்டாரு. நீ உன் அம்மாவிடத்திலே பரீட்சைன்னு சொல்லாமே சினிமாவுக்குப் போய் உங்கம்மாவை ஏமாத்தினாய். படிக்காமல் ஆசிரியரை ஏமாத்தினாய். ஆமா, தேங்காய் உடைக்கிறேன்னு வேண்டிக்கிட்டியே, உங்கம்மாகிட்ட என்னன்னு கேட்டுத் தேங்காய் வாங்கியிருப்பாய்?' என்று கேட்டான், செந்தில்.

அதற்கு சுரேஷ், "ஏதாவது பொய் சொன்னாத்தான் அம்மாவிடம் தேங்காய் வாங்க முடியும். நிஜத்தைச் சொன்னால் தோலை உரிச்சுட மாட்டாங்களா?" என்றான்.

"நீ பொய் சொல்லித் தேங்காய் வாங்கி உடைச்சால் அந்தப் பிள்ளையாரு ஏத்துக்குவாரா? நீ உங்கம்மாவை, ஆசிரியரை, பிள்ளையாரை எல்லோரையும் ஏமாற்ற நினைத்தாய். பிள்ளையாரு உன்னை ஏமாத்திட்டாரு" என்றான் செந்தில்.

மருந்தும் வேண்டுமோ?

சி. மாணிக்கம்



ஓடி விளையாடி இன்புறுதல் — நல்ல
உழைப்புக்குப் பின்னோய்வுகொள்ளுவது
நாடித் தினமிதைச் செய்வதனால் —பின்பு
நாளும் மருத்துவம் தேவையுண்டோ?

காய்கள் கனிகள் கிழங்குகளும்—பச்சைக்
கீரை வகைகளும் உண்பதனால்
நோய்கள் நம்மைப்பற்ற எண்ணிடுமோ-
அந்த
நமனும் நெருங்க முடிந்திடுமோ?

தூய்மையைப் போற்றிக்கைக் கொள்ளு
வதும்—தினம்
தூயநன் னீரில் குளிப்பதுவும்
வாய்விட்டுப் பேசிச் சிரிப்பதுவும் —நம்
வாழ்நாளை மேலும் பெருக்குமன்றோ?

தூய உணவும் உடையதுவும் —நல்ல
தூய்மை நிறைந்திட்ட இல்லமதும்
சாயுங் கதிரின் ஒளியதுவும் — நோய்
சாராது நம்முடல் காக்குமன்றோ?

உண்ட உணவும் செரித்தபின்பு — நாம்
உண்ணும் பழக்கத்தைக் கொள்ளு
வதால்;
கண்ட மருந்தினைத் தேடித்தினம்— நாம்
கஷ்டப் படுவதும் இல்லையன்றோ?

இயற்கை வழியினில் வாழக் கற்றால்—
நமக்கு
என்றுமே நோயினால் தொல்லையில்லை.
செயற்கை மருந்தினைத் தேடித்தேடி—
தினம்
செல்லும் பழக்கமும் தேவையில்லை.

தொண்டில் சிறந்த இவர்களின் தொட்டில் பெயர்கள் தெரியுமா?



விநோபாஜி



விவேகானந்தர்



பரமஹம்சர்



அன்னை தெரசா




குன்றக்குடி அடிகளார்




ஜயேந்திர சுவாமிகள்

விடை: 30ம் பக்கம்

திருக்குறள் புதிர்





மேலே உள்ளன இரு படங்கள். ஒவ்வொரு படமும் ஒரு திருக்குறளை நினைவூட்டுகின்றது. எந்த எந்தத் திருக்குறளை அவை நினைவூட்டுகின்றன? ஒரு தாளில் எழுதிக் கொண்டு, அவை சரியாக இருக்கின்றனவா என்று **30** ஆம் பக்கத்தைப் பார்த்து முடிவு கட்டுங்கள்.

பிரெஞ்சு தேசத்துக் குட்டிக் கதைகள்

கூட்டுப்புழுவும், நத்தையும்

மெல்ல ஊர்ந்துவந்த கூட்டுப் புழு எதிரே ஒரு நத்தையைப் பார்த்தது. ''அண்ணா!'' என்று அன்புடன் அழைத்தது.

''பார்க்கவே பிடிக்காத நீயா எனக்குத் தம்பி? சீ போ!'' என்று எரிச்சலோடு வேறுபக்கம் தலையைத் திருப்பிக் கொண்டு போனது நத்தை. கூட்டுப்புழு வருத்தத்துடன் நகர்ந்தது.



ஒருநாள் நத்தை அழகிய வண்ணத்துப் பூச்சி ஒன்றைக் கண்டது. அது மகிழ்ச்சியோடு அங்குமிங்கும் பறந்தது. அதன் பல வண்ணச் சிறகுகள் பளபளப்பாக இருந்தன. அதன் அழகில் மயங்கியது நத்தை.

''வண்ணத்துப் பூச்சி..! வண்ணத்துப் பூச்சி! நீ மிக அழகாக இருக்கிறாய். உன் சிறகுகள் என்ன பளபளப்பு! இங்கே வாயேன். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம்'' என்றது.

''திமிர் பிடித்த நத்தையே! நானா அழகாயிருக்கிறேன்? என் சிறகுகள் தாம் உனக்குப் பிடிக்கின்றன. பார்க்கவே பிடிக்காமல், 'சீ போ, என்று நீ வெறுத்துத் துரத்திய பழைய கூட்டுப் புழுதான் நான்'' என்றது வண்ணத்துப் பூச்சி.

வெட்கம் அடைந்த நத்தை, தன் உடலை ஓட்டுக்குள் இழுத்துக்கொண்டது!

அரிய ஜாடிகள்!



ஓர் அரசன் மிக அழகான இருபது ஜாடிகளைத் தம் அரண்மனையில் பாதுகாத்து வந்தான். ஓர் அதிகாரி ஒரு ஜாடியை உடைத்துவிடவே அவருக்குக் கொலைத் தண்டனை வழங்கினான். மறுநாள் அது நிறைவேற இருந்தது. இச்செய்தி எங்கும் பரவியது.

அடுத்தநாள் காலை, ஒரு கிழவர் அரசரிடம் வந்தார். ''அரசே! ஜாடியை, ஒட்டிய அடையாளமே தெரியாமல் ஒட்ட வைப்பேன்'' என்றார்.

மன்னன் ஜாடிகள் இருந்த அறைக்குக் கிழவரை அழைத்துச் சென்றான். உடைந்த ஜாடியைப் பார்த்த கிழவர் திடீரென்று எல்லா ஜாடிகளையும் தள்ளினார். எல்லாம் உடைந்துவிட்டன.

''ஏன் இவற்றை உடைத்தாய்?'' என்று ஆத்திரத்தோடு கேட்டான் அரசன்.

''ஒவ்வொரு ஜாடியும் ஓர் உயிரைப் பறிக்கக் கூடாது என்பதற்காகத் தான்! என் உயிர் ஒன்று போனால் போகட்டும் அரசே!'' என்று அமைதியாகக் கூறினார் கிழவர்.

அந்தப் பதில் மன்னனைச் சிந்திக்க வைத்தது. கிழவரின், மன உறுதியையும், அறிவுத் திறத்தையும் கண்டு வியந்தான்.

''பெரியவரே, மனித உயிர்தான் இந்த ஜாடிகளைவிடச் சிறந்தது.

நான் அந்த அதிகாரியை விடுதலை செய்து விடுகிறேன்'' என்றான் அரசன்.

ஊசி இலை மரம்

ஒரு காட்டில் இருந்த ஊசி இலை மரம் தன் இலைகளை எண்ணி வருந்தியது. 'என் இலைகள் பொன்னாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?', என்று நினைத்தது.

மறுநாள் காலை மரம் தூக்கத்திலிருந்து விழித்தது. தன் இலைகள் பொன்னாக இருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியில் மூழ்கியது. ''என்னைப் போல எந்த மரமும் இல்லை'' என்று இறுமாப்புக் கொண்டது.

சற்று நேரத்தில் அங்கு வந்த ஒருவன் மரத்திலுள்ள பொன் இலைகள் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு போய் விட்டான்.



''பொன் இலைகள் வேண்டாம். கண்ணாடி இலைகள் இருந்தால் நன்றாக இருக்கும்'' என்று நினைத்தது மரம்.

மறுநாள் காலை, கண்ணாடி இலைகள் முளைத்து இருந்தன. ''எவ்வளவு அழகாயிருக்கிறது என் தோற்றம்!'' என்று அது இறுமாப்புக் கொண்டது. கொஞ்ச நேரத்திலேயே பெருங்காற்று வீசியது. கண்ணாடி இலைகள் பொலபொலவென்று உதிர்ந்து உடைந்தன.

''எனக்கு மணமுள்ள இலைகள் இருந்தாலே போதும்'' என்றது மரம். அடுத்த நாள் பச்சை இலைகள் முளைத்து மணம் வீசின. அந்தப் பக்கம் வந்த ஆடுகள், மரத்தை மொட்டையாக்கி விட்டுப் போய் விட்டன.

மறுநாள் காலை பழைய இலைகளுடன் தோன்றிய மரம் மகிழ்ச்சியோடு இருந்தது.

மந்திரக் குவளை

ஓர் அரசன் மிகவும் முன்கோபக்காரன். ஒருநாள் ஒரு தேவதை அவன் முன் தோன்றி, ''உனக்குச் சினம் வரும் போதெல்லாம் இந்தக் குவளையில் மூன்று முறை தண்ணீர் நிரப்பிக் குடி'' என்று கூறிக் குவளையைக் கொடுத்து மறைந்தது.

அரசன் அப்படியே செய்தான். சில நாட்களில் சினம் அவனை விட்டு விலகியது.



தேவதை வந்து தோன்றியது. அரசன் மிகவும் நன்றி செலுத்தினான். ''மன்னனே, உன்னை ஏமாற்ற நான் விரும்பவில்லை. அது மந்திரக் குவளை அன்று; சாதாரணமானதுதான். கோபம் வரும்போது சிந்திக்க நேரம் இருக்காது. சிந்தனை வந்தால் கோபம் தானே குறையும். தண்ணீரை மூன்று முறை ஊற்றிக் குடிக்கும்போது நேரம் கிடைக்கிறது. அப்போது சிந்திக்க முடிவதால் புலன்கள் அமைதி பெறுகின்றன. ஆத்திரம், நியாயத்திற்குத் தன் இடத்தைக் கொடுக்கிறது'' என்று கூறி மறைந்தது தேவதை.

இரும்புப் பெட்டி

ஒரு கிழவன் தன் சொத்தைப் பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுத்தான். அவர்களோ சொத்தைப் பெற்றுக் கொண்டு, கிழவனைக் கவனிக்காமல் விட்டு விட்டனர். கிழவன் தன் நண்பனிடம் விவரத்தைக் கூறினான். ''உன்னால் இனி ஒரு பயனும் இல்லை. அதனால்தான் இப்படி நடக்கிறார்கள். ஒரு வழி சொல்கிறேன், கேள். நாளை மாலை நான் நாணயங்களையும் ரூபாய் நோட்டுக் கற்றைகளையும் கொண்டு வந்து தருகிறேன். நீ அவற்றை உரத்த குரலில் எண்ணி இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டு! பிறகு நடப்பதைப் பார்!'' என்றான் நண்பன்.



கிழவனும் அப்படியே பணத்தைப் பூட்டிருன். மகன்கள் சத்தம் கேட்டு, கிழவனுடைய அறையின் சாவித்துளை வழியே அந்தக் காட்சியைக் கண்டனர்.

மறுநாளிலிருந்து தந்தையைக் கவனித்துக் கொள்ளத் தொடங்கினர். கிழவன் ஒருநாள் ரகசியமாக, தன் நண்பனிடம் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டான்.

கிழவன் ஒருநாள் இறக்கவே, மகன்கள் இரும்புப் பெட்டியைத் திறந்தனர். அதில் ஒரு சுத்தியும் துண்டுத் தாளும் இருந்தன.

''தனக்கென ஏதும் வைத்துக் கொள்ளாமல், பிள்ளைகளை நம்பித் தன் சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கும் தந்தைகளின் மண்டையை உடைக்க இந்தச் சுத்தி பயன்படட்டும்'' என்று அந்தத் தாளில் எழுதியிருந்தது.

திராட்சைக் குலை

கடைத் தெருவுக்குச் சென்ற தாய் ஒரு திராட்சைக் குலையை வாங்கி வந்தாள்; தன் மகனுக்குக் கொடுத்தாள். அவனுக்குத் தன் தம்பியின் நினைவு வரவே அதை அவனிடம் கொடுத்தான்.

அவன் அதைச் சுவைக்கத் தொடங்கியபோது, தந்தை தோட்டத்தில் வேலை செய்வதைப் பார்த்தான். 'அவர் பழத்தைத் தின்றால் களைப்பு நீங்குமே!' என்று அவரிடம் கொடுத்தான்.



அதைப் பெற்றவுடன் அவருக்குத் தம் மனைவியின் நினைப்பு வந்தது. சமையலறையில் உழைக்கும் அவள் தின்பதுதான் நல்லது என்று எண்ணி உடனே வீட்டினுள் சென்று அவளிடம் கொடுத்தார்.

இப்படி, அந்தத் திராட்சைக் குலை எங்கிருந்து வந்ததோ அங்கேயே திரும்பி விட்டது. குடும்பத்தில் நிலவும் ஒற்றுமையையும் பாசத்தையும் எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைந்தாள்.

-க. சச்சிதானந்தம் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள 'பிரெஞ்சுக் கதைகள்' என்ற நூலிலிருந்து தொகுத்தவர்:

பூதலூர் முத்து.

உதவி

அழகனார்



நடந்து செல்லும் வழியிலே
நழுவி விழுந்த ஆணிகள்

கடந்து போகும் மக்களின்
காலில் தைக்க நேரலாம்.

குதிரை, மாட்டு வண்டிகள்
குதித்து ஓடும் போதிலே,
அதிர்ந்து வீழும் இலாடமும்
ஆணி போலக் குத்துமே!

குச்சி கல்லும் முட்களும்
குத்திக் காயம் செய்வதால்
அச்சம் தருமே. அவைகளை
அகற்றி உதவி செய்யலாம்.

தெருவில் கிடக்கும் அவைகளைத்
திரட்டி ஒன்று சேர்ப்பதும்
அருமை யான உதவியாம்.
ஆர்வ மோடு செய்குவீர்!

கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை - 600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து



பள்ளியில் நடந்தது!

குடியரசுத் தலைவரிடம் பரிசு பெற்ற குளித்தலை மாணவன்!

நான் குளித்தலை அரசினர் மேல் நிலைப் பள்ளியில் படிக்கிறேன். இப் பள்ளியில் 10-ம் வகுப்பில் டி. வி. பாலகிருஷ்ணன் என்ற மாணவன் படிக்கிறான்.

கடந்த 1983-ஆம் ஆண்டு ''உலக செய்தித் தொடர்பு ஆண்டாக'' (International Communication Year) உலகமெங்கும் கொண்டாடப் பட்டது. அது தொடர்பாக உயர் நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு 'அறிவியல் கருத்தரங்கு' ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் முதலில் மாவட்ட அளவு, அதன்பின் மாநில அளவு, இறுதியில் தேசிய அளவு என்று படிப் படியாக மூன்று மட்டங்களில் அறிவியல் கருத்துரைப் போட்டி அரசினரால் அறிவிக்கப்பட்டது. அக்கருத்துரையின் தலைப்பாக ''செய்தித் தொடர்பு — இன்றும், நாளையும்'', (Communication-Today & Tomorrow) என்ற தலைப்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. எல். ஆல்பர்ட் திரவியம், எம்.ஏ., எம். எட்., அவர்கள் இம்மாதிரியான போட்டிகளில் எங்களது பள்ளி மாணவர்கள் முன் நிற்க வேண்டுமென்ற பேரவாக் கொண்டவர்கள். ஆகவே, அவர் மாணவன் பாலகிருஷ்ணனை இந்தப் போட்டியில் கலந்து கொள்ள ஊக்கம் கொடுத்து ஈடுபடச் செய்தார்.

கல்வித் துறையினரால் நடத்தப் பட்ட மாவட்ட அளவிலான கருத்தரங்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 20.7.1983-ல் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் இம்மாவட்டத்தைச் சேர்ந்த பல பள்ளி மாணவ மாணவிகள் கலந்துகொண்டு கருத்துரையாற்றியதில், அவர்களுடன் போட்டியிட்ட எங்கள் பள்ளி மாணவன் பாலகிருஷ்ணன் முதற்பரிசு பெற்றதாக நடுவர்களால் அறிவிக்கப் பட்டான். திருச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு. இராதாகிருட்டிணன் அவர்களிடமிருந்து ''மாவட்ட முதல் மாணவன்'' என்ற இதற்கான சான்றிதழையும் பரிசினையும் பெற்றான்.

பின், இரண்டாவது கட்டமான தமிழ்நாடு கல்வித் துறையும், பெங்களூர் விஸ்வேஸ்வரய்யா இன்டஸ்டிரியல் டெக்னலாஜிகல் மியூஸியமும் இணைந்து 23.8.83-ல் சென்னையில் நடத்திய ''மாநிலக் கருத்தரங்கில்'' நமது மாநிலத்தைச் சேர்ந்த அனைத்து மாவட்ட வெற்றியாளர்களும் போட்டியிட்டனர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட (மாவட்ட வெற்றியாளர்) பாலகிருஷ்ணன் செய்தித் தொடர்பான (1) வானொலி ஒலிபரப்பு (2) விண்வெளி மண்டலங்களும் அதில் ஒலி அலைகளின் பிரதிபலிப்பும் (3) செயற்கைக் கோள்களின் வகைகள், (4) மைக்ரோ அலைகளும் செய்தித் தொடர்பில் அதன் பயன்களும் (5) செய்தித் தொடர்பில் வருங்கால முன்னேற்றம் குறித்து உரையாற்றியதில் அக்கருத்தரங்கில் மாநில முதல் மாணவனாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டான். கல்வித்துறைச் செயலர் திரு. டி. டி. சுந்தர்ராஜ், ஐ. ஏ. எஸ்., அவர்களால் பாலகிருஷ்ணனுக்கு ''மாநில முதல் மாணவன்'' என்ற அத்தாட்சியும் பரிசும் வழங்கப்பட்டுள்ளன.

மாநில முதற்பரிசு பெற்ற மாணவ மாணவிகள் பங்கேற்பதற்காக மத்திய அரசினைச் சேர்ந்த கல்கத்தா நேஷனல் கவுன்ஸில் ஆப் சயன்ஸ் மியூஸியம்ஸ் அவர்களால் 5.10.83-ல் புதுடில்லியில் தேசிய கருத்தரங்கு நடத்தியது. யூனியன் பிரதேசம் உட்பட நமது நாடெங்கிலுமாக மாவட்ட, மாநில அளவு கருத்தரங்குகளில் மொத்தம் 1,50,000 மாணவ மாணவிகள் கலந்து கொண்டதில்

31 மாணவ மாணவிகள் மட்டுமே இந்தத் தேசியக் கருத்தரங்கில் பங்கேற்கும் வாய்ப்பினை (மாநில முதல் பரிசு பெற்றதனால்) பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டின் ஒரே மாணவனாக எங்கள் பள்ளி மாணவன் புதுடில்லியில் தேசியக் கருத்தரங்கில் பங்கேற்று, செய்தித் தொடர்பின் முன்னேற்றம் குறித்து விளக்கப் படங்கள், மாடல்களுடன் விளக்கிக் கருத்துரையாற்றினான். அதனைப் பாராட்டி நம் நாட்டு ஜனாதிபதி மேதகு ஜெயில் சிங் அவர்கள் திரு. பாலகிருஷ்ணனுக்குப் பரிசு வழங்கியுள்ளார்: மதிப்பு வாய்ந்த பல அறிவியல் புத்தகங்களும், சான்றிதழும், 'கிட்லைம்'(பள்ளிப்படிப்பிற்குத் தேவையான சாதனம்) அவனுக்குப் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அவர்களிடம் பரிசுபெறும் பேறு பெற்ற இம்மாணவனால் அவனுக்கும், கிராமாந்திரப் பகுதியில் அமையப்பெற்றுள்ள எங்கள் பள்ளிக்கும், அவனை இந்த அளவுக்கு ஊக்குவித்து, புதுடில்லி வரை போட்டியிட வகை செய்த எங்கள் தலைமை ஆசிரியர் அவர்களுக்கும், தக்க உதவியும் அறிவுரையும் வழங்கி அறிவியலில் இப்போட்டியில் முன்னிலைப்படுத்திய அறிவியல் மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும், மாணவர்களாகிய எங்கள் அனைவருக்கும் பெருமை அளிக்கப்பட்டுள்ளது. இம்மாணவனின் தந்தை திரு. டி. எஸ். வெங்கட்ராமன் என்பவர் வருவாய்த்துறையில் குளித்தலையில் டிப்டி தாசில்தாராகப் பணிபுரிகிறார். இந்த மாணவன் எங்கள் பள்ளி மாணவத் துணைத் தலைவன். தேசிய மாணவர் படையில் கார்ப்பரல் (CPL) பதவிக்கு உயர்ந்தவன். பள்ளி ஜூனியர் செஞ்சிலுவைச் சங்கத் தலைவனாகப் பணிபுரிந்தவன். மாவட்ட அளவில் பல விளையாட்டுப்போட்டிகளில் முதல், இரண்டாவது பரிசு பெற்றவன். தேசியத் திறனாய்வுத் தேர்வில் வெற்றி பெற்று (National Talent Scholarship) உதவித்தொகை பெறுகிறான்.

கோகுலம் சார்பில் அவனை மேன்மேலும் வெற்றிபெற்று, சிறந்து விளங்க வாழ்த்துவோம்.

—கே. கோவிந்தராஜன்.

அன்புத் தொண்டுக்கு ஆளுநர் பரிசு

திருவரங்கத்திலுள்ள எங்களது ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 'நாட்டு நலப் பணித் திட்டம்' (N.S.S.) துவங்கிச் சில ஆண்டுகளே ஆகின்றன. அதற்குள், எந்த ஒரு பள்ளியிலும் அத்தொண்டினால் ஏற்படாத ஒரு அரிய பெரிய சாதனையை – பெருமையை எங்கள் பள்ளி கண்டது. N.S.S. மாணவர்கள் என்றால், வெண்மை உடை அணிந்து கடைவீதிகளில் வரிசையாக நின்று கொண்டிருப்பது தான் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால்,



உண்மையான ஒரு தொண்டை எங்கள் பள்ளியில் படித்த என். சீதாராமன் என்ற மாணவன் செய்தான்.

ஊனமுற்றோர் ஆண்டையொட்டி நடந்த எம் பள்ளி விழாவில் ஊனமுற்றவர்களுக்குக் கால்களில் அதற்கென்ற உறுப்புக்கள் பொருத்தப்பட்டன. அங்கு ஒரு தொழுநோயாளியும் இருந்தார். வேகமாக நடந்து வந்த வேலைகள் சற்றே தடைப்பட்டன. 'எப்படி இவருக்குப் பொருத்துவது?' என்ற தயக்கம் அனைவரிடமும் இருந்தது. அப்பொழுது அங்கிருந்தம் அனைவரும் வியப்படையும் வகையில் சீதாராமன், தானே அப்பெரு வியாதிக்காரரைத் தூக்கிவந்து அனைவர் முன்னிலையிலும் பணிபுரிந்தான். அவனும் ஒரு N. S. S. மாணவன்! சமுதாயத் தொண்டையே தன் குறிக்கோளாகக் கொண்டவன். அதைப் போற்றி, N.S.S. மாணவர்களுக்குத் தமிழ்நாடு ஆளுநரால் கேடயம் சிறப்புப் பரிசாக வழங்கப்பட்டது.

இவ்வாறு ஒவ்வொரு மாணவனும் தத்தம் கடமைகளிலிருந்து வழுவாமல் இருந்தால், நாடு நலம் பெறும். இது வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நிகழ்ச்சி. எங்கள் அனைவருக்கும் பெருமையாகவும் இருந்தது.

—எ. என். ரங்கனாதன்

விஞ்ஞான விளையாட்டு

ஆர். பி. சாரதி

தொடர் வண்டியில் பயணம் செய்யும் போது கைகாட்டி மரம் பார்த்திருக்கிறீர்களா?

சென்னை போன்ற மின் ரயில் ஓடும் இடங்களில் பெருஞ்சாலைகளில் இருப்பது போல் பச்சை, ஆரஞ்சு, சிவப்பு விளக்கு எரியும் ஏற்பாடுகளே இருக்கும்.

ஆனால், இந்த நகர்ப் புறப் பகுதிகளைத் தாண்டி விட்டால், ரயில் வண்டி போக அனுமதி கொடுப்பதே இந்தக் கைகாட்டி மரங்கள்தாம்!

இவை எப்படி வேலை செய்கின்றன?

விளையாட்டாக ஒரு மாதிரிக் கைகாட்டி மரம் செய்து பார்ப்போமா?

வெறுங்கை முழம் போடுமா?

தேவையான பொருட்களைத் தேடிச் சேர்த்துக் கொள்வோம்!

1.5 வோல்ட் செல் – 1

'புஷ்' பட்டன் – 1

பாதுகாக்கப்பட்ட மின் கம்பித் துண்டு–2 (10 செ. மீ.)

7.5 × 5 × 2 க. செ.மீ. அளவுள்ள மரக்கட்டை – 1

20 செ. மீ. நீள மரத்துண்டு அல்லது சட்டம்,

15 செ. மீ. உறுதியான நூல்

2.5 செ. மீ. ஆணி – 3

3.8 செ. மீ. ஆணி (பெரியது) –1,

10 × .7க.செ.மீ. தகரத் துண்டு–1


4 × .75 க. செ.மீ. கார்ட் போர்ட் அட்டை – 1.

மரக்கட்டையின் ஒருபுறத்தில் 20 செ. மீ. மரத்துண்டு அல்லது சட்டத்தைக் கொடி மரம் போல் நிற்கும் படி ஆணியடித்து நிறுத்துவோம்.

அதன் உச்சிக்குச் சற்றுக் கீழே 4 × .75 க. செ. மீ. கார்ட் போர்டு அட்டையைக் கொடி மரத்தில் படத்தில் காட்டியது போல், நூல் கட்டி (இழுக்க இடம் விட்டபடி) ஆணியடித்துப் பொருத்தி விட்டால் கைகாட்டி மரம் தயார்!

இதை இயக்க வேண்டுமே!

முதலில் கையால் நேராகவும், சாய்ந்தும் வரும்படி அசைந்துப் பார்த்துக் கொள்வோம்!



கனசதுரக் கட்டையின் மேற்பரப்பில் கைகாட்டி மரத்துக்கு எதிர்ப்புறத்துக்கு அருகே 3.8 செ. மீ. பெரிய ஆணியை மெல்ல அடித்து, உறுதியாக நிறுத்திக் கொள்ளவேண்டும். கட்டை உடைந்து விடப்போகிறது. ஜாக்கிரதை!

அந்த ஆணி மீது தகரம் பொருந்தும் தூரத்தில் அதாவது கைகாட்டி மரம் பொருந்தியது போல், எதிர்ப்புறத்தில் 10 × .7 ச. செ. மீ. தகரத்துண்டின் ஒரு புறத்தை லேசாக வளைத்தாற் போல் வைத்து ஆணியடித்துப் பொருத்திவிட வேண்டும்.

இன்னும் செய்ய வேண்டியது மின் இணைப்புத்தான்.. கயிற்றிணைப்புத்தான்!

மின் கம்பிகள் இரண்டினுள் ஒன்று செல்லின் ஒரு முனையையும், ஆணியின் தலைப்பகுதியையும் இணைக்கட்டும். மின் கம்பி முனைகள் சீவப்பட்டிருக்க வேண்டும் என்று தெரியாதா என்ன?

இன்னொரு மின் கம்பி செல்லின் மறுமுனையிலிருந்து புஷ் பட்டன் வழியாக ஆணியின் மரப்பலகை மீது அடித்துள்ள அடிப்புறத்தை அடைந்து சுற்றி இணைகிறது.

தகரத் தகட்டையும், கைகாட்டி அட்டையையும் உறுதியான நூலினால் இணைக்க வேண்டும். அட்டையிலும், தகட்டிலும் ஓட்டையிட்டு முனைகளில் உறுதியான தடைகளை ஏற்பாடு செய்து கொண்டு நூல் வெளியே வராமலும், தொய்வில்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். எப்படியோ அட்டையும், தகடும் உறுதியான நூலால் தொய்வின்றி இணைய வேண்டும். அதை நீங்கள் எப்படிச் செய்தாலும் சரி!

எல்லாம் தயார்!

புஷ்பட்டனை விரலால் அழுத்துங்கள்.

என்ன நடக்கிறது?

மின்சாரம் பாய்கிறது!

இரும்பு ஆணி காந்தமாகிறது!

ஆணி காந்தமாகும் போது, மேலே அருகில் உள்ள தகடு இழுக்கப்படுகிறது...

தகடு ஆணியை நோக்கிக் கீழே வரும்போது நூலும் இழுக்கப்படுகிறது.

நூல் இழுக்கப்படுவதால் கைகாட்டி அட்டை உயர்கிறது... நேராக நிற்கிறது... பட்டனிலிருந்து விரல் விடுபட்டால் மின்னோட்டம் ஆணிக்கு வருவது தடைப்பட்டு, காந்த சக்தியையும் இழக்கிறது. தகடும் விடுபடுகிறது... கைகாட்டியும் கீழிறங்கி விடுகிறது.

விளையாட்டு ரயில் வைத்து வேடிக்கை காட்டும் போது, குழந்தைகள் மகிழப் பெரிய தம்பி, தங்கையர் கைகாட்டி மரம் செய்து ஏற்றி, இறக்கலாமே!

நாசிக் தமிழரின் நன்றி

அன்புடையீர்,

தங்கள் 'கோகுலம்' இதழில் வெளியான 'வீண் பெருமை — வேதனை' நாடகம், 'அப்புசாமி, குப்புசாமி', பா. ராகவன் என்ற சிறுவன் எழுதிய அய்யாசாமி — அழகுசாமி மற்றும் பாடல்கள் சிலவற்றை, சென்ற ஜனவரி 26-ம் தேதி இங்கு ஓஜாரில் நடைபெற்ற 'பொங்கல் விழாக் குழு'வின் கலைநிகழ்ச்சியின்போது மேடையேற்றினோம். தமிழர்கள் மட்டுமன்றி, பல்வேறு மொழியினராலும் அவை பாராட்டப் பெற்றன. ''இந்தப் பாராட்டுக்கள் அனைத்தும் 'கோகுலம்' இதழுக்கும், அதன் கௌரவ ஆசிரியர் அவர்களுக்கும் உரியவை'', என்று நன்றியறிதலோடு எங்கள் கலைநிகழ்ச்சி அமைப்பாளர் அறிவித்தார் என்பதையும் மகிழ்ச்சியோடும், நன்றியோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

—வி. பாலகிருஷ்ணன்.

பொருளாளர், பொங்கல் விழாக் குழு,
ஓஜார், நாசிக் மாவட்டம்.

மேஜை மேல் இரு விளையாட்டு

இரண்டு வெள்ளைப் பந்துகளும் ஒரு சிவப்புப் பந்தும் பில்லியர்ட்ஸ் ஆட்டத்துக்குப் பயன்படுகின்றன. இந்த மூன்று பந்து விளையாட்டு பிரிட்டனில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பரவின. பிரிட்டிஷ் போர் வீரர்களும் காலனிகளை நிர்வகித்த அதிகாரிகளும், இந்த விளையாட்டைப் பிரபலப்படுத்தினர். ராணுவச் சமையல் கூடங்களில் பில்லியர்ட்ஸ் விளையாட்டு மேஜையும் அலங்கரிக்கும். இதன் பிறகு சர்வ கலா சாலைகளிலும் பள்ளிகளிலும் பில்லியர்ட்ஸ் பரவியது.

ஓர் அதிசயம் இரண்டாம் ஜார்ஜ் மன்னரின் ஆட்சியில் 1727–லிருந்து 1760 வரை பில்லியர்ட்ஸ் ஆட்டம் அங்கீகரிக்கப்படாத சட்டவிரோதமான விளையாட்டு என்று அறிவிக்கப்பட்டிருந்தது. பொது அரங்குகளில் பில்லியர்ட்ஸ் மேஜையை வைத்தால் பத்து பவுன் அபராதம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது!

பில்லியர்ட்ஸ் ஆட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் பிராபல்யமாயிற்று. 1825–ஆம் ஆண்டில் ஜான் கார் பிரிட்டிஷ் தீவுகளில் முதல் அங்கீகரிக்கப்பட்ட சாம்பியன். 1885ம் ஆண்டு பில்லியர்ட்ஸ் சங்கம் நிறுவப்பட்டு, ஆட்டத்துக்கான சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டன.

1760–ம் ஆண்டில் பில்லியர்ட்ஸ் ஆடுவதற்கான குச்சிகளில் தட்டையான 'முடிவு' இருக்கும். இதன் பிறகு குச்சிகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்ட பந்துகள் யானையின் தந்தத்திலானவை.

பல விளையாட்டுக்களைப் போலவே பில்லியர்ட்ஸ் ஆட்டத்தில் ஐரோப்பனல் ஆட்டக்காரர்கள் அமெச்சூர்களை மிஞ்சி நின்றார்கள். ஐரோப்பனல் ஆட்டக்காரர்களுக்குப் பல மணி நேரம் பயிற்சி செய்வதற்கு அவகாசமிருந்தது.

பில்லியர்ட்ஸ் பெண்களை அவ்வளவாகக் கவராவிட்டாலும், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால் மௌரீன் பெயண்டனும், வீரா செல்வியும் தலைசிறந்து விளங்கினார்கள்.

1930–ஆம் ஆண்டில் ஸ்நூக்கர் என்னும் ஆட்டம் பில்லியர்ட்ஸுக்குப் போட்டியாக எழுந்தது. ஜோடேவிஸ் என்னும் பில்லியர்ட்ஸ் ஆட்டக்காரர் இந்த ஸ்னூக்கரின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

பிரிட்டனிலுள்ள சானல் தீவுகளைச் சேர்ந்த நார்மன் டே 1974–ஆம் வருஷம் பதினைந்து நிமிஷங்களில் 14130 எண்ணிக்கை எடுத்து உலக ரிகார்டு கண்டார்!

பந்தயங்களை ரிபரி நிர்வகிப்பார். இவருக்கு உதவியாக எண்ணிக்கைகளைப் பதிவு செய்ய மார்க்கர் இருப்பார். ஒரு பில்லியர்ட்ஸ் விளையாட்டு குறிப்பிட்ட கால கட்டத்துக்கென்று ஆடுவதுண்டு. 100, 500, 1000 என்ற எண்ணிக்கைகளுக்கு ஆடி விடுவதும் உண்டு. எந்த ஆட்டக்காரர் அதிக எண்ணிக்கை எடுக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

'D' என்ற இடத்திலிருந்து ஆட்டக்காரர் மேஜையில் பந்தை ஆடுவார். அடி குஷனுக்கு எந்த ஆட்டக்காரரின் பந்து அருகிலிருக்கிறதோ அவருக்கு 'ஆட்டம்' கிட்டும். குறிப்பிட்ட இடத்தில் சிவப்புப் பந்து வைக்கப்பட்டு முதல் ஆட்டக்காரர் தம் Cue பந்தை 'D' பகுதியில் ஏதாவது இடத்தில் வைத்து முதல் 'ஷாட்' அடிப்பார். தடைகளை மீறி எண்ணிக்கை எடுப்பது ஆட்டக்காரரின் சாமர்த்தியம்! எதிரிக்கும் பல

கண்மணி

தடைகளை வைத்து எண்ணிக்கை எடுக்க விடாமல் செய்வதுண்டு.

ஆட்டக்காரர் மேஜையில் ஆடிக் கொண்டிருக்கும்போது எதிரி ஆட்டக்காரர் ஆடுபவரின் கவனத்தைக் கலைப்பதில் ஈடுபடக் கூடாது.

ஒவ்வொரு ஷாட் போடும் போதும் ஆட்டக்காரருக்கு மற்றொரு தடவை



ஆடுவதற்கான தகுதி உண்டு. ஸ்கோர் போடாவிட்டால் அவர் தம் ஆட்டத்தை இழப்பார். இந்த இழக்கும் தருணத்தை 'Break' என்று குறிப்பிடுவர். இதுவரை எடுத்த எண்ணிக்கையைக் குறித்துக் கொள்வார்கள்.

ஆடுபவர் 'பௌல்' செய்தால் தமது ஆட்டத் தகுதியை இழப்பார். பில்லியர்ட்ஸ் குச்சி மூன்று அடிக்குக் குறையாமல் இருக்கும். பந்துகள் மூன்றும் ஒரே அளவில், எடையில் இருக்கும். Cue பந்து வெள்ளைப் பந்தைத் தட்டிக் குழியில் செலுத்தி விட்டால் இரண்டு பாயிண்டுகள் கிடைக்கும்.

பில்லியர்ட்ஸில் பந்து மற்றப் பந்துகளைத் தட்டினால் கானன் (Cannon) என்று குறிப்பிடுகிறார்கள். இதற்கு இரண்டு பாயிண்டுகள் உண்டு.

எதிரி ஆட்டக்காரருக்கும் ஆடுபவர், பாயிண்டு தர வேண்டிய நிர்ப்பந்தங்களும் உண்டு. ஆடுபவரின் 'Cue' பந்து மற்றொரு பந்தினைத் தாக்கத் தவறினால் ஒரு பாயிண்ட்! 'Cue' பந்து தவறிப் போய்க் குழிக்குள் விழுந்து விட்டால் மூன்று பாயிண்ட்களை இழக்க நேரிடும்.


ஸ்னூக்கரும் பில்லியர்ட்ஸில் ஒரு கிளை விளையாட்டு. பதினைந்து, சிவப்பு பந்துகள், ஆறு வண்ணப் பந்துகள், ஒரு வெள்ளை 'Cue' பந்து இந்த விளையாட்டுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆட்டத்தை இருவர், குழுக்கள் ஆடுவது வழக்கம்.

சிவப்புப் பந்துகள் ஒரு முக்கோணத்தில் வைக்கப்பட்டு ஆட்டம் தொடங்கப்படும்.

'பூவா, தலையா' போட்டு யார் முதலில் ஆடுவது என்று முடிவு செய்வார்கள். ஆட்டம், முதலில் ஆட்டக்காரர் Cue பந்தை ' 'D பகுதியில் வைத்து சிவப்புப் பந்தோடு ஆட முயல்வது. சிவப்புப் பந்து குழியில் விழுந்தால் பிறகு மற்றவண்ணப் பந்துகளைக் குழியில் தள்ள முயலுவார். எண்ணிக்கைகளைப் பெருக்கிக் கொண்டே போவார் திறமைசாலி.

நம் இந்திய நாட்டில் மைக்கேல் பெரைரா பில்லியர்ட்ஸ் சாம்பியன், இவருக்குச் சமீபத்தில் இந்திய அரசு 'பத்ம பூஷண்' பட்டம் அளித்துக் கௌரவித்துள்ளது! இவருக்குப் பில்லியர்ட்ஸுக்குக் கிரிக்கெட்டைப்போல் பிராபல்யமில்லையே என்ற கவலை நிறைய உண்டு. சர்வதேசப் போட்டிகளில் பல சாதனைகளைக் கண்டவர் மைக்கேல் பெரைரா.

நேரில் பார்த்து ரசித்தவர்களுக்குப் பில்லியர்ட்ஸ், ஸ்னூக்கர் சொகுசான பொழுதுபோக்காகும்.



ஒரு நாள் சிறை வாசம்

'சுமதி'

“லாரிலேச் கருட்டி மடக்கி வச்சிக் கிட்டுச் சும்மா குந்தியிரு...'' என்று கூறி, — போலீஸ்காரர் அறைக்கதவை வெளியே பூட்டிக் கொண்டு போய் விட்டார்.

முத்துவுக்கு ஆத்திரமும், அழுகையும் பொத்துக் கொண்டு வந்தது. பற்களால் உதட்டைக் கடித்துக் கொள்வதன் மூலம் அடக்கிக் கொண்டான்.

நேரம் நகர்ந்து கொண்டேயிருந்தது.

முத்துவுக்குப் பிடிக்காத விஷயம் ஒன்று உண்டென்றல் அது இப்படிச் சும்மா ஓர் இடத்தில் உட்கார்ந்திருப்பதுதான். எழுந்து அறைக்குள் சுற்றிச் சுற்றி வந்தான். எரிச்சலாக இருந்தது அவனுக்கு. துருதுரு என்று எந்நேரமும் ஏதேனும் குறும்பு செய்து கொண்டிருக்கக் கூடிய ஒருவனை இப்படியா ஒரு சின்னஞ்சிறு அறைக்குள் போட்டுப் பூட்டி வைப்பார்கள்....? முதலில் போலீஸ்காரர் மீது கோபம் வந்தது அவனுக்கு. பிறகு தனக்குத் தண்டனை வழங்கிய 'நடமாடும் நீதி மன்றத்தி'லிருந்த பெரிய மனிதர்மீது ரொம்பக் கோபம் வந்தது. பற்களை நறநறவென்று கடித்தான். ஊஹூம்.. அவனுடைய கோபம் குறையவே இல்லை, விஷயம் இதுதான்.

இன்று முத்துவுக்கு விடுமுறையாக இருந்ததால் வீட்டில் அவனுக்குப் பொழுதே போகவில்லை. பாடப்புத்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு படித்தால் பொழுதும் போய்விடும். போகிற பொழுது பயனுள்ளதாகவும் போகும். தேர்வுகளில் மதிப்பெண்களும் கூடுதலாக வாங்கலாம். ஆனல், முத்து அதைச் செய்யவில்லை. பள்ளி மாணவர்களில் பெரும்பாலோர் செய்வது போல் அவனும் பரீட்சைக்கு இரண்டு தினங்களுக்கு முன்புதான் புத்தகங்களையே தொடுவான்.

எங்கேயாவது ஜாலியாக வெளியே போய் வரலாம் போலிருந்தது அவனுக்கு. அம்மாவிடம் போய்க் கேட்டான்.

''எங்கேடா போக முடியும்? எங்கே போய் வருவதாக இருந்தாலும் பத்துப் பதினைந்து ரூபாய் செலவாகும். மாதக் கடைசி. காசுக்கு எங்கே போவது?'' என்று அம்மா கையை விரித்து விட்டாள்.

வேறு வழியில்லை பக்கத்திலிருந்த கார்பரேஷன் குழந்தைகள் விளையாட்டுச் சாதனங்களும் உடைந்து போய் ஒன்றுக்கும் உதவாமல் இருந்தன. அதில் இரண்டு எருமைமாடுகள் கட்டப்பட்டிருந்தன. அவை தம்மைச் சுற்றி அசுத்தப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தன. அது போதாது என்று விளையாட்டுத் திடலின் ஒரு பகுதியைச் சில குழந்தைகள் கழிவிடமாக உபயோகப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

முத்து முகத்தைச் சுளித்துக் கொண்டு நகர்ந்தான்.

எதிரில் அவனுடைய நண்பர்குழாம் கைநிரம்பக் கற்களும் குச்சிகளும் கயிறுமாக வந்து கொண்டிருந்தது.

''எங்கேடா கிளம்பிட்டீங்க?'' — என்று கேட்டான் முத்து.

''ஓணன் வேட்டைக்கு முத்து. நீயும் வர்றியா?'' என்று கேட்டான் சோமு.

''ஓணானைப் புடிச்சு என்னடா செய்யப் போறீங்க?'' என்று கேட்டான் முத்து.

''ராமர் இலங்கைக்கு அணை கட்டினப்போ ஓணான் அவருக்கு எந்த உதவியும் செய்யலியாம்டா. கேலி செஞ்சுதாம். அதனாலே ஓணானை எங்கே பாத்தாலும் அடிச்சு நொறுக்கிடணும்டா...'' என்று கூறினான் முருகன்.

முத்துவுக்கும் குஷி பிறந்துவிட்டது. அவர்களுடன் கிளம்பினான்.

அன்று அவர்களுடைய திருவிளையாட்டினால் ஆறு ஓணான்கள் அடிபட்டுச் செத்தன. ஏழாவது ஓணானைத் தேடி அவர்கள் அலைந்த போது முத்துவின் கண்களில் குப்பைத் தொட்டிக்கருகில் ஒட்டிக் கொண்டிருந்த சின்னஞ்சிறு பூனைக்குட்டி தட்டுப்பட்டுவிட்டது. பாய்ந்துசென்று அதைக் கையில் எடுத்துக் கொண்டான்.

''தூக்கிப் போடுடா'' என்றான் முருகன்.

தூக்கிப் போட்டான் முத்து. பூனைக்குட்டி கைதவறிக் கீழே விழுந்து கத்தியது. அதைக் காலால் ஓர் உதை விட்டான் முருகன். அது முத்துவிடம் போய் விழுந்தது. அவன் அதைச் சோமுவிடம் உதைத்துத் தள்ளினான். அவன் ராஜுவிடமும் தள்ளினான். இப்படியே அவர்கள் அந்தப் பூனைக்குட்டியைக் கால் பந்தாகக் கருதி அரை மணி நேரம் விளையாடினார்கள். இதற்குள் அந்தப் பூனைக்குட்டி குற்றுயிராகிவிட்டது. அவர்களுக்கும் அந்த விளையாட்டு சலித்துப் போய் விடவே முத்து அதைத் தூக்கி நடுரோட்டில் எறிந்தான். அச்சமயம் அங்கு ஒரு லாரி வேகமாக வரவே அதன் சக்கரத்தில் அரைபட்டுச் சட்டினியாகியது பூனைக்குட்டி.



ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டது போல் எல்லோரும் கைகொட்டிச் சிரித்தார்கள். பிறகு, அடுத்த தெருவுக்குள் நுழைந்தார்கள். சோமு ஓர் ஆட்டுக்குட்டியைக் கண்டுவிட்டான்.

நண்பர்கள் நாலா பக்கங்களிலும் அந்த ஆட்டுக் குட்டியைச் சூழ்ந்து கொண்டார்கள். இவர்களைப் பார்த்ததும் அந்த ஆட்டுக் குட்டி பயந்து அப்படியும், இப்படியும் ஓடியது. விடுவார்களா..? மற்றவர்கள் ஆட்டுக் குட்டியை வளைத்துப் பிடித்துக் கொள்ள, முத்து தன் கையிலிருந்த கயிற்றினால் ஆட்டுக் குட்டியின் கழுத்தில் சுருக்கிட்டுப் பிடித்துக் கொண்டு நடந்தான். அந்த ஆட்டுக்குட்டியால் நடக்க முடியவில்லை.' முத்துவோ இரக்கமில்லாமல் இழுத்தான் வேகமாக.

சோமு தன் கையிலிருந்த கம்புக் குச்சியால் ஆட்டுக் குட்டியின் கால்களில் 'சுரீர்' என்று ஓர் அடி வைத்து 'நடடா, ராஜா... நடடா, நான் பெத்த மகனே நடடா...'' என்று பாடலானான்.

''இன்னும் நாலு கொடுடா...'' என்றபடி ஆட்டுக்குட்டியைத் தரதர வென்று இழுத்துச் சென்றான் முத்து.

வலி பொறுக்க முடியாமல் ஆட்டுக் குட்டி 'மே, மே', என்று கத்தியது.

''டேய்... ஆட்டுக் குட்டியைக் கத்தவுடாதீங்கடா...! அதன் சொந்தக்காரங்க காதுலே விழுந்தா வம்பு. கொன்னுடுவாங்க'' என்று எச்சரித்தான் ராஜு.

''ஆமாண்டா முத்து. ஆட்டுக்குட்டி கத்தினால் ஆபத்துடா...'' என்று ஒத்துப் பாடினான் முருகன்.

''என்கிட்டே யாரும் வாலாட்ட முடியாதுடா...'' என்ற முத்து ஆட்டுக் குட்டியை அப்படியே அலாக்காகத் தன் கையில் தூக்கிக் கொண்டான். ஆட்டுக் குட்டி பயத்தினால் தன் கால்களை 'வதக், வதக்' என்று உதைத்துக் கொண்டு கீழேயிறங்கப் பார்த்தது.

முத்துவுக்குக் கோபம் வந்துவிட்டது. பொத்தென்று தரையில் போட்டான் ஆட்டுக்குட்டியை. சோமுவின் கையிலிருந்த கம்புக் குச்சியைப் பிடுங்கி ஆட்டுக் குட்டியைச் 'சுரீர், சுரீர்'. என்று அடித்தான்.

ஆட்டுக்குட்டி வலி பொறுக்க முடியாமல் அலறியது.

இச்சமயம் அவர்கள் அருகில் ஒரு 'வேன்' ஓசைப்படாமல் வந்து நின்றது. அதற்குள்ளேயிருந்து ஒருபோலீஸ்காரர் கீழே குதித்து இவர்களை நோக்கி வந்தார்.

அவ்வளவுதான், ராஜு, சோமு, முருகன் மூவரும் அங்கிருந்து சிட்டாகப் பறந்து விட்டார்கள். ஆட்டுக் குட்டியை அடிப்பதிலேயே கவனமாக இருந்த முத்து மட்டும் போலீஸ்காரர் தன்னருகில் வருவதைக் கவனிக்கவில்லை.

''ஏ... பையா, இந்த வாயில்லாச் சீவனைப் போட்டு ஏன் இப்படி அடிச்சு நொறுக்கறே...?'' என்று அதட்டியபடி முத்துவின் கையை இறுகப் பற்றிக் கொண்டார் போலீஸ்காரர்.

முத்துவுக்கு உதறல் எடுத்தது. கையிலிருந்த குச்சி நழுவிக் கீழே விழுந்தது. மிரளமிரள விழித்தான்.

போலீஸ்காரர் முத்துவின் கையைப் பற்றித் தரதரவென்று இழுத்துக் கொண்டு, 'வேன்' அருகில் சென்றார். அதன் கதவுகளைத் திறந்து விட்டு முத்துவை வேனுக்குள்ளே தள்ளினார். பிறகு கதவைத் தாளிட்டார்.

முத்துவுக்கு ரொம்பப் பயமாகப் போய் விட்டது. அழுகை கூட வந்து விட்டது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு 'வேன்' உள்ளே தன் பார்வையை ஓடவிட்டான். அங்கே ஒரு பெரிய நாற்காலியில், ஒரு பெரிய

ஏன் ஓடுகிறார்?

''உங்க தாத்தா அந்த அம்மாவைப் பார்த்துப் பயந்து ஓடுகிறாரே, ஏன்?''

''அந்த அம்மா தான் முதியோர் கல்வி டீச்சர். இரண்டு நாட்களாக எங்க தாத்தா ஸ்கூலுக்கு மட்டம் போட்டுட்டாரு. அதனாலே தான் அவங்களைக் கண்டு பயந்து ஓடுகிறார்.''

—எஸ். தேவாதிராஜன்



நீல வானக் கடலிலே
நிலாப் பிறையாம் படகிலே
தோழ ரோடும் ஏறியே
துடுப்புப் போடப் போகிறேன்.

தோழ ரோடும் கூடியே
துடுப்புப் போடும் போதிலே,
வானச் சுடர்ப் பூக்களை,
வாரி வரப் போகிறேன்!

வானச் சுடர்ப் பூக்களை
வாரிக் கொண்டு வந்ததும்
குன்றில் ஏறிக் கோயிலில்
குமர னுக்குச் சாத்துவேன்!

குன்றில் ஏறிக் கோயிலில்
குமர னுக்குச் சாத்தியே,
என்றும் பிறர்க் குதவிடும்
இனிய மனம் வேண்டுவேன்!

என்றும் பிறர்க் குதவிடும்
இனிய மனம் வாய்த்திடின்,
நரகத் திலும் சொர்க்கத்தை
நான் படைத்துக் காட்டுவேன்!

நரகத்திலும் சொர்க்கத்தை
நான் படைத்துக் காட்டவே,
வரம் எனக்கு வழங்குவான்
வள்ளல் வடி வேலனே!



ரா. பொன்ராசன்

மனிதர் டிப்டாப்பாக உட்கார்ந்திருந்தார்.

அந்தப் பெரியவர் கேட்டார். ''தம்பி. உன் பெயர் என்ன?''

முத்து நடுங்கிக் கொண்டே சொன்னான்: ''முத்து.''

''படிக்கிறாயா...?''

''ம்....''

''எந்த வகுப்பு?''

''ஏழாவது ஸ்டாண்டர்ட்.''

''பிராணிகளைப் பிடித்து இப்படி இம்சை செய்யக் கூடாது. அது பெரிய தப்பு... என்று உனக்குத் தெரியாதா?''

''தெரியும் சார். என் அம்மாவும், அப்பாவும் தினமும் சொல்லுவாங்க.''

''தப்பு என்று தெரிந்தும் கூடச் செய்யலாமா?''

''கூடாது சார்.''

''ஏன் செய்தாய்?''

''சும்மா விளையாட்டுக்குத் தான் சார்.''

''இனிமேல் செய்யக் கூடாது, என்ன?''

''இல்லை சார்.''

''நீ உண்மையை ஒப்புக்கொண்டதால் உனக்கு ஒருநாள் சிறை தண்டனை விதிப்பதோடு நிறுத்திக் கொள்கிறேன். இன்னொரு முறை இதுபோல எந்தப் பிராணியையாவது பிடித்து இம்சை செய்தாயோ... தண்டனை மிக கடுமையாக இருக்கும். ஜாக்கிரதை.'' என்று எச்சரித்தார் அந்தப் பெரிய மனிதர்.

''சார்... சார்... இந்தத்தடவை என்னை விட்டு விடுங்கள் சார். இனி

மேல் இதுமாதிரி தப்புக் காரியம் செய்ய மாட்டேன். சார்... சார்...'' என்று கெஞ்சினன் முத்து.

முத்துவின் வேண்டுகோளை அந்தப் பெரிய மனிதர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

'வேன்' நகர்ந்தது.

அடுத்த அரைமணி நேரத்தில் முத்து இந்த அறைக்குக் கொண்டு வந்து விடப்பட்டு விட்டான்.

முத்துவுக்கு அந்தப் பெரிய மனிதரின் மீது கோபம் கோபமாக வந்தது. போயும் போயும் இந்த ஆட்டுக் குட்டியை அடித்ததற்கே இவங்க பிடித்துக் கொண்டு வந்து விட்டார்களே....: அவன் தன் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு எத்தனை ஓணான்களையும் அணில்களையும் பிடித்துக் கல்லால் அடித்துக் கொன்றிருக்கிறன்? எத்தனை மாடுகளின் வாலிலுள்ள மயிர்க் கொத்தில் நெருப்பைப் பற்ற வைத்து வேடிக்கை பார்த்திருக்கிறன்? நாய்க் குட்டிகளையும், பூனைக்குட்டிகளையும் பிடித்து அதன் கால்களை ஒன்ருகச் சேர்த்துக் கட்டித் தலைகீழாகச் சுழற்றியிருக்கிறன்? அதையெல்லாம் இந்தப் பெரிய மனிதர் பார்த்திருந்தால் மாதக் கணக்கில் சிறைத் தண்டனை கொடுத்திருப்பாரோ என்னவோ என்று எண்ணினன்.

அவனுக்குத் தன் நண்பர்களின் மீதும் கோபமுண்டாயிற்று. அவர்கள் தன்னைத் தனியாகப் போலீஸ்காரர்களிடம் மாட்டிக் கொள்ள விட்டு விட்டுச் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டு போய் விட்டதை எண்ணி மனம் வருந்தினன். இனிமேல் இந்த மாதிரி ஆபத்துக்கு உதவாத நண்பர்களுடன் சேரவே கூடாது என்று தீர்மானித்தான். அம்மாவும், அப்பாவும் சொன்னது போல் பிராணிகளைப் பிடித்து இம்சித்த பாவம்தான் தனக்கு இப்படிச் சிறைத் தண்டனை கிடைத்து விட்டதோ என்றும் எண்ணினன். வெகு நேரத்திற்குப் பிறகு சோர்ந்து போய்த் தரையில் படுத்துக் கொண்டு விட்டான். பசி மயக்கமும் சேரவே, சிறிது நேரத்தில் தூங்கியும் போனன்.

பெரிய பெரிய ஓணன்களும், அணில்களும் சேர்ந்து கொண்டு முத்துவைக் கல்லால் அடித்து நொறுக்கின. பல மாடுகள் அவன் தலையில் நெருப்பைப் பற்ற வைத்து வேடிக்கை பார்த்தன. நாய்க்குட்டிகளும் பூனைக் குட்டிகளும் கும்பலாகச் சேர்ந்து கொண்டு அவனைக் கடித்துக் குதறின. அவனுடைய உடம்பின் பல பாகங்களிலிருந்தும் இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. ஆட்டுக் குட்டிகள் சில அவனைக் கம்புக் குச்சியால் 'சுரீர், சுரீர்' என்று அடித்து நொறுக்கின. வலி பொறுக்க முடியாமல் 'வீல். வீல்.' என்று கத்தினன் முத்து.

''என்ன தம்பி: கனவு கண்டியா?.. வா, வெளியே...'' என்று கூறிக் கதவைத்திறந்து விட்டார் போலீஸ்காரர்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் முத்து. எழுந்து அறைக்கு வெளியே வந்தான். பிறகு வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டுக்குள் நுழைந்ததும் அம்மாவைக் கட்டிக் கொண்டு அழுதான் முத்து.

''போலீஸ்காரங்க உன்னை அடிச்சாங்களா முத்து'' என்று கேட்டாள் அம்மா.

''இல்லையே...'' என்ற முத்து ஓடிப் போய்த் தாழ்வாரத்தில் மாட்டியிருந்த கிளிக் கூண்டை எடுத்துத் திறந்தான். அதிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன்பு அவன் பிடித்து அடைத்து வைத்திருந்த பச்சைக்கிளி உற்சாகமாகப் பறந்தோடியது தோட்டத்தை நோக்கி.

முத்துவின் அப்பா இதைப்பார்த்து விட்டு நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டார். நெருப்புப் பெட்டிக்குள் சிறைப் பட்டிருக்கும் தும்பிகளுக்கும் விடுதலை கிடைத்து விடுமே!

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள் முருகேசன் தன் நண்பர் நாராயணனைச் சந்தித்தார்.

''உங்களுக்கு ரொம்ப நன்றி சார். என் மகன் முத்து இப்போது திருந்தி நல்ல பையனுக மாறி விட்டான்...'' என்று கூறினர்.

''பொதுவாக 'நடமாடும் நீதி மன்றத்'தில் இது போன்ற சின்னப் பையன்களையெல்லாம் சும்மா மிரட்டி அனுப்பி விடுவோம். நீங்க ரொம்பவும் கேட்டுக் கொண்டதால் தான் முத்துவுக்கு ஒருநாள் சிறைவாசமல்ல: அறைவாசம் கொடுத்தேன். அவன் திருந்தி விட்டது பற்றி ரொம்ப சந்தோஷம். அவனைப் போன்ற மற்ற பையன்களும் இது போல் திருந்த வேண்டும்...'' என்று சொன்னர் நாராயணன்.

''அதற்கு 'நடமாடும் நீதிமன்றங்'கள் ரொம்ப ரொம்ப அவசியம் சார்!'' என்ருர் முருகேசன்.

மாவட்ட வினா-விடை



ஆர். சித்தம்மாள்

கேள்வி கேட்பவர்: ஆர். சித்தம்மாள்.
பங்குபெறுவோர்: உதயபானு, ரெங்கநாத பாபு, ராஜேஷ் பிரபு.

சித்தம்மாள்: 'கோகுல'த்தில் வெளிவந்த 'கேள்வி நேரம்' பகுதியில் உலக விஷயங்கள் பற்றிய பல செய்திகளைத் தெரிந்து கொண்டோம். ஆனால், இப்போது நான் கேட்கப் போகும் கேள்விகள் எல்லாமே நம் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றியவை. எங்கே, நமது மாவட்டத்தைப் பற்றி எவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்று பார்க்கலாமா?

உதயபானு, ரெங்கநாத பாபு, ராஜேஷ் பிரபு: உம், கேளுங்கள், சொல்கிறோம்.

சித்த: இந்தியாவிலே மிக நீளமான பிராகாரம் உள்ள கோயில், வடநாட்டு இந்துக்கள் அதிகமாக வந்து வழிபடுகிற கோயில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. எங்கே?

உதய: இராமேஸ்வரத்தில்.

சித்த: சரியான விடை. அந்தக் கோயிலைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கும் கற்களை எந்த நாட்டிலிருந்து கொண்டு வந்தார்கள்?.

ரங்க: இலங்கையிலிருந்து.

சித்த: ஆம், இலங்கையிலுள்ள திரிகோணமலையிலிருந்து கொண்டு வந்தார்கள். 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்று தொடங்கும் பாடலைப் பாடிய புலவர் யார்?

உதய: கணியன் பூங்குன்றனார்.

சித்த: சரியான பதில். அவர் பிறந்த ஊர் எது தெரியுமா?

ராஜேஷ்: சிறுகூடற்பட்டி.

சித்த: இல்லை. சிறுகூடற்பட்டியில் பிறந்தவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராயிருந்த கவிஞர் கண்ணதாசன். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே, அவர் பிறந்த ஊரும் கணியன் பூங்குன்றனார் பிறந்த ஊரும் ஒன்றுதான்... என்ன, இன்னுமா தெரியவில்லை?

ரங்க: மகிபாலன்பட்டி.

சித்த: சரியான விடை. நடராஜப் பெருமான் சிதம்பரத்திலே 'அம்பலத்தில் ஆடினார்' என்று நம் புராணங்கள் கூறுகின்றன. அவர் அறையில் ஆடியது எந்த ஊரில்?

உதய: உத்தரகோசமங்கை என்ற ஊர்தானே?

சித்த: ஆம். பிரான்மலை என்ற ஊரின் பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். 'பறம்பு மலை'தான் பிரான்மலையாகி விட்டது. அந்த மலையைச் சுற்றியிருந்த 300 ஊர்களை ஆண்டார், கடையேழு வள்ளல்களில் ஒருவர். அவர் யார்?

ராஜேஷ்: பாரி வள்ளல்.

சித்த: சரியான பதில். இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு சிமெண்டு ஆலைகள் இருக்கின்றன. எங்கெங்கே என்று தெரியுமா?

ரெங்க: ஒன்று துலுக்கப்பட்டியில். இன்னொன்று... ஆலங்குடியில்.

சித்த: ஆம். துலுக்கப்பட்டியை ராமசாமி ராஜா நகர் என்றும் அழைக்கிறார்கள். 1801—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27—ஆம் தேதி நினைவில் வைத்துக் கொள்ளவேண்டிய ஒருநாள். காரணம் என்ன?

மூவரும்: (மௌனம்).

சித்த: ஒருவருக்கும் தெரியாதா? சிவகங்கைச் சீமையை அரசாண்டு, ஆங்கிலேயரை எதிர்த்து வீரமுடன் போர் புரிந்த பெரிய மருது, சின்ன மருது என்ற மருது பாண்டியர்கள் திருப்பத்தூரில் தூக்கில் இடப்பட்ட நாள்தான் அது!... விருதுநகருக்கு முன்பு என்ன பெயர்?

உதய: விருதுப்பட்டி.

சித்த: ஆம், பட்டி நன்கு வளர்ந்து நகரமாகிவிட்டது! காரைக்குடியில் ஆண்டுதோறும் சிறப்பாக ஒரு விழா நடைபெறும். அது எந்த விழா என்று கூற முடியுமா?

ராஜேஷ்: கம்பன் விழா.

சித்த: சரியாகச் சொன்னாய். 'கம்பன் அடிப்பொடி.' என்ற சா. கணேசன் அவர்கள் பல ஆண்டுகளாகக் கம்பன் விழாவை, மிகச் சிறப்பாக நடத்தி வந்தார். இப்போது அவர் இல்லை. ஆனாலும், அவர் தொடங்கிய பணி தொடர்ந்து நன்றாக நடைபெற்று வருகிறது... திருவண்ணாமலையில் வாழ்ந்த ரமண மகரிஷி பிறந்த ஊர் எது?

உதய: திருச்சுழி.

சித்த: சரியான விடை. நம் நாடு விடுதலை பெற்ற பிறகு, இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் தமிழகத்தின் முதல் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் யார்?

உதய: குமாரசாமி ராஜா, காமராஜர்.

சித்த: சரியாகச் சொன்னாய். பொங்கல் சமயத்தில் சிராவயல் என்ற ஊரில் ஒரு விளையாட்டு நடைபெறும். அதைப் பார்க்கப் பல இடங்களிலிருந்தும் வருவார்கள். அது என்ன விளையாட்டு, தெரியுமா?

ராஜேஷ்: மஞ்சி விரட்டு

சித்த: ஆம். கட்டுக்கடங்காமல் பாய்ந்து செல்லும் காளையை அடக்கும் வீரனுக்கு, முன் காலத்தில் பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பார்கள். அந்த விளையாட்டு இப்போதும் நடைபெறுகிறது... அரியக்குடி என்ற ஊரில் வாழ்ந்த ஓர் இசைமேதையின் பெயர் தெரியுமா?

மூவரும்: (மௌனம்).

சித்த: ஒரு குறிப்பு தருகிறேன். அவர் பெயருக்கு முன்னால் அந்த ஊர்ப் பெயர் இருக்கும்.

உதய: இப்போது தெரிந்து விட்டது. அவர் பெயர் அரியக்குடி இராமானுஜ ஐயங்கார்.

சித்த: சரியான விடை. மகாகவி பாரதியார் ஒரே ஒரு சங்கத்தைப் பற்றித்தான் பாடியிருக்கிறார். அந்த பாக்கியம் பெற்ற சங்கம் எது?

மூவரும்: (மௌனம்)

சித்த: தெரியவில்லையா? காரைக்குடியிலுள்ள இந்து மதாபிமான சங்கம்தான் அது ... இராமநாதபுர மாவட்,டத்தையே மூன்றாகப் பிரிக்கப் போவதாகத் தமிழக அரசு அறிவித்திருக்கிறதே, எப்படிப் பிரிக்கப் போகிறார்கள்? பத்திரிகையில் படித்திருப்பீர்களே!

ராஜேஷ்: இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட இராமநாதபுர மாவட்டம், சிவகங்கையைத் தலைநகராகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம், விருதுநகரைத் தலைநகராகக்கொண்ட காமராஜ் மாவட்டம்.

சித்த: அடே, ராஜேஷ் நன்றாக நினைவு வைத்திருக்கிறானே!... மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் நடந்த பல நிகழ்ச்சிகளைப் பல நாடுகளில் அவ்வப்போது பலர் செய்திப் படங்களாக எடுத்து வைத்திருந்தார்கள். அவற்றையெல்லாம் தேடிப் பிடித்து ஒரு டாக்குமெண்டரிப்படம் தயாரித்து 40 வருஷங்களுக்கு முன்பே திரைப்படம் ஆக்கினார் ஒரு பெரியவர். அவர் பெயர்

ஸ்ரீரங்கநாத பாபு



உதயபானு



ராஜேஷ் பிரபு



என்ன? அவரது சொந்த ஊர் எது?

ரெங்க: அவர் பெயர் ஏ. கே. செட்டி யார்... ஊர்ப் பெயர்... தெரிய வில்லையே?!

சித்த: வேறு யாருக்காவது தெரியுமா?

உதய, ராஜேஷ்: (மௌனம்).

சித்த: வள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியார் பிறந்த கோட்டையூர் தான். ஏ. கே. செட்டியாரின் சொந்த ஊர்... பட்டாஸ், தீப் பெட்டி என்றதும் நம் நினைவுக்கு வரும் ஊர் எது?

மூவரும்: சிவகாசி.

சித்த: அடடே! ஒரே சமயத்தில் சரியான விடையை மூவரும் சொல்லி விட்டீர்கள்! கீழக்கரை என்ற ஊரில் பிறந்த வள்ளலை 'செத்தும் கொடுத் தான்.....' என்பார்கள். அவர் யார்?

ராஜேஷ்: சீதக்காதி.

சித்த: ஆம், ஷெய்க் அப்துல் காதர் மரைக்காயர் என்ற பெயர்தான் அப்படி மாறி வந்திருக்கிறது. ஆண்டாள் திருக்கோயில் ஸ்ரீவில்லிப் புத்தூரில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆண்டாள் இயற்றிய நூலுக்குப் பெயர் என்ன?

உதய: திருப்பாவை.

சித்த: சரியான விடை. 'திருப்பாவை' யுடன் 'நாச்சியார் திருமொழி' என்ற பிரபந்தத்தையும் ஆண்டாள் அருளிச் செய்தார்... தனுஷ் கோடியிலிருக்கும் கோயில் பெயர் என்ன?

ரெங்க: இராமநாதசாமி கோயில்.

சித்த: தவறு.

ராஜேஷ்: இராமலிங்கசாமி கோயில்.

சித்த: தனுஷ்கோடியில் எந்தக் கோயி லுமே இல்லை! அது ஒரு தீர்த்தக் கட்டம்தான்!

திருக்குறள் புதிர் - விடை

புதிர்–19

கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து. (490)

ஒரு தொழிலைச் செய்வதற்குத் தகுந்த காலம் வரும் வரை அமைதி யாகக் கொக்கைப்போல் காத்திருக்க வேண்டும். காலம் வந்ததும் கொக்கு இரையைக் கொத்திக் கொள்வது போல, நாமும் எடுத்த செயலைச் சிறிதும் தாமதியாமல் முடிக்க வேண்டும்.

புதிர்–20

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (151)

நிலம், தன்னைத் தோண்டுகிறவனுக்கும் நிற்க இடம் தந்து தாங்கிக் கொள்கிறது. அதுபோலத் தன்னை ஒருவன் இழித்துப் பேசினாலும், அதைத் தாங்கிக் கொள்வது முதன்மையான பொறுமையாகும்.

தொண்டில் சிறந்த இவர்களின் தொட்டில் பெயர்கள் - விடை

1. பரமஹம்சர் — கதாதர் சட்டர்ஜி
2. விவேகானந்தர் — நரேந்திரநாத் தத்தர்
3. வினோபாஜி — விநாயக் நரஹரி பாவே
4. ஜயேந்திர சுவாமிகள் — சுப்பிரமணியம்
5. குன்றக்குடி அடிகளார் — ரங்கநாதன்
6. அன்னை தெரசா — அக்னஸ் கோயின்ஷா பிஜக்ஸ்யூ

கருத்து, ஓவியம்:- சினி

கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

1354. எல்.கே. பாலாஜி, 12, புது அக்ரஹாரத் தெரு, நல்லான்பட்டறை, வேலூர், வ.ஆ. மாவட்டம்.
1355. எஸ். மகராசி, 263, ஹவுசிங் யூனிட், கலெக்டர் பங்களா, சேலம்–8.
1356. வி. ஜீவா, 35–ஏ, திமந்தக்காரத் தெரு, காஞ்சிபுரம்–2.
1357. க. ஸ்ரீதர், 795/1, சிலோன் காலனி ரோடு, சிப்காட், ராணிப்பேட்டை–632 403.
1358. க. இரகு, 58, ரிசர்வ் பாங்க் காலனி, குரோம்பேட்டை, சென்னை–44.
1359. எஸ். சுல்தான் ஜலாலுதீன், ஆர். ஓ. 10, வாயிட்ஸ் காலனி, வாயிட்ஸ் ரோடு, சென்னை–14.
1360. கே. திருநாவுக்கரசு, பிளாட் எண்– 371, கே. கே. நகர், மதுரை–20.
1361. உமா ராமச்சந்திரன், த/பெ. டாக்டர் ஆர். ராமச்சந்திரன், Reader in Maths, அண்ணாமலைநகர் – 608 002.
1362. இ. ராஜாராமன், 51, தெற்கு மாடத் தெரு, ஸ்ரீவைகுண்டம்–628 601.
1363. கோ. கோபிகிருஷ்ணன், 30–ஏ, யூ. கே. தேவர் தெரு, சூலூர் அஞ்சல், கோவை–2.
1364. க. மணிமுத்து, த/பெ. எஸ். கந்தசாமி, ஆசிரியர், செங்குந்தம் பிள்ளையார் கோவில் தெரு, வெண்ணந்தூர்–637 505.
1365. எஸ். பாலாஜி, 7, அம்மாப்பேட்டை, மெயின் ரோடு, சேலம்–1.
1366. எல். ஸ்ரீதர், 33, பி. டி. ராஜன்தெரு, மதுரை–625 002.
1367. எம். பிரமநாயகம், 22, அப்பர் தெரு, திருநெல்வேலி–6.
1368. எஸ். லெக்ஷ்மி நரசிம்மன், துவரிமான் (அஞ்சல்), (வழி) சோழவந்தான், மதுரை ஜில்லா.
1369. கே. கன்னியப்பன், 34/1, டீ. வி. பட்டணம், உடுமலைப்பேட்டை, 642 126.
1370. கே. ராஜசேகர், 26–ஏ, தேர்வீதி, சங்ககிரி துர்க்கம் (அஞ்சல்) 637 301.
1371. டி. ஜம்புநாதன், 10, ஒரந்தராயர் காலனி, கீழ் வண்டிக்காரத்தெரு, தஞ்சாவூர்–613 001.
1372. தா.செந்தில்குமார், 36, கன்னங்குறிச்சி மெயின்ரோடு, மணக்காடு, சேலம்–636007
1373. டி. செந்தில், 102, தரும நகர் முதல் தெரு, சேலம்–636 005.
1374. அ. பி. கல்பனா, 1482, குதிரைக் கட்டித்தெரு, கரந்தை, தஞ்சாவூர்–613 002.
1375. கௌ. முரளீதரன், 53–சி, சட்டையப்பர் மேலவீதி, நாகப்பட்டினம்–611 001.
1376. எம். ஆர். ராஜேஷ், 37, சுப்பிரமணியம் ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்–2.
1377. எம்.ஆர்.விஸ்வநாதன், 37, சுப்பிரமணியம் ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்-2
1378. எஸ். ஜமுனா, 19–ஏ, சாயிபாபா கோ–ஆபரேடிவ் காலனி, கோயம்பத்தூர்–641 038
1379. வி. பாலாஜி, 21, ஹனுமந்தபுரம், தாராபுரம்–638 656
1380. ந. ராமபத்ரன், த/பெ. பக்தவத்சலம், அக்ரஹாரம், ராயப்பேட்டை (அஞ்சல்) திருவையாறு (வழி) 613 204.
1381. எஸ். ஷண்முகப்பிரியா, டி–பிளாக், 3–வது பிளாட், 86–வது தெரு, அசோக்நகர், சென்னை–83.
1382. எச். ஜரினா பேகம், 17, 2–வது இணைப்புச் சாலை, திருவள்ளுவர் நகர், எருக்கன் சேரி, சென்னை–51.
1383. ஜி. தேவகி, 11–ஏ, தும்பவனம் தெரு, காஞ்சிபுரம்–631 501.
1384. சி. எஸ். சங்கரன், 20, நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை–17.
1385. எம். மீனாட்சி, 51, கோதண்ட ராமஸ்வாமி கோயில், மேற்கு, மாம்பலம், சென்னை–33.
1386. எஸ். கணேஷ், டி. பிளாக், 3–வது பிளாட், 86–வது தெரு, அசோக்நகர், சென்னை–83.
1387. லெ. கார்த்திகேயன், டி/13, ராஜாகாடு III, ஈரோடு–638 001.
1388. எஸ். அரவிந்த், 11, ராமச்சந்திரா ரோடு, தெருநகர், குரோம்பேட்டை, சென்னை-44
1389. எஸ். ஆனந்த், 11, ராமச்சந்திரா ரோடு, தெருநகர், குரோம்பேட்டை, சென்னை–44.
1390. ஜெ. மணிமாலா, 39/6, சோமசுந்தரம் நகர், திருவொற்றியூர், சென்னை–19.
1391. பொ. பாலசுப்ரமணியம், ராமவிலாஸ் ஜவுளி ஸ்டோர், மெயின்ரோடு, அவிநாசி–638 654.
1392. எஸ். ஸ்ரீதர், 38, சாமியார் புதுவீதி, கோவை–1.
1393. க. ஸ்ரீராம், 37–ஏ, ராமானுஜம் தெரு, தியாகராயநகர், சென்னை–17.
1394. ப. சந்திரமௌளீஸ்வரன், பிளாட் எண் 7, கிருஷ்ணசாமி தெரு, கணபதிபுரம், குரோம்பேட்டை, சென்னை–44.
1395. டி. ரேணுகாதேவி, 3/45, தேரடித் தெரு, கோவூர்–602 101, செங்கை மாவட்டம்.
1396. என். லெக்ஷ்மி, 26, மேற்கு சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.
1397. அ. இராமனுதன், 5–ஏ, பிலிப்ஸ் தெரு, கிருஷ்ணன்கோவில், நாகர் கோயில்-629002
1398. எம். என். ஸ்ரீனிவாசன், சி–6, திருநெல்வேலி ரோடு, பிளாக்–2 நெய்வேலி-607 801
1399. எஸ். ராம்குமார், 29/10, கோனார் ஸ்டோர், அரபி குளத் தெரு, சின்னக்கடைவீதி, திருச்சி–2.
1400. ப. பூங்கொடி, 6, குண்டுபாளையம், தட்டாஞ்சாவடி (போஸ்ட்) புதுச்சேரி–605 009

1401. எல். விஸ்வநாதன், 127, சின்னக்கடை வீதி, சேலம்—636 001.
1402. வே. செந்தில்குமார், 20, கதர் காலனி, கருவம்பாளையம், திருப்பூர்.
1403. என். பாரதி, தேனாட்டல் நாச்சியப்பா, ஆண்டகளூர் கேட் (அஞ்சல்) இராசிபுரம் தாலுகா, சேலம் ஜில்லா.
1404. க. பாபு, த/பெ. கிருஷ்ணசாமிக் கவுண்டர், காளம்பாளையம், பொங்குபாளையம் (அஞ்சல்).
1405. வெ. முத்து சுப்பிரமணியன், 23, மாடி., வளையல்கார 3—வது தெரு, கரூர்—639 001.
1406. நா. ஸ்ரீராம், 95, காவேரி வீதி, கருங்கல்பாளையம், ஈரோடு—3.
1407. ஜெ. சுந்தரராஜன், 27, நாடார் கீழத்தெரு, 2—வது சந்து, சாத்தூர்—626 203.
1408. தி. ராம்குமார், 6, தனலட்சுமி, கார்டன், விழுப்புரம்.
1409. எஸ். உமாமகேஷ், 16, கே. பி. என். காலனி, 3—வது தெரு, யூனியன் மில் ரோடு, திருப்பூர்—1.
1410. எஸ். பாலகணேஷ், 21, மாரியம்மன் லே அவுட், மகாலிங்கபுரம், பொள்ளாச்சி.
1411. எஸ். வெங்கடேஸ்வரன், 146, மூங்கபாடித் தெரு, குகை, சேலம்—6.
1412. யு. ஏ. இந்திரா தேவி, 13—பி, கன்னையன்காலனி, கருங்கல்பாளையம், ஈரோடு—3.
1413. ஆர். கண்ணன், 159, அரசாங்க காலனி, பைகாரா, மதுரை—17.
1414. எஸ். வி. சத்தியபாமா, 27, சின்னவீதி, சத்தியமங்கலம்—638 401.
1415. ஆ. மணிகண்டன், த/பெ. ஒ. எஸ். ஆறுமுகம், கணேஷ் காபி ஒர்க்ஸ், பாண்ட மங்கலம் (அஞ்சல்) சேலம் மாவட்டம்—637 208.
1416. ல. ஆனந்தி, பால கோபாலபுரம் வீதி, பொள்ளாச்சி—642 001.
1417. க. அருணாசலம், 2]102, கம்மாளத்தெரு, கீழ்க்கொடுங்காலூர் (அஞ்சல்) 604 403. வ. ஆ. மாவட்டம்.
1418. ப. தேவேந்திரகுமார், 10, வெங்கடாசல முதலி தெரு, புரசைவாக்கம், சென்னை—7.
1419. எஸ். கண்ணன், 22, கே. பி. என். காலனி, 3—வது தெரு, திருப்பூர்.
1420. சி. சுரேஷ்பாபு, 4/117, வைசியர் தெரு, மேல்மலையனூர்—604 204.
1421. ந. பிரபாகரன், த/பெ. கே. எம். நடராஜன், பலசரக்கு மளிகை, மெயின் பஜார், பேரையூர்—626 703.
1422. என். ஆர். ஷகிலா, 26/1?, பேலா இல்லம், பிச்சை ராஜன் காம்பவுண்டு, மதுரை-12
1423. சி. செந்தில்குமார், த/பெ. ஆர். சந்திரமோகன், பூசாரித்தோட்டம், நடராஜ் தியேட்டர் வீதி, திருப்பூர்—638 604.
1424. ப. வ. அர்த்தனாரீஸ்வரன், சி—13, முருகனடி, சைமன்நகர், மேலராமன்புதூர், நாகர்கோயில்.
1425. வி. சங்கர் கணேஷ், 19, ஊர் காவலன் கோயில் தெரு, கமுதி—623 603.
1426. எஸ். சங்கீதா, 49—ஏ, பார்த்தசாரதி தெரு, எஸ். எஸ். காலனி, மதுரை.
1427. எம். கே. ரேகா, 78, சிதம்பர நகர், நாகர்கோயில்—629 002.
1428. எம். கே. கவிதா, 78, சிதம்பர நகர், நாகர்கோயில்—629 002.
1429. ச. மகாதேவன், 5, தெற்குத் தெரு, கைலாசபுரம், திருநெல்வேலி ஜங்ஷன்.
1430. பா. ஆனந்தகணேசன், 9, புதுப்படிசந்து, வடக்கு ஆண்டார் வீதி, திருச்சி—620 002
1431. எம். திருமறைச்செல்வன், 93, ஈ. பி. காலனி, திருநெல்வேலி—627 011.
1432. ரா. அனந்தநாராயணன், 42—ஏ, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புதூர் (போஸ்ட்) முசிறி தாலுகா.
1433. கி. யக்ஞராமன், 1, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புதூர் (போஸ்ட்) முசிறி தாலுகா.
1434. த. இதயன், 23, மாதாகோயில் தெரு, பணகுடி—627 109.
1435. பொன். கந்தசாமி, 1, யாதவர் தெரு, தளவாய்புரம், பணகுடி—627 109.
1436. எஸ். அருள்மொழி, உண் ஹமலே நிலையம், நெல்லி நகர், தருமபுரி—3.
1437. ஆர். கௌமர், 1/42, மெயின்ரோடு, லாஸ்பேட் (அஞ்சல்), பாண்டி—605 008.
1438. எம். குணசேகரன், த/பெ. டி. மருதை, உதவிக் கோட்டப் பொறியாளர், தமிழ்நாடு மின் வாரியம், துறையூர், திருச்சி மாவட்டம்.
1439. எம். கீதாராணி, த/பெ. டி. மருதை, உதவிக் கோட்டப் பொறியாளர், தமிழ்நாடு மின்வாரியம், துறையூர்—621 010 திருச்சிமாவட்டம்.
1440. தே. பாஸ்கர், 12, குப்புசாமிராஜா தெரு, இராஜபாளையம்—626 117.
1441. வி. பிரகாஷ், த/பெ. வீர. வேலுச்சாமி, பி. இராமச்சந்திரபுரம் (அஞ்சல்), பிள்ளையார் குளம் (வழி), இராமநாதபுரம் மாவட்டம்.
1442. கி. ஜெகந்நாதன், சி—3, அவ்வைநகர், தருமபுரி—636 705.
1443. டி. என். நாராயணன், த/பெ. டி.டி.என். ராகவன், மானேஜர், கனரா வங்கி, கோம்பை—626 522.
1444. ஆர். குருராஜ், 82, தெற்குத் தெரு, கரூர்—639 001.
1445. ஆர். விஜயகுமார், த/பெ. வி. ஆர். ராமலிங்கம், சாவடிக் காட்டுத்தோட்டம், நாகதேவன் பாளையம், (அஞ்சல்) பெரியார் மாவட்டம்—638 452.
1446. க. பத்மகலோசனு, எப்—13, புதுகாலனி, மேட்டூர்—636 401.
1447. டி. மாணிக்கவாசகம், 33, ரெட்டித்தெரு, கரியமாணிக்கம் (அஞ்சல்) புதுவை—605 113.
1448. ஆர். லக்ஷ்மி, 5, ராமன் தெரு, மரகதம் சந்திரசேகர் நகர், சிட்லப் பாக்கம், சென்னை—64.

(இன்னும் வரும்.)



கருணை வழிகள்

ஆர். பொன்னம்மாள்

—3—

"செட்டியார் வீட்டிலே நெக்லஸ் காணுமின்னேனே! அதை எடுத்த வங்க யாரு தெரியுமா?'' என்று கேட்டான் மோகன்.

''யாரு? யாரு?'' — ஆர்வமாகக் கேட்டான் கபாலி.

''ஆங், நான் மட்டும் சஸ் பென்சை அவ்வளவு சீக்கிரம் உடைச்சிடுவேனா? விவரமாக் கேளு..... நேத்து மழை கொட்டித்தா... செட்டியார் கார் சீட்டெல்லாம் நனைஞ்சு போச்சு. டிரைவர் ஒரு கலியாணத்துக்குப் போயிட்டதாலே செட்டியார் தான் டிரைவிங்! சீட்டைத் துடைப் போமுன்னு அஞ்சலையிடத்திலே துணி கேட்டிருக்காரு... பணக்கார வீட்டிலே கந்தைத் துணி கிடைக்கிறது கஷ்டம். அதிலேயும் ஆச்சி இருக்காங்களே கொஞ்சம் கிழிஞ்சாப் பாத்திரக்கார னுக்குப் போட்டுப் பாத்திரமா ஆக்கிடு வாங்க... அஞ்சலை தேடித் தேடிப் பார்த்தும் கந்தைத் துணி கிடைக் கல்லே. செட்டியாருக்கோ நேரமாச்சு!''

கபாலி பொறுமையிழந்து, ''நீ சீக்கிரம் சொல்லு. ஆச்சி எங்கே?'' என்று கேட்டான்.

''ஓ, அதைச் சொல்லலியா....? மாயவரத்திலே ஒரு விசேஷமாம். அதுக்கு ஆச்சி மட்டும் போயிருக் காங்க. செட்டியாரு பொறுமை இழந்து ஓர் அறைக்குள்ளே போய், அங்கேயிருந்த ஒரு ஓலைப்பெட்டியிலே துணி இருக்குமான்னு பார்க்கறதுக் காக அதை அப்படியே கவிழ்த்திருக் கிறாரு. பழைய புடவையோட, 'கல்' என்ற சப்தத்தோடு ஒரு முடிபோட்ட துணிப் பொட்டலமும் விழுந்துதாம்!.''

''யார் இதைச் செஞ்சிருப்பாங்க?''

''வேற யாரு? அந்த ஆச்சியே தான்...! அஞ்சலை கிட்டே இதைப் பத்திச் சொல்ல வேண்டாம்னு செட்டியார் சொல்லிட்டாராம். ஆச்சி வந்ததும் மிரட்டி, உருட்டி விசாரிச் சதுலே ராத்திரி அவங்க வீட்டிலே ஒரே ரகளையாம்!''

''ஏன் அந்த ஆச்சி அப்படிச் செய்யணும்?''

''அவங்களுக்கு ஒரு மகன். ஊதாரியா பம்பாயிலே சுத்திக்கிட்டிருக் கான். செட்டியாருக்கு அவன் குணம் பிடிக்காம, வீட்டிலே சேர்க்கிற தில்லே.... அடிக்கடி வந்து பணம் கொடுன்னு ஆச்சியைத் தொந்தரவு பண்ணுவான். செட்டியாருக்குத் தெரியாமே, அவனுக்கு உதவுறதுக்காக ஆச்சி இப்படிப் பண்ணிட்டாங்க.''

''வீட்டுக்குள்ளே திருட்டா?''

''ஆமாம். செட்டியார் ரொம்ப நல்லவர். காலையிலே என்னைக் கூப்பிட்டனுப்பி ரொம்ப வருத்தப்பட்டார்.''

''வருத்தப்பட்டாச் சரியாப் போயிடுமா? நீ எத்தனை அவதிப்பட்டே...? எத்தனை பேர் கிட்டே தலைகுனிஞ்சே? ஏழைன்னா இளக்காரம்... வெளியே பயிரை மேஞ்சதுக்கு அப்பாவி ஆடு களைப் போட்டு வதைச்சிருக்காங்க.... இது என்ன நியாயம்?''

''உன்னை மாதிரித்தான் அஞ்சலையும் வருத்தப்பட்டாங்க.''

''நீ 'பட்'டுனு சொல்லிடறது தானே! நான் இனிமே உங்க வீட்டுக்கு வர மாட்டேன்னு...''

மோகன் சிரித்தபடி சொன்னான்: ''இந்தப் படபடப்புத்தானே வேண்டாங்கறேன். இவங்களுக்காவது இப்ப என்னைப் பத்தி நல்லாத் தெரியும். புதுசா சேர்ற இடத்துலே? தவிர வேலை வேண்டாம்னு சொல்ற அளவுக்கு எனக்கு வசதி இருக்கா? சரி, புது இடத்துலே ஒரு பழி வந்தால்... அப்ப மறுபடி வேறே இடம் பார்க் கறதா...?''

''அதனாலே தான் வள்ளுவரும் 'நன்றல்லதை அன்றே மறப்பது நன்று'ன்னு அழுத்தமா எழுதி வைச்

திருக்கார். பாட்டிக்கு உடம்பு சரியில்லேன்னு எத்தனை தடவை போய் நின்னிருப்பேன்! கணங்காமப் பணம் தருவாங்க, ஆச்சியும், செட்டியாரும். 'ஏண்டா மூஞ்சி வாடியிருக்கு? சாப்பிடலையா'ன்னு அன்பா விசாரிச்சு வற்புறுத்தி எத்தனையோ தடவை பலகாரம் தின்ன வைச்சிருக்காங்க ஆச்சி. அதை மறந்துடலாமா?''

கபாலி திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

''அடேயப்பா! இவ்வளவும் பேச எங்கே கத்துக்கிட்டே?''

''எல்லாம் பாட்டி சொன்னதிலிருந்தும், புத்தகங்களிலேயிருந்தும்தான். சரி, நீ அந்தப் பொண்ணைக் காப்பாத்தினதுக்கு அவர் இருநூறு ரூபாய் கொடுத்தாராக்கும்!''

''ஆமா, மோகன்... தீபாவளிக்கே நீ புதுச வாங்கலே... இந்த ரூபாயிலே உனக்கும், எனக்கும் ஒரே மாதிரி டிரஸ் தைச்சுக்கணும். அடுத்த மாசம் உனக்குப் பிறந்த நாள் வருதுன்னியே!'' ஆசையாக நண்பனைப் பார்த்தான் கபாலி.

''உன் அன்பு எனக்குப் புரியுது கபாலி. ஆனால், உனக்குக் கூடப் பிறந்தவங்க, கந்தையும் கிழிசலுமா இருக்கறப்போ, அவங்களுக்கும், உனக்கும் இந்தப் பணம் செலவிடப்படறது தான் நியாயம்!''

கபாலி முகம் ஜிவுஜிவுக்க, ''அப்போ நீ பேசறதெல்லாம் வெறும் தளுக்கு. இல்லே? என்னை வேத்தாளா நினைச்சுத் தானே இப்படிச் சொல்றே? நான் அந்தப் பொண்ணைக் காப்பாத்தினேன்னு அதுக்குக் காரணம் நீ. அந்தப் பணத்திலே உனக்கு உரிமையில்லையா? உனக்கு உதவாத பணம் எனக்கும் வேண்டாம். இதோ, இப்ப அதைக் கடலிலே எறியறேன்.'' என்றபடி எழுந்து கடலை நோக்கி வேகமாகச் செல்ல, மோகன் அவனை மடக்கி,

''ஏய், ஏய், பணத்தைக் கடலிலே எறிஞ்சா யாருக்கு என்ன பிரயோசனம்? சரியான முரடனப்பா நீ! சரி, உன் இஷ்டப்படி டிரஸ் எடுக்கலாம்'' என்று மோகன் வாக்களித்த பிறகே கபாலி அமைதியானான்.

தன் . கால் சட்டைப் பையில் உறுத்தும் சங்கிலியைப் பற்றிச்சொல்லலாமா, வேண்டாமா என்று கபாலி ஒரு விநாடி யோசித்தான். மறு விநாடி மனத்தை மாற்றிக் கொண்டான்.

இப்போது சொன்னால், விக்கிரமாதித்தன் கதையிலே வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறியது போல, மோகனும் மறுபடியும் டிரஸ் வேண்டாமென்று மறுத்து விடுவானோ என்ற பயம்!

✦ ✦ ✦

''ஏய் பட்டாணி சுண்டல்.'' குரல் கேட்டுத் திரும்பினான் மோகன்.

'அட, ராமு, வாசு, தினகர், கோபி, ரமேஷ். இவங்க ரெண்டு



பேரும் புதுசா இருக்கே...?' என்று நினைத்தான்.

''டேய் மோகன்டா'' – ராமு.

''இருந்தால் என்னடா? நாமளென்ன ஓசியிலா சுண்டல் கேட்கப் போகி றோம்! காசுக்குத்தானே! இவனுக்கு வியாபாரமானு நமக்கு மகிழ்ச்சி தானே! இல்லே மோகன்?'' குத்தலும் கேலியும் கலந்து கேட்டான் வாசு. அவன் சுபாவமே அப்படித்தான்!

'ஊஹூம்... இவன்கிட்டே வாய் கொடுக்கக் கூடாது' என்று நினைத்த மோகன், ''சுண்டல் எவ்வளவுக்கு?'' என்று கேட்டான்.

''நாங்கள் எத்தனை பேர் இருக் கோம்? எண்ணிக்கயேன்.... ஏண்டா, ஆறுங்கிளாஸ் பாஸ் பண்ணினவனுக்குக் கூட்டல் கூட மறந்து போச்சா?'' கேட்டான் ராமு.

'சே', வேண்டுமென்றே வம்புக் கிழுக்கிறான். மளமளவென்று ஏழு பொட்டலங்களைக் கட்டிக் கொடுத் தான், மோகன்.

''பிரபு, சங்கர், இவன் எங்க கூடத் தான் படிச்சான்... இப்போ படிப்பை நிறுத்திட்டான்... மோகன், தினம் இதிலே எவ்வளவு லாபம் கிடைக்கும்? தினம் பீச்சுக்கு வரது ஜாலி... இல்லேடா? என்னடா உப்பே இல்லே... மாங்காய் வேற தொந்து போன மாதிரி இருக்கு... நஷ்ட சுடா இன்னொரு பொட்டலம் கொடுத் துடடா...'' என்றான் வாசு.


மோகன் எதுவும் கூறாமல் எழுந் தான். வாசுவின் அருகே சென்றான். அப்போது, ''காசு வேணுமா? இதோ'' என்று கூறி மோகனின் காலுக்குள் காலைக் கொடுத்துத் தட்டி விட்டான் ராமு. அப்படியே மண் ணில் குப்புற விழுந்தான் மோகன். சுண்டல் கூடை மண்ணில் கவிழ்ந்து கிடந்தது.

''பாவம், சுண்டலெல்லாம் கொட்டிப் போச்சே...!'' யாரோ அனுதாபப்பட்டார்கள். இரண்டுஏழை சிறுவர்கள் ஆவலாய்த் தின்றார்கள். ஒரு நாய் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஓடி வந்தது.

''என்னை ஏண்டா, காலைவாரினே?'' துக்கம் தொண்டை' அடைக்கக்கேட் டான் மோகன்.

''கொழுப்பா? என் காலை நீட்ட ணும் போல இருந்தது... நீட்டி னேன். தடுக்கி விழுந்தது உன் தப்பு...'' கேலியான பதில் அளித் தான் ராமு.

அதற்குள் யாரோ தகவல் சொல்லிக் கபாலி இரைக்க இரைக்க ஓடிவந் தான்.



''எவண்டா அவன்... கிழிச்சு நாராக்கிடறேன்'' சுண்டல் கூடையைத் தூர வைத்துவிட்டு முஷ்டியை மடக்கினுன் கபாலி.

''ஏண்டா, நீ கெட்ட கேட்டுக்கு அடியாள் வேறயா? ஒழுங்கா இருந்தியே... என்னுச்சு... இந்தப்பொறுக்கிதான் உன் சினேகிதனு?'' வாசு திமிராகப் பேசினுன்.

''எவண்டா பொறுக்கி...? உன் எலும்பை உன்னையே பொறுக்க வைக்கிறேன்... பார், மோகன் மாதிரி பாவம், சத்தியம், நியாயமுன்னு ஓடமாட்டேன்.... ஒத்தையா வரியா, மொத்தமா வாரீங்களா?''

''கபாலி, சண்டை வேண்டாம்.வா போகலாம்'' என்று கூறி, அவர்களிடமிருந்து, கபாலியைப் பிரித்துக்கூட்டிக் கொண்டு வருவதற்குள் போதும் போதும் என்ருகி விட்டது. மோகனுக்கு.

அன்று இருட்டி வெகு நேரமாகியும் மோகன் கிளம்பவில்லை.

''நீ என்ன, எதுக்கெடுத்தாலும் பயப்படறே? ஓடினு நாய் விரட்டத்தான் செய்யும். எதிர்த்துக் கல்லாலடிச்சா அது ஓடிடும். அவனுக்கு என்ன திமிரு...! என்ன பேச்சுப் பேசினுன் பார்த்தியா?'' கபாலி குமுறினுன்.

''பேசிட்டுப் போருன் போ... ஒதுங்கிப் போனுப் பயப்படறதா அர்த்தமா? பின் விளைவுகளை யோசிச்சுப் பாரு... ரெண்டு பேருக்கும் அடி.... போலீஸ், விசாரணை, காயம்,மருந்து.. பெரியவங்க கவலை, வீண் செலவுகள், வியாபார முடக்கம்... இதெல்லாம் தேவையா? அவனுக்குப் பொழுது போகல்லே... வம்புக்கு இழுக்கிருன்... ஆப்பிள் வண்டிக்காரனுக்கு மழை பெய்தா நஷ்டமில்லே... உப்புவண்டிக் காரனுக்கு...? அவன் ஒதுங்கருன்னு மழையைக் கண்டு பயந்தா?''

''மோகன்... கூடைச் சுண்டலும் கொட்டிப் போச்சே...

பேசாம நாமளும் அதோ அவுங்க மாதிரி பஜ்ஜி, போண்டா, மசால் வடை எல்லாம் சூடாப் போட்டுப் போட்டு வித்தா அலேச்சலும்இல்லே... லாபமும் கூட... உங்க பாட்டிக்கு இதெல்லாம் போடத் தெரியுமில்லே?'' தூரத்தில் கடையைக் கட்டி வீட்டுக்குப் போகத் தயார் செய்துகொண்டிருந்த ஒரு குழுவைக் காட்டிக்கேட்டான் கபாலி.

''அதுக்கெல்லாம் முதல் வேண்டாமா? பாத்திரங்கள் வேணும். காஸ் லேட்டு வேணும். இப்பவே மூணுமாச வாடகைப் பாக்கி... வீட்டுக்காரன் கத்திட்டுப் போருன்... அதோட மளிகைக் கடைப் பாக்கி வேறே... வெறுந்துணி குடையாகுமா?'' —கவலேயோடு பேசினுன் மோகன்.

''அப்போ, நான் முதல் தரேன்.... இந்தா இதை வித்து வாடகை, மளிகை பாக்கி எல்லாம் கொடுத்துட்டு வேணுமிங்கிற சாமான்களை வாங்கலாம்... சீக்கிரமா கடை ஆரம்பிக்க ஏற்பாடு பண்ணு'' என்று கூறி ஒரு தங்கச் சங்கிலியைக் கால்சட்டைப் பையிலிருந்து எடுத்து நீட்டினுன் கபாலி.

சங்கிலியைக் கையிலே வாங்கிச் சந்தேகக் கண்களோடு ஆராய்ந்தான் மோகன்.

''ஏது இது?''

''மணல்லே கிடைச்சது.''

''என்னிக்கு.''

''நேத்திக்கு.''

''ஏன் நேத்தே சொல்லல்லே?''

''மறந்து போச்சு... அதான் இப்போ சொல்லிட்டேனே.''

''ஊஹூம்... நான் நம்ப மாட்டேன்... உனக்காவது... மறந்து போகிறதாவது!''

''அப்ப யார் கழுத்திலேயிருந்தாவது அறுத்துட்டு வந்தேங்கிறியா?''

மோகன் பார்வையால் கபாலியைத் துளைத்தான்.

''சரி, சங்கிலியைக் கொடு. நீ சந்தேகப்படறே... அதைக் கடலிலேயே விசிடறேன்!'' கோபத்தோடு வேகமாய்க் கடலை நோக்கிப் போன கபாலியை மோகன் தடுக்கவில்லை!

கபாலி சற்றுத் தூரம் போய்த் திரும்பிப் பார்த்தான்.

பின்னர் திரும்பி வந்து மோகனின் அருகில் உட்கார்ந்தான். ''அன்னைக்கி நான் கடலிலே நோட்டை எறியப் போன போது, ஓடி வந்து மறிச்சே... இன்னிக்குப் பேசாமல் இருக்கியே?''

''அன்னைக்கு அது உன் சிரமத்துக்கான வெகுமதி. நியாயமான வழியிலே கிடைச்சது. இன்னிக்கு அக்கிரமமான வழியிலே வந்ததுன்னு தோணிச்சு. அதான் கடலுக்கே போனுலும் தப்பில்லேன்னு விட்டுட்டேன். நமக்குச் சொந்தமில்லாத பொருட்கள் நம்மைப் படுகுழியிலே தள்ளிடும்.'' மோகன் எழுந்து கொண்டான்.

''உட்காருடா... நெசத்தைச்சொல் விடறேன். இது... வந்து... அன்னைக்கிக் கடல்லே ஒரு பொண்ணைக்

காப்பாத்தினேனே...அவள் கழுத்திலே கிடந்தது...''

''என்ன! 'நீ தெரிஞ்சுதான் இதை அறுத்தியா?''

''ஐயோ... அவளைக் காப்பாத்துற போது கையிலே அகப்பட்டது. பிடிச்சு இழுத்தேன். அறுந்திடுச்சு''.

''அப்பவே தங்கமுன்னு தெரியுமில்லே?''

''தெரியாது... ஒருவேளை போலி நகையா இருக்கும்னு நெனச்சேன்.''

''போலியோ, அசலோ, அது ஊரார் பொருள்தானே? அந்தப் பெண்ணினுடைய அப்பா ரூபாய் கொடுத்த பிறகாவது திருப்பிக் கொடுத்திருக்கலாமில்லே?''

''மோகன்... அவர் பர்ஸிலே நூறு ரூபா நோட்டு, கத்தை கத்தையா வைச்சிருந்தாரு... அவருக்கு இது ஒரு துரும்பு மாதிரி... அவ்வளவு பெரிய பணக்காரருக்கு இதுவா பெரிசு?''

''கபாலி... அவருக்கு அது துரும்பா இருக்கலாம்... நமக்கு அது மலை.... வேண்டாம்ப்பா... ஒரு அம்மாவுக்கு நிறையத் தலைமுடி இருக்கு...... அழகாய்ப் பின்னியிருக்கிறாங்க.... நிறைய இருக்கேன்னு அந்தத் தலை முடியை யாரும் திருடறதில்லே..... பணம் சம்பாதிக்கிற வழியைத் தேடணுமே தவிர திருடப்படாது... அவர் கொடுத்த விசிட்டிங் கார்டு இருக்கு இல்லே?''

''இருக்கு.''

''நாளைக்கு எடுத்துட்டு வா.... நானும் வரேன்... சங்கிலியைக் கொண்டு போய்க் கொடுத்திடலாம்.''

''இவ்வளவு நாள் கழிச்சுக்கொண்டு போய்க் கொடுத்தால்....?''

''ஒரு நல்ல காரியத்துக்காகப் பொய் சொன்னால் தப்பில்லேன்னு வள்ளுவர் கூடச் சொல்லி இருக்கார்.. அந்தப் பாவத்தை நான் ஏத்துக்கிறேன்.''

''என் மேலே நம்பிக்கை இல்லாமத் தானே நீயும் என் கூடவே வரேங்கறே?''

மோகன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

''அன்னைக்குச் செட்டியார் வீட்டிலே சந்தேகப்பட்டு விசாரிச்சாங்கன்னதும் பொங்கினியே! ஏழைங்கன்னு இளப்பமான்னு....! இல்லாமை எடுக்கத் தூண்டுங்கறதை நெசமாக்கிட்டியே! நீ வேறே நான் வேறேயான்னு பேசலியே... நானும் வரத்தான் போறேன்.''

கபாலி வாயடைத்து நின்றான்.



பாம்பிலே செய்தி!

மந்திரி: மகாராஜா, பக்கத்துத் தேச மன்னன், தூதுவன் மூலம் பாம்பை அனுப்பியிருக்கிறானே, ஏன்?

அரசர்: செய்தி அனுப்ப ஓலை கிடைக்கலையாம். ஓலைப் பாம்பிலே செய்தி அனுப்பியிருக்கிறார்.

—லலிதா செல்லப்பா

மோகனும், கபாலியும் விசிட்டிங் கார்டில் உள்ள ராமபத்ரன் என்பவர் வீட்டுப் படியில் ஏறினார்கள். மோகன் தன் சட்டைப் பையில் வைத்திருந்த சங்கிலியை ராமபத்ரனிடம் கொடுத்து ''நான் கபாலியின் சிநேகிதன். இவன் உங்க பொண்ணைக் காப்பாத்தின போது கையோட வந்த இந்தச் சங்கிலியை ட்ராயரிலே வச்சுக்கிட்டு நீந்தியிருக்கான். பிறகு மறந்தே போனான். மறுநாள் தான் ஞாபகம் வந்திருக்கு. விசிட்டிங் கார்டு தொலைஞ்சு போகல்லேன்னா அன்னிக்கே வந்திருப்போம்... நல்லவேளை, நேத்து ராத்திரித்தான் கிடைச்சது... இவ்வளவு நாள் இது சுமையா எங்களைத் தூங்க விடல்லே...வரோங்க'' என்றான்.

''அடேடே, அப்படியா? அந்தத் தம்பி பெயர் கபாலி. உன் பெயர்?'' என்று கேட்டார் ராமபத்ரன்.

''மோகன்.''

''படிக்கறியா.''

''போன வருஷம் ஆறும் வகுப்புப் படிச்சேன். பாட்டிக்கு டைபாய்டு வந்து கால் வீங்கி முடியாமப் படுத்துட்டாங்க. படிப்பு நின்னுப்போச்சு.''

''அடப்பாவமே... அடுத்த வருஷம் பள்ளிக்கூடத்திலே சேர்ந்துடு. எல்லாச் செலவையும் நான் ஏத்துக்கறேன்.

''எங்க பாட்டி சாப்பிடணுமே!

ராமபத்ரன் சிரித்தார்.

''இல்லாதவனுக்கு இல்லாமைக்கு ஈடாக இதயத்தைக் கொடுத்திருக்கிறார் இறைவன். எங்க வீட்டு அவுட்ஹவுஸிலே பாட்டி தங்கிக்கட்டும்.

முடிஞ்ச வேலையைச் செஞ்சு சாப்பிடட்டும். பாட்டி சமைப்பாங்க இல்லே.''

மோகன் தலை ஆட்டினான்.

''ஜானகி'' உள்ளே திரும்பிக் கூப்பிட்டார்.

''அட. இவன் அன்னிக்கி நம்ம மைதிலியைக் காப்பாத்தினவனில்லேயோ?'' — கபாலியைச் சுட்டிக் காட்டி ஆச்சரியத்தோடு கேட்டார் அவர் மனைவி.

''அவனேதான்... இதோ பார் காணுமல் போன மைதிலியுடைய செயின்.... விசிட்டிங் கார்டைத் தொலைச்சிட்டு அவதிப்பட்டிருக்கிறார்கள். நமக்கும் பிறந்திருக்கே பிள்ளையின்னு ஒண்ணு... வெறும் தத்தாரி... கபாலி, எங்க ஆபீஸிலே அட்டெண்டர் வேலை போட்டுத் தரச் சொல்றேன். பொறுப்பாப் பார்க்கிறியா?''

கபாலிக்குப் பேச வாயெழவில்லை. ராமபத்ரனே தொடர்ந்தார்:

''அப்புறம் கொஞ்சங்கொஞ்சமா மெஷின் வேலை கத்துக்கலாம். மெஷின் வேலையைப் பழகின அஞ்சு வருஷத்திலே எழுநூறு, எண்ணூறு சம்பளம் வாங்குவாய்... சரி, நாளைக்கு நீ இந்த விலாசத்துக்கு வா... நல்ல ஜோரா, பளிச்சுனு டிரஸ் பண்ணிட்டு வா...''

கபாலி நன்றியோடு மோகனைப் பார்த்தான்.

''நேர்மையாக நடக்கறவங்களைக் கண்டால் இவருக்கொரு சந்தோஷம். இன்னிக்கி இவர் சேர்த்து விட்டவங்களெல்லாம் ஓகோன்னு இருக்காங்க.... நீயும் அப்படி வரப்போறே பாரு''— ஜானகியின் வாழ்த்து கபாலியின் நெஞ்சத்தை நனைத்தது.

\+ \+ \+

கடற்கரைக்கு மோகனைத் தேடி வந்தான் கபாலி. அவனைக் கண்டதும்,

''வேலையெல்லாம் எப்படி இருக்கு கபாலி?'' என்று கேட்டான் மோகன்.

''நல்லா இருக்கு மோகன்... நீ சொன்னபடி அம்மா, தங்கச்சி, தம்பிக்கெல்லாம் துணிங்க எடுத்தேன். தங்கச்சி ஸ்கூலுக்குப் போகுது. வீட்டிலே இப்போ எனக்கு என்ன மதிப்புங்கறே! பாடுபட்டுச் சம்பாதிக்கறது நிஜமாகவே சொகந்தான்!''

''இரு கபாலி... அதோ பார், அங்கே யாரோ கடலை நோக்கிப் போறாங்க பாரு...''

''ஆமாம்... அலையிலே நிக்கிறதுக்கு இருக்குமோ?''

''இந்த நேரத்திலா? நீச்சல் அடிக்கறதுக்காக இருக்குமோ? சில பணக்கார வீட்டுப் பசங்களுக்கு இப்படி ஒரு பொழுதுபோக்கு உண்டு...''

''இல்லே மோகன்... இல்லே...'' கபாலி பதற்றத்துடன் எழுந்தான். ''அவனுக்கு நீந்தத் தெரியாது.... ஐயோ, மடங்கி மடங்கி விழுறானே.'' கபாலி குதிகால் பிடரியில் பட ஓடினான். மோகனுக்கு அவ்வளவு வேகமாய் ஓட முடியாமல் மூச்சிரைத்தது.

பத்து நிமிடப் போராட்டம்தான்! நீரில் விழுந்த அவனை மணலில் இழுத்துப் போட்டான் கபாலி.

''என்னடா விஷயம்?'' என்று மோகன் கேட்டான்.

''இவன் தற்கொலை பண்ணிக்க வந்திருக்கிறான். தவறி விழுந்தவனைக் காப்பாத்தறது சுலபம். இவன் என்னையும் சேர்த்து இழுக்கப் பார்த்தான். நல்ல காலம்.''

கடலிலிருந்து காப்பாற்றப்பட்டவனைக் கவிழ்த்திப் போட்டு விலாவில் அமுக்கினான் மோகன்.

''மோகன்... நீ நகரு... சொல்றேன்.... அதெல்லாம் அதிகமா ஒண்ணும் தண்ணி குடிக்கலை... பொழைச்சுக்குவான். உப்புத் தண்ணி மூக்கிலே ஏறி இருக்கு. இப்படி அமுக்கினா சரியாயிடும்.''

கபாலியின் வேகமான அமுக்கலில் குபுகுபுவெனத் தண்ணீர் வந்தது. மோகன் ஓடிப்போய்ப் பஜ்ஜிக்கடைப் பாட்டியிடம் ஒரு டம்ளர் தண்ணீர் வாங்கி வந்து குடிக்கச் செய்தான். பிறகு அவனை உற்றுப் பார்த்துவிட்டு, ''அடேடே, இவன் யார்னு தெரியுதா கபாலி'' என்று வியப்போடு கேட்டான்.

கபாலியும் அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்து விட்டு ''அடேடே, இவனா தற்கொலை பண்ணிக்க வந்தான்!'' என்று கேட்டான். (தொடரும்)

சூடச்சூட

"இப்போதெல்லாம் நான் டீ குடிக்கிறதை நிறுத்திட்டுப் பேப்பரை படிச்சுடறேன்"

"ஏன்?"

"பேப்பர்லதான் சூடச்சூட செய்திகள் போடுறாங்களே!" **- ஆர். பி. ராஜ்**



மாலியும் ஜூலியும் 1

கருத்து: எம்.ஆர்.ராஜன்



பிருந்தாவனக் கவியரங்கம்

பிள்ளையார் பலவிதம்



ஆற்றங் கரைப் பிள்ளையார்
ஆசீர் வாதம் செய்கிறார்.
அரச மரத்துப் பிள்ளையார்
அன்பைக் காட்டி அருள்கிறார்.

பள்ளிக் கூடப் பிள்ளையார்
பக்கத் துணை நிற்கிறார்.
பஸ் ஸ்டாண்டுப் பிள்ளையார்
பயணிகளைக் காக்கிறார்.

கோர்ட்டு வாசல் பிள்ளையார்
கோரும் நீதி தருகிறார்
காலனியில் பிள்ளையார்
காவலாக இருக்கிறார்.

தொழிலகத்துப் பிள்ளையார்
தோன்றும் வினை தீர்க்கிறார்.
தெருவுக்குத் தெரு பிள்ளையார்
தெய்வ பக்தி வளர்க்கிறார்!

—எம். ஆர். ஸ்ரீப்ரியா (225) பழைய மாம்பலம்.

சிட்டுக் குருவி

பட்டு மணிக் கண்கள் இரண்டும்
பளப ளவென மின்னும் — ஒரு
சிட்டுக் குருவி மரத்தின் கிளையில்
சிறகைக் கோதும் இன்னும்.

வாலை வீசிப் பறந்து எங்கள்
வாசல் வந்து குதிக்கும் — அங்கே



தேங்கி நிற்கும் மழைத் தண்ணீரில்
உடல் நனைத்துக் குளிக்கும்.

கீச்சுக் கீச்சுப் பாட்டுப் பாடிக்
கிழக்கும் மேற்கும் பறக்கும் —சிட்டு
சுந்தல் வைக்கோல் கூட்டுக் குள்ளே
குதூ கலமாய் வசிக்கும்.

எட்டுத் திசையும் திரிந்து வந்து
இன்ப மாக வாழும் — நமக்கு
சிட்டுப் போல மனம் இருந்தால்
சிரித்து வாழ லாகும்.

—என். சந்தோஷ்குமார் (3803), கணேசபுரம்.

உதவி

குரங்கு ஒன்று பேனினால்
கோடித் தொல்லைப் பட்டது.
குரங்கின் தலையும் புண்ணினால்
கொழுக் கட்டையாய் ஆனது!

எடுக்க முயன்று பார்த்தது
இயல வில்லை: தோற்றது.
அடுத்த குரங்கை வேண்டவே,
அதுவும் 'சரிதான்' என்றது.

அந்தக் குரங்கும் எடுத்தது;
இந்தக் குரங்கும் எடுத்தது.
இரண்டும் தொல்லை நீங்கியே
இன்பம் மகிழ்ச்சி கொண்டன.



உதவி செய்து கொள்வதால்
உயர்ந்த இன்பம் அடைகிறோம்;
உள்ளம் உள்ள யாவரும்
உணர்ந்து கொள்வோம் இதனையே!

—க. பழனிவேல் குன்றக்குடி (5501).

தாத்தாவும் பேரனும்



(அப்புசாமி— குப்புசாமி வழியில்)

தாத்தா: பேரப்பையா, பேரப்பையா,
ஓடி வந்திடு.
பெரியஉலகைக் காட்டுகின்றேன்
விரைவில் வந்திடு.

பேரன்: உலகத்தினை உங்களாலே
காட்ட முடியுமா?
உடனே கடைக்குச் செல்லத்தானே
என்னை அழைப்பது?

தாத்தா: உண்மையிலே உலகத்தினைக்
காட்டுகிறேன் வா.
உருண்டையான வடிவம்அதனைத்
தொட்டுப் பார்க்கவா.

பேரன்: உலகத்தினை எப்படிநாம்
தொட்டுப் பார்ப்பது?
ஒவ்வோர்இடமாய்ச் சென்றுசென்று
தொட்டு வருவதா?

தாத்தா: சுற்றிப் பார்க்கும் உலகம்அன்று
சொல்லி அழைப்பது.
சுற்றிப்பார்க்க லாமேகையால்
துள்ளி வந்திடு.

பேரன்: கையால்சுற்றும் உலகஉருண்டை
எனக்குத் தெரியுமே!
கல்விக்கூடம் அதிலேநாங்கள்
கண்டதுதானே?

—ஜி. ஏகலைவன் (937).

பொம்மைச் சண்டை

பொம்மை யெல்லாம் ஒன்று சேர்ந்து
கூட்டம் ஒன்று போட்டன.
''நம்மி டையே தலைவன் யாரு?''
என்று கேட்டு நின்றன.

சிங்கப் பொம்மை மேலே வந்து
''நான்தான் தலைவன்'' என்றது.
தங்க நிறக்துக் கரடிப் பொம்மை
''தலைவன் நான்தான்'' என்றது.


எங்கி ருந்தோ ஓடி வந்த
எலியும் முன்னே நின்றது.
அங்கு மிங்கும் தலையை ஆட்டி
யானை வந்து நின்றது.

தங்கைப் பாப்பா கனவில் இந்தச்
சண்டை தன்னைப் பார்த்ததும்
பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக்
கொலுவை நோக்கி வந்தது.

''எங்கு முள்ள தலைவன் சண்டை
இங்கு எதற்கு வேண்டுமோ?
உங்கள் சண்டை வலுக்கு மானால்
உடைந்து நாசம் ஆகுவீர்.''


என்று சொன்ன தங்கை சொல்லில்
என்ன மாயம் இருந்ததோ!
அன்று முதலே பொம்மை எல்லாம்
அமைதி யாக இருந்தன!

—டி. வெங்கடகிருஷ்ணன் (73),
செங்கம்.



அடுத்த இதழில்...

பிருந்தாவனக் கதையரங்கம்



இடம்பெறுகிறது.

பிருந்தாவனம்

விளக்கும்-காற்றும்


இருட்டு நேரம். சைக்கிளில் விளக்கு இல்லாமல் சென்று கொண்டிருந்தான் ஒரு சிறுவன். ஒரு போலீஸ்காரர் நிறுத்தி, ''ஏன் சைக்கிளில் விளக்கு இல்லாமல் செல்கிறாய்?'' என்று கேட்டார்.

''ஊர் முழுவதும் தான் விளக்கு இருக்குதே என் சைக்கிளில் எதுக்காக விளக்கு?'' என்று கேட்டான் அச்சிறுவன்.

உடனே போலீஸ்காரர், ''ஊர் முழுவதும் தான் காற்று இருக்கிறதே, உன் சைக்கிள் சக்கரத்தில் எதற்குக் காற்று?'' என்று கூறி, சைக்கிள் சக்கரங்கள் இரண்டிலும் இருந்த காற்றை வெளியேற்றி விட்டார்.

—பி. முரளி (2960) பொள்ளாச்சி-2





வயிற்றிலே புதையல்

டாக்டர்: (சிறுவனின் பெற்றோரிடம்), பத்துப் பைசாவை உங்கள் பையன் விழுங்கியதாகச் சொல்கிறீர்கள். எக்ஸ்ரேயில் பார்த்தால், இவன் வயிற்றுக்குள் ஒரு புதையலே இருக்கிறதே!


—கி. முரளி (3405), மேற்குதாம்பரம்

எத்தனை வகைகள்

மீன்களில் ஏறக் குறைய இருபதாயிரம் வகைகள் இருக்கின்றனவாம். அவற்றில் சில:

கெண்டை, கெளுத்தி, வஞ்சிரம், திருக்கை, கரு, உளுவை, விலாங்கு, மடவை, இறால், குரவை, மலங்கு, மடவை, வாளை, அயிரை, பொன் மீன், மும்முள்ளி, நாற்பல்லி, சூரிய மீன், நாக்குமீன், முண்டக்கண்ணி, சுட்டிமீன், பாதாளமீன், பசுமீன் — இப்படிப் பலவகை.

—ப. திருமாவேலன் (2284)கோயில் பட்டி.



எல்லோரும் பெண்களா?

''அப்பா, எங்கள் பள்ளியில் சுற்றுலா போகிறோம். என்னுடன் படிக்கும் ராதா, உமா, கௌரி எல்லோரும்...''

''என்னடா எல்லோருமே பெண்களா?''

''இல்லையப்பா, ராதாகிருஷ்ணன், உமாபதி, கௌரிசங்கர்...

—எஸ்.பாலமுருகன் (3445)மதுரை-1



பாரச்சூட்

ஒரு கைக்குட்டை அல்லது சதுர மான ஒரு துணியின் நான்கு மூலை களிலும் தனித்தனியாக ஓரடி நீள முள்ள நூலைக் கட்டுங்கள். நான்கு நூல்களையும் ஒன்று சேர்த்து அடியில் முடிச்சுப் போடுங்கள். பிறகு அவற் றுடன் ஒரு சிறு கல்லையும் வைத்துக் கட்டுங்கள். இப்போது, கைக்குட் டையை அல்லது துணியை நன்ருகச் சுருட்டி உயரத்தில் எறியுங்கள். அது குடை போல் விரிந்து மெல்ல மெல்ல இறங்கி வரும். இந்த அடிப்படையில் தான் பாரச்சூட்டுகளை அமைத்து விமானத்திலிருந்து வீரர்கள் தரையில் பத்திரமாக இறங்குகிருர்கள்.

—ஆர். சுந்தர் (644) விக்கிரப் பாண்டியம்.



நண்பருக்கு நன்றி

ஒரு ஜமீன்தார் மிகவும் சோம்பே றி யாக இருந்தார். தினமும் 11 மணிக்குத் தான் அவருக்கு விடியும். அவரது சோம்பேறித் தனத்தால், அவருடைய செல்வம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்ததை அவ ரின் நண்பர் கண்டு வருந்தினர்.

''நாளைக் காலையில் 5 மணிக்கு எழுந்து மாடியில் இருந்தபடியே கீழே என்ன நடக்கிறது என்று பாருங்கள்'' என்ருர் நண்பர்.

ஜமீன்தார் மிகுந்த சிரமப்பட்டு 5 மணிக்கே எழுந்தார். மாடியில் நின்றபடியே சுற்றிலும் பார்த்தார்.

மாடுகளிலே பால் கறந்தவன் நிறையப் பாலைக் கடத்திக் கொண்டு போய் அதற்குப் பதிலாகத் தண் ணீரைக் கலந்து வைத்தான். ஒருவன் நெல் மூட்டைகளைத் திருடிச் சென் ருன். இப்படிச் செல்வமெல்லாம் கரை வதைக் கண்டு ஜமீன்தார், துரோகம் செய்த வேலைக்காரர்களை வீட்டுக்கு அனுப்பி, நல்லவர்களையே வைத்துக் கொண்டார். சோம்பலையும் துரத்தி னார். நண்பருக்கு நன்றி சொன் ஞர்.

—என். சிவராம் (3576), மதுரை–11




அவசரத்தில் செய்தது

குமாரும் கோபுவும் செஸ் விளை யாடிக் கொண்டிருந்தார்கள். ஆட்டத் தின் நடுவில் கோபு தண்ணீர் குடிக்கச் சென்ருன். அதுதான் சமயம் என்று கோபுவை ஏமாற்ற நினைத்த குமார், கைக்கு எட்டிய காய் ஒன்றை எடுத்துப் பெட்டியில் போட்டு விட்டுப்பேசாமல் உட்கார்ந்தான்.

கோபு தண்ணீர் குடித்து விட்டுச் செஸ் ஆட வந்தான். செஸ் போர் டைப் பார்த்ததுமே அவன், குமாரின் செயலைக் கண்டுபிடித்து விட்டான். எப்படி அவ்வளவு சீக்கிரம் அவன் கண்டுபிடித்தான்?

விடை: அவசரத்தில் குமார் ராஜாக் காயை எடுத்துப் போட்டுவிட்டான். ராஜா இல்லாமல் 'செஸ்' விளையாட முடியாதே!

—ஆர். கிருஷ்ணன் (2493), கோவை–20.




எத்தனை மூட்டைகள்?

ஒரு கழுதையும் குதிரையும் மூட்டைகளைச் சுமந்து கொண்டிருந்தன. அப்போது கழுதை, குதிரையிடம், ''என் மேல் உள்ள மூட்டைகளில் ஒன்றை எடுத்து உன் மேல் வைத்து விட்டால், நாம் இருவர் சுமக்கும் மூட்டைகளும் சம எண்ணிக்கையாகி விடும். ஆனால், உன்மேல் உள்ள மூட்டைகளில் ஒன்றை எடுத்து என் மேல் வைத்து விட்டால், உன் மேல் இருப்பதைப் போல் இருமடங்கு மூட்டைகளை நான் சுமக்க வேண்டியிருக்கும்'' என்றது.

அப்படியானால், கழுதையின் முதுகில் இருந்த மூட்டைகள் எத்தனை? குதிரையின் முதுகில் இருந்த மூட்டைகள் எத்தனை?

விடை: கழுதை : 7 மூட்டைகள், குதிரை: 5 மூட்டைகள்.

—பா. சதீஷ்குமார் (401), வேலூர்-1




எப்படி?

1. ஒரு டென்னிஸ் பந்து அதை உங்கள் பலம் கொண்ட மட்டும் வீசலாம். ஆனால், எங்கு வீசினாலும் அது திரும்பி உங்களிடமே வர வேண்டும். எப்படி?
2. ஒரு பெரிய தியேட்டர். அதில் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து, ''இவ்வளவு பெரிய தியேட்டரில் நான் உட்கார முடியாத இடத்தில் உன்னால் உட்கார முடியுமா?'' என்று கேட்கிறார். அதற்கு மற்றவர் 'முடியும்' என்கிறார். அது எப்படி?
3. உங்கள் இடதுகை முழுவதையும், உங்கள் பேன்டின் வலது பக்கப் பாக்கெட்டில் நுழைக்க வேண்டும். அதே நேரத்தில் வலது கை முழுவதையும் இடது பக்கப் பாக்கெட்டில் நுழைக்க வேண்டும். எப்படி?

விடை: 1. மிகவும் சுலபம். பந்தை நேராக ஆகாயத்தில் வீசுங்கள். 2. கேட்டவரின் மடியில் உட்கார வேண்டும். 3. பேண்ட்டைத் திருப்பிப் போட்டால் போதும். வலது இடமாகவும், இடது வலமாகவும் மாறி விடும். பின்பு, கைகளை நுழைப்பது சுலபம்தானே!

—அ. அன்பரசு (2101), கோவை—25.



முக்கனிகள்

சங்க இலக்கியம்

புரிந்து கொள்ளக் கடினமானது பலாப் பழம் போல. மிகுந்த சிரமப் பட்டுத்தான் சுளையை எடுத்துச்சுவைக்க முடியும்.


இடைக்கால இலக்கியம்:

ஓரளவு கடினமானது மாம்பழம் போல. சிறிதளவு சிரமப்பட்டாலே சுவைக்க முடியும்.

தற்கால இலக்கியம்:

புரிந்து கொள்வது மிகவும் எளிது; வாழைப்பழம் போல. சிரமப்பட வேண்டியதில்லை.

—வி. ஜெயப்பிரகாஷ் (1532) சந்தவாசல்.



தேர்தல் தந்திரம்

அமெரிக்காவில், பின் தங்கிய வகுப்பினர் இருந்த ஒரிடத்தில் தேர்தல் நடந்தது. தேர்தலுக்கு நின்றவர் செருப்புகள் நிறையக் கொண்டுவந்தார். வாக்காளர் ஒவ்வொருவருக்கும் ஒரு கால் செருப்பை மட்டுமே கொடுத்துவிட்டுப் போனர்.

''நான் நிச்சயம் வெற்றி பெற்று வருவேன். அப்போது இன்னொரு கால் செருப்பைக் கொடுப்பேன்'' என்ருர்.

அவர் தேர்தலில் அமோக வெற்றி பெற்ருர்.

—எஸ். பாலமுருகன் (3445), மதுரை-1.



வெயிட் பிளீஸ்

இருத்தணியில் இராணுவத்துக்கு ஆள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். உள்ளே ஒருவர் பேட்டிக்குப் பதில் அளித்துக் கொண்டிருக்கும் போதே, அடுத்தவர் உள்ளே நுழைந்தார்.

''வெயிட் பிளீஸ்'' (Wait Please) என்ருர் அதிகாரி.

''போன மாதம் 60 கிலோ. இப்போ 62 கிலோ'' என்ருர் அந்த மனிதர்.

—வே. செந்தில்குமார் (65), திருத்தணி.



பழம்பெரும் நாடு

பாரத நாடு பழம் பெரும் நாடு. எப்படி?

- ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்தான் அதிகமான்.
- பெற்ருேரை வலம் வந்து மாங்கனியைப் பெற்ருர் விநாயகர்.
- பிள்ளை வரம் வேண்டி யாகம் செய்த தசரதர் அதிசய மாங்கனியைப் பெற்ருர்.
- இடையனுக வந்த முருகனிடம் நாவற்பழம் பெற்ருர் ஔவையார்.
- தானியங்களைக் கொடுத்து நாவற்பழம் வாங்கி உண்டார்கிருஷ்ணர்.
- ஏழையிடம் நெல்லிக்கனியைப் பிச்சையாகப் பெற்ருர் சங்கரர்.
- ஞானப் பழத்தைப் பெற்றவர் முருகர்.

—எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி—14




ஆங்கில எழுத்தான Q—வில் ஒரு சொல் ஆரம்பமாகிறது என்ருல், அதன் பக்கத்திலே U என்ற எழுத்தும் இருக்கும்.

Question
Queen
Quality
Quick
Quire
Quiry

Q வந்து U வராத இடமே கிடையாது.

ஆங்கில அகராதியைப் புரட்டிப் பாருங்கள்.

—சு. கோபாலகிருஷ்ணன் (2791), கிருஷ்ணுபுரம்.



நாடோடிப்



வெற்றிலைப் பாட்டு

வெத்திலையாது வெத்திலே
வெருகனூரு வெத்திலே
வாங்கி வந்த வெத்திலே
வாய்க்குக்கூடப் பத்தலே.

—லட்சுமி சிவம்.

ஒன்று, ரெண்டு, மூன்று

ஒன்று, ரெண்டு, மூன்று
ஊருக்கு நான் சென்று
நான்கு, ஐந்து, ஆறு,
நானே வருவேன் பாரு.
ஏழு, எட்டு ஒன்பது,
என்ன நீயும் தின்பது?
பத்து, நூறு, ஆயிரம்,
படித்துத் தேறு சீக்கிரம்!

—எஸ். ராஜேஸ்வரி (4253).

சிங்கு மச்சான்

சிங்கு மச்சான் சேரு! சேரு!
சிங்கு மச்சான் சேரு.
குண்டுமணித் தோட்டத்திலே
கூட்டம் என்னடா? அந்தக்
குதிரைக் காரப் பயலைக் கண்டா
ஓட்டம் என்னடா?

மாமரத்துக்கும் பூமரத்துக்கும்
மயிலைக் கண்ணாடி — இந்த
மயிலுச்சாமி போடுறது
ஸ்டெயிலுக் கண்ணாடி!

பால்மரத்துக்கும் பனைமரத்துக்கும்
பளிங்குக் கண்ணாடி — இந்தப்
பல்லுப் போன தாத்தாவுக்கு
மூக்குக் கண்ணாடி!

பப்பரப்பர பப்பரா, பப்பரப்பரபப்பரா
பப்பாளித் தோட்டம் — அவன்
படுத்த பாயைச் சுருட்டிக்கிட்டு
எடுத்தானாம் ஓட்டம்!

—கோவி சஞ்சீவி.

வண்டியில் பஞ்சுப்பொதி

வண்டியிலே பஞ்சுப்பொதி ஏலேலோ
வலதுகை சாட்டைக்கம்பு ஏலேலோ
இந்நேரம் போறவண்டி ஏலேலோ
எங்கேபோயித் தங்குறது ஏலேலோ
தங்குறது கருவைக்குளம் ஏலேலோ
தள்ளுறது தூத்துக்குடி ஏலேலோ
வாங்குறது வெள்ளிருவா ஏலேலோ
வருகிறது சாலைப்பாதை ஏலேலோ.

—என். நிர்மலா காந்தி.



பாடல்கள்



மழை பெயுது

மழைபெயுது மழை பெயுது
நெல்லே அள்ளுங்கோ
அரைப்படி அரிசி போட்டு
முறுக்குச் சுடுங்கோ
ஏரிபோகிற மாமனுக்கு
எண்ணி வையுங்க.
சும்மா இருக்கிற மாமனுக்கு
ஒண்ணு வையுங்க.
எட்டிப் பார்க்கிற மாமனுக்குச்
சட்டியைப் போட்டு உடைங்க.

—எஸ். சதாசிவம்.

கண்டேன்! கண்டேன்!

ஆறும் ஆறும் இந்த ஊரில்
ஆனையைப் பூனை முழுங்கக் கண்டேன்.

நண்டு வந்து நரியை முழுங்கி
நாத்தங்காலெல்லாம் ஓடக்கண்டேன்.

எண்ணைக் குடத்தை எறும்பு முழுங்கி
ஏப்பம்விட்டே ஓடக் கண்டேன்.

அவிச்ச கோழி பறக்கக் கண்டேன்.
அரைச்ச பயிறு முளைக்கக் கண்டேன்.


ஆண்பிள்ளை பிள்ளை பெறவும் கண்டேன்
அழகான மாம்பழம் பேசக் கண்டேன்.

தி. கண்ணம்மாள்.

பரங்கிக்காய்

பரங்கிக் காயைப் பறிச்சு,
பட்டை யெல்லாம் சீவி,
பொடிப் பொடியாய் நறுக்கி,
உப்பு கொஞ்சம் போட்டு,
மிளகாய் கொஞ்சம் போட்டு,
எண்ணெய் ஊத்தித் தாளிச்சு,
இன்ப மாகத் தின்போம்.
இன்னும் கொஞ்சம் கேட்போம்.
யாருக்கிட்டே கேட்போம்?
அம்மாகிட்டே கேட்போம்.
தந்தால் புசிப்போம்
தராவிட்டால் அழுவோம்.

—இ. வித்யா (4009).





நல்விருந்தும் சொல் விருந்தும்

—தணிகை உலகநாதன்—

"நளினி, உன் அக்காளிடமிருந்து தந்தி வந்திருக்கிறது. அத்தானுடன் அவள் நம் வீட்டுக்கு வருகிறாள், இங்கு நடைபெறும் பொருட்காட்சியைப் பார்க்க" என்று பள்ளியிலிருந்து வந்த நளினியிடம் அம்மா கூறினாள்.

"அம்மா! தந்தி என்றதும் என்னமோ என்று பயந்து விட்டேன். அக்காளையும் அத்தானையும் பார்த்து ஓராண்டு ஆகிவிட்டது. இப்போதாவது நம் வீட்டுக்கு வருகிறார்களே! மட்டற்ற மகிழ்ச்சி அம்மா!"

"அதுசரி, நீ என்னமோ என்று சொன்னாயே! ஏழாம் வகுப்பு படிக்கிற பெண் இதைச் சரியாகச் சொல்ல வேண்டாமா?"

"என்னமோ என்பது தவறா, அம்மா?"

"ஆமாம், தவறுதான்."

"பின்னே எப்படிச் சொல்ல வேண்டும்?"

"என்னவோ என்றுதான் சொல்ல வேண்டும்."

"சரி, இனி என்னவோ என்றே சொல்வேன். அக்காளுக்கும், அத்தானுக்கும் நல்ல விருந்து வைக்க வேண்டும். காய்கறிச் சிலவுக்குப் பணம் கொடுங்கள். அண்ணனும் நானும் கடைக்குப் போய் வாங்கிவருகிறோம்."

"நல்லது நளினி. அண்ணனுடன் சென்று காய்கறிகள் வாங்கி வா. ஆனால் சிலவுக்குப் பணம் கொடுக்க மாட்டேன். செலவுக்கு வேண்டுமானால் தருகிறேன்."

"என்ன அம்மா இது! புதிர் போடுகிறீர்கள். நான் சிலவு என்றேன்: நீங்கள் செலவு என்கிறீர்கள். சிலவு என்றுதானே பலர் பேசுகிறார்கள்?"

"பலர் பேசினாலும் சரி; பல்லாயிரம் பேர் பேசினாலும் சரி. சிலவு என்பது தவறு. செலவு என்றுதான் பேச வேண்டும்; எழுதவும் வேண்டும். பணம் நம்மை விட்டு வேறொருவர் இடத்துக்குச் செல்லுகின்றதன்றோ?"

"அதனால் செலவு என்று சொல்வதே சரியான சொல் என்பதைத் தெரிந்து கொண்டேன். அம்மா, சிலர் வரவு, சிலவு என்று எழுதுவதை வரவு, செலவு என்று எழுதுமாறு கூறுவேன்."

"இந்தா முப்பது ரூபாய். காய்கறிகளுடன் அரை கிலோ...."

"எண்ணையும் வாங்கிவரவேண்டும்."

"ஆம், நளினி, ஆனால் எண்ணை என்று சொல்வது தவறு. எண்ணெய் என்றே கூற வேண்டும். எள்+நெய் என்பது எண்ணெய் ஆயிற்று. எள்ளிலிருந்து எடுக்கப்படும் நெய் எண்ணெய். ஆனால், இக்காலத்தில் எண்ணெய் என்பது எல்லா வகையான நெய்க்கும் பொதுவாகக் கூறப்படுகிறது. நல்லெண்ணெய், கடலை எண்ணெய், மண் எண்ணெய், வெண்ணெய் என்றே கூறப் பழகிக் கொள்."

"சரி, அம்மா, காய்கறிகள் வாங்கி வந்து நானே உனக்கு உதவியாக அருவாமணையில் அரிந்து தரப்போகிறேன்."

"நல்லது நளினி. நீ அவற்றை அரிவாள் மணையில் அரிந்து கொடு. அருவாமணை என்று சொல்லக்கூடாது. தெரிந்து கொள்."

"அம்மா! நீ படித்த பெண்மணி; வீட்டின் கண்மணி. இப்படி எனக்கு ஓர் அன்னை கிடைத்தது எனக்குப் பெருமை அளிக்கிறது. உங்களால் நான் இன்று சில சொற்களைத் தவறு இல்லாமல் பேசக் கற்றுக் கொண்டேன். சரி, நானும் அண்ணனும் கடைக்குப் போய் வருகிறோம்."

மறுநாள் நளினியின் அக்காளும், அத்தானும் வந்தார்கள். நளினி அம்மாவுக்கு உதவியாகக் காய்கறிகளை அரிவாள்மணையில் அரிந்து கொடுத்தாள்.

விருந்து சுவையாக இருந்தது. நளினி அம்மா அளித்த நல்விருந்துடன், சொல் விருந்தையும் சுவைத்து இரட்டிப்பு இன்பம் அடைந்தாள்.

உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை . 13

டாம் சாயர்

மூலம் : மார்க் ட்வைன்
தமிழ்ச் சுருக்கம்:
எச். கிருஷ்ணமூர்த்தி



தாமஸ் சாயர் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை. குறும்புகள் செய்வதில் கெட்டிக்காரன். தண்டனை வாங்காமல் பெரும்பாலும் தப்பித்துக் கொள்ளுவதில் அதைவிடக் கெட்டிக்காரன். அவனுடைய செல்லப் பெயர் டாம். அவனுக்கு அப்பா, அம்மா இல்லை. சின்னம்மா அவனை அன்போடு வளர்த்துவந்தாள்.

ஊரில் இருந்த சிறுவர்களுடன் டாம் அடிக்கடி சண்டை போட்டான். சின்னம்மாவின் அறிவுரைகள் அவனுடைய காதில் ஏறவில்லை. ஒருநாள் உடம்பு முழுக்கக் காயங்களுடன் வீடு திரும்பினான். அதற்குத் தண்டனையாகச் சின்னம்மா அவனுக்கு, ஒரு வேலை அளித்தாள். வீட்டைச் சுற்றியிருந்த மரவேலிக்கு வெள்ளை அடிக்க வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறினான். டாம் தன் தோழர்களிடம் தந்திரமாகப் பேசி, அந்த வேலையை அவர்களைக் கொண்டு செய்யச்சொன்னான். தான் சின்னம்மாவிடம் நல்ல பெயர் வாங்கிக் கொண்டான்.

டாம் வழக்கம்போலப் பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்தான். வழியில் அக்கிள்பெரி பின் என்ற சிறுவனைச் சந்தித்தான். அக்கிள்பெரி பள்ளியில் படிக்கவில்லை. அவன் முழுச் சோம்பேறி. அவனுடைய உடை அழுக்கு. கிழிசல். அவன் எந்த வேலையும் செய்ய மாட்டான். ஊரில் இருந்த அம்மாக்கள் அவனை வெறுத்தனர். ''அக்கிள் பெரியோடு சேராதே. சேர்ந்தால் அப்பாவிடம் சொல்லி உதை வாங்கித் தருவேன்'' என்று பிள்ளைகளை மிரட்டினர். ஆனால், பிள்ளைகள் அக்கிள்பெரியைப் பார்த்துப் பொறாமைப்பட்டனர். ''நான், அக்கிள் பெரியாகப் பிறந்திருக்கக் கூடாதா? பள்ளிக்கூடம் போகவேண்டாமே!'' என்று பல பிள்ளைகள் ஏங்கினர். டாமுக்கு அவனை மிகவும் பிடித்திருந்தது.

அக்கிள்பெரி ஒரு செத்தபூனையைக் கையில் பிடித்திருந்தான். அன்றிரவு அதை இடுகாட்டுக்குக் கொண்டு போய்ப் புதைக்கப் போவதாகச் சொன்னான். ''இன்னொரு விஷயம் தெரியுமா? சமீபத்தில் இறந்து போனாரே வில்லியம்ஸ்? அவரது உடலை இடுகாட்டிலிருந்து எடுத்துப் போக டாக்டர் ஏற்பாடு செய்திருக்கிறாராம். அதை மீண்டும் தோண்டி எடுக்கப் போகிறார்களாம்'' என்ற தகவலையும் அக்கிள் பெரி டாமிடம் சொன்னான். டாமை

அன்றிரவு இடுகாட்டுக்கு அழைத்தான். டாம் ஒப்புக் கொண்டான்.

டாம் பள்ளிக்குத் தாமதமாகப் போனான். ஆசிரியர் காரணம் கேட்டார். டாம் யோசித்தான். வகுப்பில் ஓர் அழகான சிறுமி புதிதாகச் சேர்ந்திருந்தாள். அவளுக்கு அடுத்த இடம் காலியாக இருந்தது. டாம் அவளிடம் பேச விரும்பினான். ஆசிரியருக்குக் கோபமூட்டினால், தண்டனை கொடுத்துப் பெண்கள் வரிசையில் தன்னை உட்கார வைப்பார் என்று டாமுக்குத் தெரியும். ஆகையால், ''அக்கிள்பெரியோடு நான் பேசிக் கொண்டிருந்தேன் ஐயா!'' என்று தைரியமாகச் சொன்னான். பிறகு கையை நீட்டி அதற்குரிய அடியையும் வாங்கிக் கொண்டான். ''பெண்கள் வரிசையில் உட்கார்'', என்று ஆசிரியர் உத்தரவிட்டார். வகுப்பில் இருந்த சிறுவர்கள் சிரித்தனர்.

புதிய சிறுமிக்கு அருகில் டாம் உட்கார்ந்தான். பாடத்தைக் கவனிக்காமல் அவளுடன் பேச்சுக் கொடுத்தான். அவள் பேசவில்லை. டாம் படங்கள் வரைந்தான். அவள் திரும்பிப் பார்த்தாள். ''நன்றாகப் படம் போடுகிறாயே! என்னை வரை; பார்க்கலாம்!'' என்று சொன்னாள். வரைந்தான். படம் வேடிக்கையாக இருந்தது. அவள் சந்தோஷமடைந்தாள். அவளுடைய பெயர் பெக்கி தாட்சர் என்றும், அவளுடைய அப்பா ஒரு நீதிபதி என்றும் சொன்னாள். அதற்குள் ஒரு வலுவான கரம் டாமின் காதைத் திருகியது. ஆசிரியர் அவனுடைய காதைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் வழக்கமான இடத்தில் உட்கார வைத்தார். சிறுவர்கள் மறுபடியும் உரக்கச் சிரித்தனர்.

நடு இரவு. அக்கிள்பெரி டாமின் வீட்டு முன்னால் வந்து நின்று 'மியாவ் மியாவ்' என்று மெதுவான குரலில் கத்தினான். அவன் அப்படித்தான் அழைப்பது வழக்கம். டாமும் வழக்கப்படி 'மியாவ்' என்று பதில் அளித்து விட்டு ஓசைப்படாமல் ஜன்னல் வழியாக வெளியே குதித்தான். இருவரும் ஊர்க்கோடியில் இருந்த இடுகாட்டை அடைந்தனர். எங்கும் அமைதி. இருட்டு. சிறு அசைவுகள்கூட அவர்களுக்குப் பேய்களின் நடமாட்டத்தை நினைவூட்டின. அவர்கள் பயத்தால் நடுங்கிக் கொண்டே வில்லியம்சின் சமாதியை நெருங்கினர்.

சிறிது நேரத்தில் அதே சமாதிக்குச் சில உருவங்கள் வந்தன. அந்த உருவங்களை உற்று நோக்கியதில் அவர்கள் அந்த ஊரிலிருந்த டாக்டர் ராபின்சன், இன்ஜன் ஜோ, பாட்டர் ஆகிய மூவருமே என்று தெரிந்தது. அவர்கள் ஒரு கைவண்டியைக் கொண்டு வந்திருந்தனர். மறைந்த வில்லியம்



வளர்ந்திடுவோம்!

-அரக்கோணம் ராஜாராம்

தாளம் தட்ட நானிருக்கேன்;
தரையில் ஆட நீயும்வா.
மேளம் கொட்ட நானிருக்கேன்
மாப்பிள்ளை போல நீயும்வா!

நாளை உலகம் நமக்காக.
நண்பா, கவலை எதற்காக?
வேலை வரும்வரை தூங்குவதா?
விழித்தெழு; நன்றாய் உழைத்திடவே.

உண்மை நம்மை உயர்த்திடுமே.
ஊரே போற்றிப் பாடிடுமே.
நன்மை செய்தே வாழ்ந்திடுவோம்;
நல்லோர் மொழியால்
வளர்ந்திடுவோம்

சின் உடலைத் திருடிச் செல்லவே டாக்டர் வந்திருக்கிறாரென்பது தெளிவாகியது. டாக்டர் அவசரப்படுத்தினார். மற்ற இருவரும் மண்ணைத் தோண்டிச் சவப்பெட்டியை வெளியே எடுத்து உடைத்தனர். பிணத்தை வண்டியின் மேல் வைத்துவிட்டுக் கூலிக்காகப் பேரம் செய்தனர். அதனால் ஏற்பட்ட சச்சரவில் பாட்டர் மயங்கி விழுந்தான். இன்ஜன் ஜோ பாட்டரின் கத்தியை எடுத்து டாக்டரைக் கொன்றான். டாக்டரின் பையில் இருந்த பணத்தைப் பறித்துக் கொண்டு, கத்தியை மறுபடியும் பாட்டரின் கையில் திணித்தான். பாட்டர் கண் திறந்ததும், குடிமயக்கத்தில் அவன் டாக்டரைக் கொன்று விட்டதாக இன்ஜன் ஜோ சாதித்தான். அப்பாவி பாட்டர் அதை நம்பினான். கத்தியை அங்கேயே போட்டுவிட்டு பாட்டரும், ஜோவும் ஓடி மறைந்தனர்.

டாமும், அக்கிள்பெரியும் மறைவிலிருந்து வெளியே வந்து ஊருக்கு விரைந்தனர். இன்ஜன் ஜோ ஒரு பொல்லாத திருடன். கொலைக்கு அஞ்சாதவன். பலமுறை சிறை சென்றவன். அவனுடைய பெயரைச் சொன்னால் அழுத பிள்ளையும் வாயை மூடும். அவனுடைய கொலைக் குற்றத்தைப் பற்றி வெளியே சொன்னால், பிறகு அவனிடமிருந்து மீள முடியாது. ஆகவே, அவனைப் பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சிறுவர்கள் இருவரும் தீர்மானித்தனர்.

டாக்டர் கொலையுண்ட செய்தி ஊர் முழுவதும் பரவியது. பாட்டரின் கத்தியைப் பார்த்து விட்டு அவன் தான் கொலைகாரன் என்று எல்லோரும் பேசினர். விசாரணை நடந்தது. அதில் ஜோ தப்பித்துக்கொண்டான். பாட்டர் சிறைக்கு அனுப்பப்பட்டான். பாட்டருக்காக டாம் மிகவும் அனுதாபப்பட்டான்.

ஜோவின் பயமும், பாட்டரின் தண்டனையும் டாமை வருத்தின. பள்ளிக்கூடத்தில் பெக்கி தாட்சர் டாமிடம் சரியாகப் பேசவில்லை. பெக்கி, ஆசிரியர், சின்னம்மா —ஆகிய யாருமே தன்னை மதிக்கவில்லை என்று டாம் கருதினான். ஆகவே அவன் வீட்டைவிட்டு ஓடிப் போகத் தீர்மானித்தான். டாமுடன் அவனுடைய தோழர்களான ஆர்ப்பரும், அக்கிள் பெரியும் சேர்ந்து கொண்டனர். மூவரும் ஒரு கட்டுமரத்தில் ஏறி, இரவோடு இரவாக ஜாக்சன் தீவை அடைந்தனர்.

தீவில் வசதியாக ஒரு கூடாரம் அமைத்தனர். வீட்டிலிருந்து கொண்டு வந்த உணவுப் பண்டங்களைத் திருப்தி



யாகச் சாப்பிட்டனர். ''இனிமேல் காலையில் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டாம். இரவு தாமதமாகத் தூங்கலாம். நினைத்தபோது விளையாடலாம். பள்ளிக்கூடமே கிடையாது. இதுதான் இன்பமான வாழ்க்கை'', என்று அவர்கள் எண்ணினர். அவர்கள் தங்களைக் கடற்கொள்ளைக்காரர்களாகப் பாவித்துக் கொண்டனர். பயங்கரக் கொள்ளைக்காரர்களைப் பற்றியும், நிறையப் பணம் சேர்ப்பது பற்றியும் வெகுநேரம் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தனர். வீட்டு நினைவும் வந்தது. கடைசியில் களைத்துப்போய் உறங்கினர்.

அடுத்த நாள் அவர்களுடைய ஊர் மக்கள் படகுகளை எடுத்துக் கொண்டு சிறுவர்களைத் தேடி அந்தத் தீவுப் பக்கம் சென்றனர். சிறிதுநேரம் தேடிவிட்டு, ''பாவம், சிறுவர்கள் மூவரும் நீரில் மூழ்கி இறந்திருக்க வேண்டும்'', என்று சொல்லிக் கொண்டே அவர்கள் திரும்பிச் சென்றனர். சிறுவர்கள் தீவில் மறைந்திருந்து அந்தக் காட்சியை ரசித்தனர். தன்னுடைய மறைவைக் குறித்துச் சின்னம்மா என்ன நினைக்கிறாள் என்று டாம் அறிய விரும்பினான். ஆகவே, அன்றிரவு யாருக்கும் தெரியாமல் ஆற்றைக் கடந்து வீட்டுக்குள் நுழைந்தான். சின்னம்மாவும், ஆர்ப்பரின் அம்மாவும் மறைந்த சிறுவர்களுக்காகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தனர். வந்த சுவடு தெரியாமல் டாம் தீவுக்குத் திரும்பினான். நண்பர்களிடம் ஒரு ரகசியத் திட்டத்தைக் கூறினான். அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

மறைந்து போன டாம் சாயர், ஆர்ப்பர், அக்கின்பெரி ஆகிய மூன்று சிறுவர்களின் நினைவாக ஊரே சோகத்தில் மூழ்கியிருந்தது. மாதா கோவில் மணி வருத்தமாக ஒலித்தது. மக்கள் கறுப்பு உடை அணிந்து கூடியிருந்தனர். சின்னம்மாவும், ஆர்ப்பரின் அம்மாவும் அழுது கொண்டிருந்தனர். கோயிலில் ஜபம் தொடங்கியது. திடீரெனக் கோயில் கதவுகள் திறந்து கொண்டன. கோயிலில் இருந்த அத்தனை பேரும் தங்கள் கண்களை நம்ப முடியவில்லை. டாம் உள்ளே நுழைந்தான்! ஆர்ப்பர் பின்னால் வந்தான்! அக்கின்பெரி கடைசியில் அடி எடுத்து நடந்தான்! ''பிள்ளைகளா? அல்லது பிசாசுகளா?'' என்று ஊரார் திடுக்கிட்டனர். உண்மை தெரிந்ததும், அழுகை நின்றது: ஆனந்தம் நிறைந்தது.

ஊரிலிருந்த சிறுவர்களின் பார்வையில் டாம் ஒரு பெரிய வீரனாகத் தோன்றினான். பயபக்தியோடு அவனைப் பார்த்தனர். டாம் தக்க சமயத்தில் பெக்கிக்கு ஓர் உதவிசெய்து அவளுடைய அன்பையும் பெற்றுக்கொண்டான்.

விடுமுறை வந்தது. சிறுவர்கள் எல்லோரும் விளையாட்டில் ஈடுபட்டனர். ஆனால், டாம் கவலையோடு காணப்பட்டான். டாக்டர் கொலை வழக்கு பாட்டருக்குப் பாதகமாகப் போய்க் கொண்டிருந்தது. அவனுக்கு நிச்சயமாகத் தூக்குத் தண்டனை கிடைக்கும் என்று மக்கள் பேசிக் கொண்டனர். பாட்டர் குற்றமற்றவன் என்று டாமுக்குத் தெரியும். ஆகவே, அவனுக்காக இரக்கப்பட்டான். அக்கின்பெரியுடன் ஆலோசித்தான். ஜோவின் கொடுமையை நினைத்துப் பயந்தாலும், எப்படியாவது பாட்டரைக் காப்பாற்ற வேண்டும் என்று இருவரும் முடிவு செய்தனர். அதற்காகப் பாட்டரின் வக்கீலைக் கண்டு பேசினர்.

விசாரணையின் போது டாம் நீதிமன்றத்தில் தோன்றி உண்மையை ஒளிக்காமல் கூறினான். அப்போது சாட்சிக் கூண்டிலிருந்த ஜோ தண்டனைக்குப் பயந்து நீதி மன்றத்திலிருந்து தப்பித்து ஓடிவிட்டான். ஜோ திரும்பி வந்து தன்னைக் கொல்வான் என்று டாம் பயந்தான். ஆனால், ஜோவைக் காணவில்லை. டாமின் பயம் கொஞ்சங் கொஞ்சமாகத் தெளியலாயிற்று. பெக்கியும் அவனை ஒரு வீரனாக மதிக்கத் தொடங்கினாள்.

கடல் கொள்ளைக்காரர்களைப் பற்றியும், அவர்களுடைய புதையல்களைப் பற்றியும் டாம் நிறையப் படித்திருந்தான். அத்தகைய புதையல்கள் எங்கேயாவது கிடைக்குமா என்று தோண்டிப் பார்க்க ஆசைப்பட்டான். அக்கின்பெரியை உதவிக்கு அழைத்தான். இருவரும் தகுந்த ஆயுதங்களுடன் புறப்பட்டனர்.

ஊருக்கு வெளியே ஒரு பழைய பங்களா இருந்தது. அதைப் 'பேய் பங்களா' என்று மக்கள் அழைத்தனர். சிறுவர்கள் இருவரும் அந்தப் பங்களாவுக்குள் நுழைந்து தேடிப் பார்த்தனர். புதையலின் அடையாளம் ஒன்றும் தென்படவில்லை. மாடிப் படிக்கட்டு கண்ணில் பட்டது. அதில் ஏறி மாடிக்குச் சென்றனர். திடீரெனக் கீழே காலடி ஓசை கேட்டது. இரு



வரும் பயத்தால் நடுங்கினர் ஒளிந்து கொண்டு ஓர் ஓட்டையின் வழியாகக் கீழே நோக்கினர்.

கீழே கூடத்தில் இரண்டு மனிதர்கள் உட்கார்ந்திருந்தனர். ஒருவன் இன்ஜன் ஜோ! மாறுவேடத்தில் இருந்தான். மற்றவன் அவனுடைய தோழன். இருவரும் அந்த அறையின் தளத்தைத் தோண்டினர். தற்செயலாக அவர்களுக்கு ஒரு பெரிய புதையல் கிடைத்தது. அவ்வளவும் பொற்காசுகள்! கலகலவென்று கொட்டின! கொடியவர்கள் இருவரும் குதூகலப்பட்டனர். மறைந்திருந்த சிறுவர்களுக்கு அது இன்ப அதிர்ச்சியாக இருந்தது. ஜோவும், தோழனும் புதையலை எங்கே வைப்பது என்று ஆலோசித்தனர். இரண்டாவது இலக்கத்தில், தான் வரைந்துள்ள அடையாளத்தின் கீழ் அந்தப் புதையலை மறைத்து வைக்கலாம் என்று ஜோ சொன்னான். உடனே புதையலை எடுத்துக்கொண்டு பங்களாவை விட்டு அந்தத் திருடர்கள் இருவரும் மறைந்தனர். சிறுவர்கள் இருவருக்கும் அவர்கள் போன வழி புரியவில்லை. ஆனால், கொடியவர்களிடமிருந்து அந்தப் புதையலை எப்படியாவது கைப்பற்றுவது என்று டாமும், அக்கிள்பெரியும் தீர்மானித்தனர்.

பெக்கி ஆற்றுக்கு அப்பால் ஓர் உல்லாசப் பயணத்திற்கும், விருந்திற்கும் ஏற்பாடு செய்தாள். நண்பர்கள் எல்லோரையும் அழைத்தாள். டாமும் கலந்து கொண்டான். நன்றாக விளையாடி விட்டுச் சிறுவர் சிறுமிகள் நல்ல விருந்து உண்டனர். விளையாட்டுத் திடலின் அருகே ஒரு குகை தெரிந்தது. அதன் உள்ளே கும்மிருட்டு. சாதாரணமாக யாரும் அங்கே போக மாட்டார்கள். பெக்கிக்கும் நண்பர்களுக்கும் உள்ளூர திகில். இருந்தாலும் தைரியமாகக் குகையின் உள்ளே புகுந்தனர். வெளிச்சத்திற்கு மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொண்டனர். குகையில் இருந்த பாதைகள் கிளைகிளையாகப் பிரிந்து சென்றன. வெகுநேரம் குகையில் திரிந்துவிட்டு அவர்கள் வீடு திரும்பினர். பயணத்திற்குப் பிறகு பெக்கியையும், டாமையும் அவனுடைய அம்மா ஓர் உறவினரைப் பார்த்துவிட்டு வரும்படி சொல்லியிருந்தான்.

இன்ஜன் ஜோவின் நடமாட்டங்களை அக்கிள்பெரி கண்காணித்து வந்தான். ஒருநாள் ஜோவும், தோழனும் அந்த

ஊரிலிருந்த திருமதி டக்ளஸ் அம்மையாரின் வீட்டை நெருங்கினர். அந்த அம்மையாரின் கணவர்தான் ஜோவை முன்பு ஒருமுறை சிறைச்சாலைக்கு அனுப்பியிருந்தார். ஆகவே, அவரைப் பழிவாங்க நினைத்தான் ஜோ. ஆனால், அவர் இறந்து போயிருக்கவே, அவருக்குப் பதிலாக அவருடைய மனைவியைத் தாக்கத் திட்டமிட்டான்.

ஜோவின் நோக்கத்தை அக்கிள்பெரி அறிந்தான். உடனே அந்த அம்மையாரைக் காப்பாற்ற ஏற்பாடு செய்தான். அருகில் வசித்த ஒரு முதியவரின் உதவியைக் கோரினான். அந்த முதியவரும், அவருடைய இரண்டு பிள்ளைகளும், துப்பாக்கியோடு தயாராகக் காத்திருந்தனர். ஜோவும், தோழனும் அம்மையாரைத் தாக்க வந்த போது அவர்களை நோக்கிச் சுட்டனர். தாக்க வந்தவர்கள் காயத்துடன் தப்பி ஓடினர். மறுநாள் அக்கிள்பெரி முதியவரைச் சந்தித்தான். தாக்க வந்தவர்கள் ஜோவும், தோழனுமே என்று விவரமாக எடுத்துச் சொன்னான். ஊரார் ஆச்சரியப்பட்டு அந்தத் திருடர்களைப் பிடிப்பதற்காக முனைந்தனர்.

உல்லாசப் பயணம் போன பிள்ளைகள் வீடு திரும்பினர் ஆனால் டாம், பெக்கி மட்டும் திரும்பவில்லை. உறவினர் வீட்டுக்கும் அவர்கள் போகவில்லை என்று தெரிந்தது. பெக்கியின் பெற்றோரும், டாமின் சின்னம்மாவும் கவலை அடைந்தனர். பிள்ளைகள் இருவரும் குகையில் வழிதவறிப் போயிருக்க வேண்டும் என்று நம்பினர். அந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவியது. டாமையும், பெக்கியையும் தேடுவதற்காக ஒரு சிறிய படை புறப்பட்டது. பெக்கியின் அப்பாவாகிய நீதிபதி தாட்சர் அதற்குத் தலைமை ஏற்றார். உணவுப் பண்டங்கள், கயிறு, மெழுகுத் திரி — ஆகியவற்றை எடுத்துக்கொண்டு மக்கள் திரளாகக் குகைக்குச் சென்றனர். குகை பெரிதாகவும், பாதைகள் குறுக்கு நெடுக்காகவும் இருந்தன. சுவரில் 'டாம்' 'பெக்கி' என்ற பெயர்கள் மெழுகுத் திரியின் புகையால் எழுதப்பட்டிருந்தன. ஆனால் மூன்று நாட்கள் தேடியும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நான்கு நாட்களுக்கு முன்பு மற்ற சிறுவர்களுடன் ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும், குகைப் பாதையில் நடந்த டாமுக்கும், பெக்கிக்கும் திரும்பி வர வழி தெரியவில்லை. திடீரென வௌவால்கள் புறப்பட்டு அவர்களைத் தாக்கின. எவ்வளவு விரட்டியும் அவை போகவில்லை. மேலும் மேலும் பறந்து வந்து தாக்கின. மெழுகுத் திரி அணைந்தது. அவர்கள் வாசலை நோக்கித் திரும்பி ஓட நினைத்தனர். இருட்டில் வழி தப்பிவிட்டது. குகையின் வளைந்த பாதைகளில் இருவரும் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருந்தனர்.

பெக்கி சோர்ந்து போனாள். அவளால் நடக்க முடியவில்லை. தரையில் உட்கார்ந்து விட்டாள். 'இனிமேல் அந்த இருட்டிலேயே இருக்க வேண்டியதுதானோ, வீட்டுக்குப் போகவே முடியாதோ' என்ற பயம் அவளைப் பிடித்துக் கொண்டது. — அவள் அழ ஆரம்பித்தாள். டாம் ஆறுதல் சொன்னான். கையிலிருந்த உணவை இருவரும் பகிர்ந்து உண்டனர். பிறகு டாம் அங்கிருந்த ஒரு கல்லின் மீது கயிற்றைக் கட்டினான். அதைப்பிடித்துக் கொண்டு வழியைத் தேடினான்.

பாதை வளைவு திரும்பியதும், ஓர் அதிசயம் நிகழ்ந்தது. டாமின் எதிரில் ஒரு மனிதன் எரியும் மெழுகுத் திரியுடன் வேகமாக ஓடிவந்தான். வந்தது வேறு யாருமல்ல, இன்ஜன் ஜோதான்! டாம் பயத்தால் உறைந்து போனான். நல்லவேளை, ஜோ டாமைக் கவனிக்கவே இல்லை. தலைதெறிக்கக் குகைக்குள் ஓடிக் கொண்டிருந்தான்.

டாம் நம்பிக்கையை இழக்காமல் தொடர்ந்து வழியைத் தேடினான். ஓரிடத்தில் சூரிய வெளிச்சம் உள்ளே வந்து கொண்டிருந்தது. அருகில் சென்று பார்த்தான். சுவரில் ஓர் ஓட்டை இருந்தது. உடனே பெக்கியை அழைத்தான். ஓட்டை வழியாக இருவரும் வெளியே குதித்து ஊரை அடைந்தனர். அவர்களுடைய சந்தோஷத்திற்கு அளவே இல்லை. டாமையும், பெக்கியையும் ஒரு வண்டியில் உட்கார வைத்து ஊர்வலமாக அழைத்துப் போனார் நீதிபதி தாட்சர். குழந்தைகள் இருவரும் நலமாகத் திரும்பி வந்த நிகழ்ச்சியை ஊர் மக்கள் ஒரு விழாவாகக் கொண்டாடினர்.

நீதிபதி தாட்சர் அந்தக் குகையினால் வரும் ஆபத்துக்களைத் தடுக்க விரும்பினார். ஆகவே ஓர் இரும்புக் கதவைப் போட்டுக் குகையின் வாசலை மூடிவிட்டார்.

இது முதலில் டாமுக்குத் தெரியாது. பிறகுதான் தெரிந்தது. உடனே, "குகையை மூடிவிட்டீர்களே! உள்ளே ஜோ இருக்கிறானே"



என்று டாம் பதறினான். நீதிபதியும் அவருடைய ஆட்களும் குகையின் கதவைத் திறந்தனர். கதவின் அருகிலேயே ஜோ இறந்து கிடந்தான். அருகில் அவனுடைய கத்தி இருந்தது. கத்தியால் கதவை உடைத்துக் கொண்டு வெளியே வர முயன்றிருக்கிறான். முடியவில்லை. பசியால் இறந்து போய் விட்டான். ஜோவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

''ஜோவின் புதையல் அந்தக் குகையில்தான் இருக்க வேண்டும். நான் தேடப் போகிறேன். நீயும் துணைக்கு வருகிறாயா?'' என்று அக்கின்பெரியை டாம் அழைத்தான். அக்கின்பெரி இசைந்தான். தங்கள் பயணத்திற்கு வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டு இருவரும் அந்தக்குகைக்குச் சென்றனர். முன்பு டாமும், பெக்கியும் தப்பித்து வெளியே வந்தார்களே அதே ஓட்டையின் வழியாக உள்ளே, குதித்தனர். குகையில் புதையலைத் தேடித் தேடி அலைந்தனர். ஓரிடத்தில் சுவரில் ஒரு பெரிய அடையாளம் வரையப்பட்டிருந்தது. கீழே காலடிச் சுவடுகளும், எரிந்த தீக்குச்சிகளும் காணப்பட்டன. அந்த இடத்தில்தான் ஜோவின் புதையல் இருக்கவேண்டும் என்று டாம் தீர்மானித்தான்.

டாமும், அக்கின்பெரியும் மண்ணைத் தோண்டினர். அடியில் ஒரு பெட்டி தெரிந்தது. அதை வெளியே எடுத்துத் திறந்தனர். பெட்டி நிறையப் பொற்காசுகள் பளபளவென்று கண்ணைப் பறித்தன. சிறுவர்கள் இருவரும் சிரித்தனர்; ஆடினர்; பாடினர்; ஆனந்தக் கூத்து ஆடினர்.

பெட்டி கனமாக இருந்தது. தூக்க முடியவில்லை. தங்களிடம் இருந்த பைகளில் அந்தப் பவுன் காசுகளை நிரப்பிக் கொண்டனர். இருவரும் படகில் ஏறி ஊர் திரும்பினர். ஊரை அடைந்ததும் ஒரு நண்பனின் வண்டியை இரவல் வாங்கிக் கொண்டு அதில் பைகளை ஏற்றிச் சென்றனர்.

தன்னைக் காப்பாற்றிய அக்கின்பெரியைப் பாராட்டுவதற்காக டக்ளஸ் அம்மையார் ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்திருந்தார். எல்லோரையும் அழைத்தார். இரவல் வண்டியில் வந்து கொண்டிருந்த டாமையும், அக்கின்பெரியையும் நண்பர்கள் எதிர்கொண்டு வரவேற்றனர். அவர்களை விருந்து மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். தங்கக் காசுகளை ஏற்றிய வண்டியும் பின்னால் சென்றது. மண்டபத்தில் விருந்தினர்கள் குழுமியிருந்தனர்.

அக்கிள்பெரியைப் பார்த்து, ''அக்கிள்! நீ என் உயிரைக் காப்பாற்றினாய். இனிமேல் நீ என்னோடு வந்து தங்கலாம். நான் உனக்கு அம்மாவாக இருந்து அன்பு செலுத்துவேன். என் சொத்தில் பாதியை உனக்குத் தருகிறேன். நீ அனாதையாகவும் ஏழையாகவும் இருக்கவேண்டாம்'' என்று டக்ளஸ் அம்மையார் பேசினார்.

''அக்கிள்பெரி ஏழை இல்லை! பணக்காரன் ஆகிவிட்டான்!'' என்று சொல்லிக் கொண்டே டாம் பைகளை எடுத்து வந்தான். கலகலவென்று காசுகளை மேசை மீது கொட்டினான். ''இதில் ஒரு பாதி அவனுடையது. மறுபாதி என்னுடையது'', என்று தொடங்கி ஜோவின் புதையலைக் கண்டுபிடித்த செய்தியை விரிவாக டாம் எடுத்துரைத்தான். வியப்பால் விருந்தினர்கள் வாயடைத்து நின்றனர்.

நீதிபதி தாட்சர் டாமின் நெஞ்சத் துணிவைப் பாராட்டினார். எதிர்காலத்தில் அவன் ஒரு சிறந்த போர் வீரனாக வருவான் என்று சொன்னார். அவர் அந்த இரண்டு சிறுவர்களுக்கும் பல விதங்களிலும் உதவி செய்தார். பணத்தை அவர்கள் பெயரில் வங்கியில் போட்டார். சிறுவர்கள் பணக்காரர்களாகிச் சந்தோஷமாக இருந்தனர்.

டக்ளஸ் அம்மையார் அக்கிள் பெரியைப் பள்ளியில் சேர்த்தார். அவன் மீது அன்பைப் பொழிந்தார். ஆனால், அக்கிள்பெரிக்குப் பள்ளிக்கூடம் கசந்தது! ஒழுங்கும், கட்டுப்பாடும் ஒரு சிறைச்சாலையாகத் தோன்றின. சீரான வாழ்க்கையில் அவன் சிந்தை லயிக்கவில்லை. யாருக்கும் தெரியாமல் ஒருநாள் அக்கிள்பெரி வீட்டை விட்டு ஓடிவிட்டான்.

டாம் அக்கிள்பெரியைத் தேடிக் கண்டுபிடித்தான். அழுக்குச் சட்டையோடு ஒரு பாழ்மனையில் அவன் ஆனந்தமாகப் புகைபிடித்துக்கொண்டிருந்தான். டாம் அவனைக் கண்டித்து வீடு திரும்புமாறு அழைத்தான். அக்கிள்பெரி மறுத்தான். ''ராபின் ஹூடைப் போல நான் ஒரு படை திரட்டப் போகிறேன். செல்வந்தர்களின் பணத்தை எடுத்து ஏழைகளுக்கு அளிக்கப் போகிறேன். அதில் சோம்பேறிகளுக்கு இடம் இல்லை. ஒழுங்கானவர்கள் மட்டுமே சேரலாம். இப்போது என்னோடு வந்தால் நீயும் பிரபலமாகலாம்'' என்று டாம் வாதாடினான். அக்கிள்பெரி வீடு திரும்பினான்!


MARK TWAIN எழுதிய 'THE ADVENTURES OF TOM SAWYER' என்ற ஆங்கிலக் கதை, சுருக்கமாக மேலே சொல்லப்பட்டுள்ளது.

எத்தனை எத்தனை இராமசாமிக் கவிராயர்கள்



சென்ற நூற்றாண்டில் 'இராமசாமிக் கவிராயர்' என்ற பெயரில் பல புலவர்கள் வாழ்ந்து வந்தார்கள். நல்ல புலவர்களாகவும், மக்களின் மதிப்பைப் பெற்றவர்களாகவும் அவர்கள் விளங்கினார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் அவர்களுடைய ஊர்ப் பெயருடன் சேர்த்தே சொல்லுவார்கள். அப்போதுதான் புரியும்.

மதுரை இராமசாமிக் கவிராயர்,
மானாமதுரை இராமசாமிக்கவிராயர்
மிதிலைப்பட்டிஇராமசாமிக்கவிராயர்,
சேதனப்பட்டு இராமசாமிக்கவிராயர்
சேற்றூர் இராமசாமிக் கவிராயர்.
உடுமலைப்பேட்டை இராமசாமிக் கவிராயர்
தென்குழந்தாபுரி இராமசாமிக் கவிஞர்.
-இப்படிப் பலர் வாழ்ந்தார்கள்.



படமும் பாடமும்

குமாரி ஆண்டாள் பிரியதர்சினி

“அம்மா... நான் ஸ்கூலுக்குப் போய் வர்றேன்!'' — முத்து, தோளில் காக்கிப் பையுடன் குடிசைக்கு வெளியே வந்தான். பின்னாலேயே வந்த அவன் அம்மா அன்னம், 'மத்தியானமா லீவு போட்டுட்டுச் சீக்கிரம் வந்துடுடா... இன்னிக்குப் புதுப்படம் போடுறாங்க. சீக்கிரம் போனாத்தான் டிக்கெட் கிடைக்கும்...!' என்றாள்.

''சரியம்மா... சாப்பாட்டு மணி அடிச்சதும் வந்துடறேன்'' — என்றபடி துள்ளிக் குதித்து ஓடினான் முத்து. அவன் பையைத் தூக்கிக்கொண்டு பள்ளிக்கூடம் செல்வதைப் பார்த்த அன்னத்திற்குப் பெருமையாயிருந்தது! குடிசைக்குப் பக்கத்திலுள்ள கார்ப்பரேஷன் பள்ளியில்தான் படிக்கிறான் முத்து. அன்னத்தின் ஐந்து பிள்ளைகளில், அவனுக்கு மட்டும்தான் படிப்பின் மீது அடங்காத ஆர்வம். மற்றப் பிள்ளைகள் எதிலும் சூட்டிகை இல்லை... அவன் அப்பா இறந்த பின்பு, தியேட்டரில் முன்கூட்டியே டிக்கெட்டுகள் வாங்கி, கூட்டம் சேர்ந்ததும் 'ஹவுஸ் புல்' போர்டைப் பார்த்து, கையைப் பிசையும் நபர்களிடம் அதிக விலைக்கு டிக்கெட்டுகளை விற்று, சாப்பிட்டு வருகிறார்கள்.

தினமும், பள்ளிக் கூடத்திலிருந்து வந்ததும், முத்துதான் இந்த வேலையிலும் அன்னத்திற்கு உதவியாக இருக்கிறான். 'மத்தியானம் முத்து வர்றதுக்குள்ளே சோறு பொங்கி வச்சாத்தான் கூட்டத்துக்கு முன்னாடிப் போய் டிக்கெட் வாங்கலாம்!' என்று எண்ணியபடி, அன்னம், மண்பானையில் தண்ணீர் வைத்து, சமைக்க ஆரம்பித்தாள்!

முத்துவிற்கு முதல் பீரியட் தமிழ்ப் பாடம். தமிழாசிரியர் கணேசன் நன்றாகப் பாடம் சொல்லித் தருவார். காந்தியவாதியான அவருக்குக் கோபமே வராது... எப்போதும் கதராடைதான் உடுத்துவார். பொருட் செல்வம் இல்லையென்றாலும், கல்விச் செல்வம் நிறைந்து, நன்றாகப் படித்து மார்க் வாங்கும் முத்துவின் மீது, அவருக்குத் தனிப் பிரியம்... அன்று, ஐந்தாம் பாடம் நடத்தப் போவதாய்ச் சொல்லிவிட்டு, முத்துவை எழுந்து பாடத்தைப் படிக்கச் சொன்னார்.

நம் தேசத் தந்தை காந்தியடிகளைப் பற்றியது அப்பாடம். அவரது பிறப்பு, வளர்ப்பு, படிப்பு, உண்மை, திருடாமை, அஹிம்சை, பிறருக்கு உதவும் பண்பு போன்ற கொள்கைகளில் அவருக்கிருந்த பிடிப்பு, இதையெல்லாம் அந்தப் பாடம் விவரித்தது. காந்திஜியைப் பற்றிப் பெரிதும் புகழ்ந்து, மாணவர்களும் உண்மையாய் உழைத்து வாழ்க்கையில் முன்னேற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார் ஆசிரியர்...!

அப்போதே முத்துவுக்குக் காந்திஜியின் கொள்கைகளில் ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. 'பொய் சொல்லாமல், திருடாமல், யாரையும், ஏமாற்றாமல், நல்லபடியாய்ப் படிச்சு வேலை பார்த்து, மத்தவங்களுக்கு உதவணும்!'' என்று முடிவு செய்து கொண்டான். மற்ற வகுப்புகளிலும்,

அவனுக்குக் காந்தியடிகளைப் பற்றிய சிந்தனைதான்.

சாப்பாட்டு மணி அடித்தது. வீட்டிற்கு வந்து, அம்மாவுடன் சேர்ந்து சாப்பிட்டான். பிறகு வெண்கலப் பானையை அட்கு வைத்து, அம்மா வாங்கி வைத்திருந்த ரூபாயை எடுத்துக் கொண்டு, அம்மாவுடன் புறப்பட்டான் முத்து.

போகும் வழியெல்லாம் அம்மாவிடம் காந்திஜியைப் பற்றிய பேச்சுத் தான். அம்மா, அவன் சொல்லியதற்கெல்லாம் 'உம் கொட்டிக்கொண்டே வந்தாலும், அவள் நினைவெல்லாம் தியேட்டரில்தான். ''நாம் போறதுக்குள்ளே கும்பல் சேர்ந்து, நீளமான 'கியூ' இல்லாமல் இருக்கணும் கடவுளே...! இன்னிக்குக் கொஞ்சமாவது ரூபாய் கிடைச்சால்தான் நாளைக்குச் சாப்பிட முடியும்...'' என்று எண்ணிக் கொண்டே, முத்துவின் கையைப் பிடித்து, 'விடுவிடு'வென நடந்தாள் அன்னம்.

அதற்குள் தியேட்டரில் கூட்டம் சேர்ந்து விட்டது. புதுப் படம் ஆதலால் பிளாக்கில் டிக்கெட் விற்றுப் பிழைக்கும் பலர் கியூவில் நின்றிருந்தார்கள். ''ஏலே முத்து... நீ போய் அந்தக் கியூவிலே நில்லுடா... நான் 2.90 கியூவிலே நிற்கிறேன்...!'' என்று சொல்லி, முத்துவிடம் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனாள் அன்னம்.

கியூவில் நின்றுகொண்டே, சுற்றிலும் ஒட்டியிருந்த போஸ்டர்களிலும் பானர்களிலும் கண்களை ஓட்டினான் முத்து. ''அட... இது காந்தித் தாத்தாவாச்சே...!'' போஸ்டர்களிலெல்லாம் பொக்கை வாயைத் திறந்து காந்தியடிகள் சிரித்துக் கொண்டிருந்தார்.


தனக்கு முன் நின்றிருந்த பெரியவரைக் கேட்டான் முத்து. ''இது காந்திஜியைப் பத்தின படமா ஐயா..?''

பிரோ

''நான் எந்த சினிமாவுக்குப் போனாலும் 'பி' ரோவில் உட்கார மாட்டேன்.''

''ஏன்?''

''முன்னாடி 'பி' ரோ இருக்குதே! மறைக்குமே! - புரசை சிவம்



''ஆமாம் தம்பி... அவரோட வாழ்க்கை, அஹிம்சை, சத்தியம், அரசியல் போராட்டம் இதைப் பற்றின படம்தான் இது... இதுக்கு எட்டு ஆஸ்கார் அவார்டுகூடக் கிடைச்சிருக்கே தெரியுமா உனக்கு...?'' என்றார்.

''அப்படியா..! அப்போ ரொம்ப நல்ல படமாய் இருக்குமே இது...?'' என்ற முத்துவின் மனத்தில் ஒரு போராட்டம்.


''காந்தித் தாத்தா, வாழ்நாளெல்லாம் 'திருடக் கூடாது, பொய் பேசக் கூடாது, மத்தவங்களை ஏமாத்தக் கூடா'துன்னு சொல்லியிருக்காரே....! அவரைப் பத்தின படத்துக்குக்கூட நான் முன்னாடியே டிக்கெட்டை வாங்கி, அப்புறம் பிளாக்கிலே அதிக விலைக்கு விக்கப் பார்க்கிறேனே....! இது ஜனங்களை ஏமாத்துறதுதானே! காலையிலேதானே, காந்திஜியுடைய கொள்கைப்படி நடக்கணும்னு முடிவு செஞ்சேன்! அதனாலே, இன்னிக்கு மட்டுமில்லாமே, என்னிக்குமே நான் பிளாக்கிலே டிக்கெட் விற்க மாட்டேன்!'' என முடிவு செய்து கொண்டான் முத்து.

'டிக்கெட் கவுண்டர்' திறந்தபோது தன் அம்மாவிற்கும் தனக்கும் சேர்த்து இரண்டு டிக்கெட்டுகளை மட்டுமே வாங்கிக்கொண்டு, மீதி ரூபாயை அம்மாவிடமே கொடுத்துவிட்டான் அவன்.

''ஏண்டா, மீதி டிக்கெட்டல்லாம் எங்கே...?'' அம்மா பதைபதைத்துக் கேட்டபோது, முத்து சாந்தமாக, ''ஜனங்களை ஏமாத்தற இ ந் த த் தொழிலை இனிமேல் நான் செய்ய மாட்டேம்மா...! பள்ளிக்கூட நேரம் தவிர, மீதி நேரத்திலே மூட்டை தூக்கியாவது உன்னைக் காப்பாத்தறேன். ஆனால், பிளாக்கிலே டிக்கெட் வித்து, பொய் சொல்லிப் பிழைக்க மாட்டேன்!'' என முடிவாகச் சொன்னவன், 'உனக்கும், எனக்கும் டிக்கெட் வாங்கியிருக்கேன். வாம்மா... காந்தித் தாத்தாவைப் பார்க்கப் போகலாம்'' என்று அன்னத்தின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே உ ள் ளே சென்றான்.

'என்ன ஆச்சு, இந்தப் பிள்ளைக்கு..!' எனத் திகைத்தாள் அன்னம்.

சிறுவன் கரம்சந்த் காந்தியின் மனம் திருந்த உதவிய ஓர் 'அரிச்சந்திரன் கதை' போல், முத்துவின் மனம் திருந்த ஒரு 'காந்தி' படம் கை கொடுத்தது....!



அவர்கள் நண்பர்கள்

ஆழி.வே.ராமசாமி

''ராமுவும் சீனுவும் இப்படி எலியும் பூனையுமாய் ஆகிவிட்டான்களே!'' என்றான் ஓங்காரம்.

''ரெண்டு பேரும் எவ்வளவு ஒற்றுமையா இருந்தானுங்க! ஒருத்தனைப் பத்தி யாராவது குறை சொன்னால், மத்தவன் சண்டைக்குப் போயிடுவானே! இப்போ பார்; அவனுங்க நேருக்கு நேர் பார்த்துக்கவே விரும்பலேயே!'' என்றான் மணி.

அது உண்மைதான். எப்படி இருந்தவர்கள் ராமுவும் சீனுவும்! இருவரும் அண்ணன் தம்பியோ என்றுகூடப் பலர் நினைத்ததுண்டு. இருவரும் சேர்ந்தே பள்ளிக்கூடம் வருவார்கள்; சேர்ந்தே வீட்டுக்குப் போவார்கள். விடுமுறை நாட்களிலும் ஒன்றாக இருப்பார்கள்.

பின்னே எப்படி அவர்கள் பிரிந்தார்கள்?

வீரமுத்து, ஒருநாள் காப்பி அடிப்பதற்காக ராமுவின் கணக்கு நோட்டைக் கேட்டான்.

''நான் தர மாட்டேன். கணக்கைக் காப்பி 'அடிச்சப் போட்டா உனக்கு நல்லதல்ல'' என்றான் ராமு.

வீரமுத்துவுக்குக் கோபம் வந்தது. ''போடா இனி மூக்குப் பயலே!'' என்றான்.

ராமுவின் மூக்கு கொஞ்சம் கூர்மையாக இருக்கும்.

வீரமுத்து சொன்னதைக் கேட்டுக் கொண்டே வந்த சீனு, அவனைக் கடிந்து கொண்டான். ''ஒருத்தரைப் பத்தி இப்படியெல்லாம் குறைசொல்லக் கூடாதுடா'' என்றான்.

இப்படியே ஒருவருக்கொருவர் பேசி வார்த்தை முற்றிவிட்டது.

ராமுவையும் சீனுவையும் எப்படியும் பிரித்து விடுவது என்று முடிவு செய்தான் வீரமுத்து.

ராமு ஒருநாள் பள்ளிக்கூடம் வரவில்லை. அன்றைக்குப் பார்த்து வீரமுத்து சீனுவிடம், 'ராமு அதைச் சொன்னான், இதைச் சொன்னான்' என்று கோள் மூட்டி விட்டான். சீனு முதலில் நம்பவில்லை. ஆனாலும் திருப்பித் திருப்பி அந்தச் செய்தி பலராலும் சொல்லப் பட்ட போது 'அப்படியும் இருக்குமோ' என்று எண்ணத் தொடங்கினான்.

எல்லாம் வீரமுத்துவின் ஏற்பாடு!

மறுநாள் ராமுவிடம், 'சீனு அப்படிச் சொன்னான், இப்படிச் சொன்னான்' என்று புளுகி வைத்தார்கள்.

அப்புறம் என்ன? ராமுவுக்கும் சீனுவுக்கும் மனவருத்தம் வந்துவிட்டது. சரியாகப் பேசுவதில்லை. கடைசியில், பேச்சு வார்த்தைகளே நின்று போயின.

அவர்கள் இருவரும் முன்போல ஒன்றாகச் சேர்ந்து வருவதில்லை. ஒருவர் பக்கத்தில் ஒருவர் உட்காருவதில்லை. இருவரும் வேறு வேறு பெஞ்சுகளுக்குப் போய்விட்டார்கள்.

இதைத்தானே வீரமுத்துவும் அவன் நண்பர்களும் எதிர்பார்த்தார்கள்?

முன்பெல்லாம் ராமு தன் அம்மாவிடம், 'என் ஃபிரண்டு சீனு சொன்னான், என் ஃபிரண்டு சீனு கேட்டான்' என்று அடிக்கடி சொல்லுவான்.

இப்போது அப்படியெல்லாம் பேசாததைக் கண்டு அவன் அம்மாவே, 'என்னடா உன் ஃபிரண்டைப் பத்தி நீ பேசறதேயில்லே?' என்று கேட்பாள்.

ராமு ஏதாவது சொல்லி மழுப்பி விடுவான்.

அவர்கள் பேச்சை நிறுத்தி ஒரு வாரம் ஆகியிருக்கும்.

ஒருநாள் மாலையில் பள்ளிக்கூடம் விட்டதும் எல்லோரும் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

ராமுவும் சீனுவும் ஒரே வழியாகத்தான் வீட்டுக்குப் போகவேண்டும். சீனு முன்னால் போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால்,



சிறிது தூரத்தில் ராமு வந்து கொண்டிருந்தான்.

சாலையில் அவர்கள் இருவரையும் தவிர வேறு யாரும் இல்லை.

பின்னால் வந்து கொண்டிருந்த ராமு திடுக்கிட்டான். காரணம், முன்னால் போய்க் கொண்டிருந்த சீனு திடீரென்று குப்புற விழுந்துவிட்டான்!

அவனுடைய புத்தகப் பையும் டிஃபன் பாக்ஸும் சிதறி விழுந்தன!

''ஐயோ, அம்மா...!'' என்ற ஓலம் எழுந்தது.

ராமு அவனை நோக்கிப் பாய்ந்து போய்த் தூக்கினான்.

''என்னடா சீனு! என்ன? உனக்கு என்னடா வந்தது?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

சீனு பதில் ஒன்றும் சொல்லவில்லை. 'புஸ் புஸ்' என்று மூச்சு விட்டான்.

ராமுவுக்கு வெடவெட என்று உடல் நடுங்கியது. அவன் கண்கள் கலங்கின.

''டேய் சீனு, இங்கே பாருடா! என்னடா உனக்கு?'' என்று துடித்தான்.

''ம... ய... க்... க... ம்'' என்றான் சீனு குமுறிக்கொண்டே.

ராமு அவனைத் தன்மேல் சாய்த்துக் கொண்டு, அவன் சட்டையிலிருந்த மண்ணையெல்லாம் தட்டிவிட்டான்.

புத்தகப் பையையும், டிஃபன் பாக்ஸையும் எடுத்துக் கொண்டான். அவன் கையைப் பிடித்தபடி, ''மெதுவா நடந்து வர முடியுமாடா, சீனு? வீடு இன்னும் கொஞ்ச தூரம்தானே இருக்கு...?'' என்றான்.

இருவரும் நடந்தார்கள்.

சீனு, ராமுவின் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு, ''நீ ரொம்ப பயந்துட்டியாடா ராமு?'' என்று கேட்டான்.

''ஆமாம். உனக்கு என்ன? மயக்கமா?''

சீனு சிரித்தான்.

''என்ன சிரிக்கிறே?''

''மயக்கம் ஒண்ணுமில்லை!''

''அப்புறம்?''

''சும்மா மயக்கமா விழுற மாதிரி விழுந்தேன்!''

ராமுவுக்கு ஒன்றும் புரியவில்லை. ''நீ என்ன சொல்றே?'' என்று கேட்டான் குழப்பத்துடன்.

''நாம பேசிக்கிறதில்லையா? எனக்கு மனசே சரியில்லை. உண்மையிலேயே என் மேலே உனக்கு அன்பு இருக்கான்னு பார்க்கிறதுக்குத்தான் வேணுமின்னே கீழே விழுந்தேன். ஆனா இன்னும் நீ என் மேலே அன்பாத்தான் இருக்கிறே! எனக்கும் உன் மேலே கோபம் இல்லைதான். ஆனால் எப்படி உன்கிட்டே பேசுறதுன்னு தயக்கமா இருந்திச்சு. அதுக்குத்தான் இப்படி ஒரு நடிப்பு!'' என்றான் சீனு.

''சீ! போடா! ஒரு நிமிஷம் நான் எப்படித் துடிச்சுப் போயிட்டேன் தெரியுமா? ஒருவருக்கொருவர் மனசு விட்டுக் கேட்டிருந்தா, இந்த வருத்தம் வந்திருக்கப் போவதில்லை!'' என்றான் ராமு.

இருவரும் கைகளைக் கோத்துக் கொண்டு நடந்தார்கள்.

மறுநாள் அவர்கள் இருவரும் சேர்ந்து பேசிக்கொண்டு வருவதைக் கண்டால் எல்லோரும் ஆச்சரியப் பட்டுத்தான் போவார்கள்!

மூளைக்கு வேலை!

– S. நரசிம்மன் –



குடியரசு தின மாயச் சதுரம்

குடியரசு தினத்தன்று சீனு தன்னுடைய நண்பர்களுடன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய நண்பன் கிட்டுவும், கிட்டுவின் தங்கை பட்டுவும் அங்கே வந்தார்கள். (கிட்டுவும், பட்டுவும் கணக்கில் புலி என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.)

அப்போது சீனு கிட்டுவிடம், ''என்ன கிட்டு! ஏதாவது புதிர்க் கணக்குக் கொண்டு வந்திருப்பாயே!'' என்று கேட்டான். அதற்குக் கிட்டு, ''இந்த ஆண்டு குடியரசு தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக நான் ஒரு 'மாயச் சதுரம்' (Magic square) கண்டு பிடித்தேன். அதை ஒரு புதிர் மூலம் உங்களோடு பகிர்ந்து கொள்ளலாமென்று நினைக்கிறேன்'' என்று கூறி ஒரு பேப்பரில் கீழ்க்கண்டவாறு ஒரு சதுரம் வரைந்தான்.

26	1	19	84

அதன் முதல் வரிசையில் குடியரசு தினத் தேதியை 26 1 19 84 என்று எழுதியபின் ''இந்தச் சதுரத்தின் மற்ற வெற்றிடங்களை வெவ்வேறு எண்களைக் கொண்டு நிரப்ப வேண்டும். நிரப்பிய பின் இச்சதுரத்தின் எண்களை இடமிருந்து வலமாகவோ, மேலிருந்து கீழாகவோ, மூலைக்கு மூலையோ (ஆக 10 வழிகளில்) எப்படிக் கூட்டினாலும் 130 வர வேண்டும். மேலும் படத்தில் பட்டையாகக் காட்டிய கோடுகளின் மூலமாக இப்பெரிய சதுரத்தை 4 சிறிய சதுரங்களாக வெட்டியபின் கிடைக்கும் ஒவ்வொரு சிறிய சதுரத்திலுள்ள 4 எண்களும் சேர்ந்து 130 வர வேண்டும். இந்த முறையில் எண்களையிட்டு இச்சதுரத்தை நிரப்ப உங்களால் முடியுமா?'' என்று கேட்டான்.

சீனுவும் நண்பர்களும் முழிமுழி என்று முழித்தனர். கிட்டுதான் கடைசியில் விடையைக் கூறினான்.

எங்கே, உங்களால் இந்த மாயச் சதுரத்தை நிரப்ப முடிகிறதா என்று பாருங்களேன்.

விடை

அந்தக் குடியரசு தின மாயச் சதுரம்.

26	1	19	84
78	25	9	18
10	21	75	24
16	83	27	4

இதன் எண்களை எப்படிக் கூட்டினாலும் 130 வரக் காணலாம். மேலும் இச்சதுரத்தை நடுவில் வெட்டிக் கிடைக்கும் 4 சிறிய சதுரங்களின் கூட்டுத் தொகையும் 130 ஆக இருக்கக் காணலாம். மேலும் பெரிய சதுரத்தின் 4 மூலைகளிலும் உள்ள எண்களைக் கூட்டினாலும் 130 வருவதைக் காணலாம்.

$26 + 1 + 78 + 25 = 130$
$10 + 21 + 16 + 83 = 130$
$19 + 84 + 9 + 18 = 130$
$75 + 24 + 27 + 4 = 130$
$26 + 84 + 16 + 4 = 130$

1984-ஆம் ஆண்டிற்கு ஒரு மாயச் சதுரம்

ஆங்கிலத்தில் 'மாஜிக் ஸ்கொயர்' (Magic square) என அழைக்கப்படும் மாயச் சதுரங்களைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். (ஒரு சதுரத்தினுள் எண்களை ஒரு குறிப்பிட்ட முறையில் நிரப்புவதன் மூலம், இடமிருந்து வலமாகவோ, மேலிருந்து கீழாகவோ, மூலைக்கு மூலையோ எப்படிக் கூட்டினாலும் ஒரே கூட்டுத் தொகையைக் கொடுக்கும் சதுரங்கள் 'மாயச் சதுரங்கள்' என அழைக்கப்படுகின்றன.)

அப்படிப்பட்ட ஒரு மாயச்சதுரம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இது 1984-ஆம் ஆண்டைச் சிறப்பிப்பதற்கென்றே அமைக்கப்பட்டுள்ளது.

185 முதல் 311 முடிய உள்ள அனைத்து ஒற்றைப்படை எண்களையும் உபயோகித்து, கூட்டுத் தொகை 1984 வருமாறு இது அமைக்கப்பட்டுள்ளது.

இதிலுள்ள எண்களை மேலிருந்து கீழ் எட்டு, இடமிருந்து வலம் எட்டு, மூலைக்கு மூலை இரண்டு - ஆக 18 வழிகளில் எப்படிக் கூட்டினாலும் இந்த வருடத்தைக் குறிக்கும் 1984 வரக் காணலாம்.

இது மேலும் சில சிறப்புகளையும் கொண்டுள்ளது. இச்சதுரத்தின் நடுக்கோடு வரையுள்ள எண்களை மட்டும் கூட்டினால் 1984-இல் பாதியான 992 வரக் காணலாம். அது மட்டுமல்ல. நடுவில் கனத்த கோடுகளுக்குள் உள்ள சதுரத்தை மட்டும் எடுத்துக் கொண்டால், அதுவும் ஒரு மாயச் சதுரமாக இருப்பதைக் காணலாம். அதன் கூட்டுத் தொகையும் 1984-இல் பாதியான 992 ஆகவே இருக்கும்.

நீங்களும் கூட இந்த மாதிரியான மாயச் சதுரங்களை அமைக்க முயலலாமே!

303	195	197	297	311	187	189	305
209	285	283	215	201	293	291	207
225	269	267	231	217	277	275	223
255	243	245	249	263	235	237	257
239	259	261	233	247	251	253	241
273	221	219	279	265	229	227	271
269	205	203	295	281	213	211	287
191	307	309	185	199	299	301	193

புதிர்: இங்கே உங்கள் மூளைக்கு ஒரு வேலை கொடுக்கிறேன். செய்துதான் பாருங்களேன்.

கூட்டுத்தொகை 1985 வரும்படி ஒரு மாயச்சதுரம் அமையுங்கள், பார்ப்போம்.

395	388	401	394	407
408	396	389	402	390
391	409	397	385	403
404	392	405	398	386
387	400	393	406	399

விடை: 1985–ஆம் ஆண்டிற்கான மாயச்சதுரம் இது. 5 வரிசைகள் கொண்டது. இதில் 385 முதல் 409 முடிய எல்லா எண்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன.

இது போல வரிசையாக உள்ள எண்களைக் கொண்டு, கூட்டுத்தொகை 1985 ஆக உள்ள மாயச்சதுரம் அமைக்க வேண்டுமெனில், அது கட்டாயமாக 5 வரிசைகள் கொண்டதாகவே அமைக்க முடியும். அதுவன்றி வேறு வரிசை எண்ணிக்கைகளைக் கொண்டதாக அமைக்க இயலாது.



நீந்தத் தெரிந்தவர்களுக்கு :-

தனிமையாக நீந்தப் போகக்கூடாது.
சாப்பிட்டவுடன் நீந்தக் கூடாது.
களைப்பாயிருக்கும்போது நீந்தக் கூடாது.
ஆழமான இடத்தில்தான் குதிக்க வேண்டும்.

—நல்வழி.

நோய் பறந்தது!

'விண்மணி'



பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு பரம ஏழை ஒருவன் கந்தல் ஆடையுடன் உணவின்றிப் பசியால் இங்கு மங்குமாக அலைந்து கொண்டிருந்தான். பரம ஏழையான அவனால் வேலை எதுவும் செய்ய முடியாது.

அவனது முகமெல்லாம் உப்பியிருந்தது. உடல் முழுவதுமே மஞ்சள் பூத்து உப்பிக் கொண்டே வந்தது. எல்லோரும் அவனை வெறுத்தனர். அவன் பக்கத்தில் செல்லவே அஞ்சினர். அவனிடமுள்ள நோய் தங்களையும் பற்றிக் கொண்டு விடும் என்ற அச்சமே அதற்குக் காரணம்.

வேறு வழியின்றித் தளர்ந்து, வாடி, வதங்கி நடந்தான். தட்டுத் தடுமாறிக் காடுகளில் புகுந்தான்.

இலைகளையும், தழைகளையும் பறித்துத் தின்ன ஆரம்பித்தான்.

தொடர்ந்து சில நாட்கள் கரிசலாங்கண்ணித் தழைகளைத் தின்றான். வேறு எதுவும் சாப்பிடவில்லை.

என்ன ஆச்சரியம்!

படிப்படியாக உப்பியிருந்த அவனது உடல் பழைய நிலையை நோக்கிச் சென்றது. ஊது காமாலை நோய் குறைந்து கொண்டே வந்தது. மஞ்சள் நிறம் மாறியது.

இவனைக் கண்ட அனைவரும் வியந்தனர். இந்தச் சம்பவத்தின் மூலம் ஓர் உண்மையைக் கண்டனர். அது என்ன உண்மை தெரியுமா?

''ஊதுகாமாலை நோய்க்குக் கரிசலாங்கண்ணித் தழை சிறந்தது'' என்பதுதான்!

அதன் பின்புதான், உப்பில்லாப் பத்தியம் வைத்துக் கரிசலாங்கண்ணித் தழையை மருந்தாகப் பயன்படுத்தி ஊதுகாமாலையை ஓட்டும் முறையை அனுபவத்தில் கண்டு, ஏடுகளில் எழுதினர்.

அந்த ஊரில் செய்தது?



குழந்தைக் கவிஞர்

''அம்மா தாயே! பசிக்குது
அமுது போடு, புண்ணியம்!''
இம்மா திரியே பலமுறை
ஏழை ஒருவன் கதறினான்.

''எதுவும் இல்லை போடவே''
என்று வீட்டுத் தலைவியும்
கதவை ஓங்கிச் சாத்தியே
கவலை இன்றி இருந்தனள்.

''இன்று எதுவும் கிடைத்திட
இல்லை. அதனால் நேற்றுநான்
அந்த ஊரில் செய்தேனே,
அதுபோல் செய்யப் போகிறேன்.''

பிச்சைக் காரன் இப்படிப்
பெரிய குரலில் கூறவே,
அச்சங் கொண்ட அம்மையார்
'ஐயோ', என்றே எழுந்தனள்.

அடுப்பங் கரைக்குச் சென்றனள்
அளவில் லாமல் சோற்றினை
எடுத்து வந்து அவனிடம்
''இந்தா, உண்பாய்'' என்றனள்.

பிச்சைக் காரன் சோற்றையே
பிரிய மாக உண்டதும்
அச்சம் நீங்கி ''என்னநீ
அந்த ஊரில் செய்தனை?''

என்றே அவளும் கேட்கவே
ஏப்பம் விட்ட படி அவன்
''என்ன செய்தேன் தெரியுமா?''
என்று தொடர்ந்து கூறினான்.

''அடுத்த ஊரில் நேற்றுநான்
அலைந்து அலைந்து திரிந்துமே
கிடைக்க வில்லை எதுவுமே,
கிடந்தேன் நானும் பட்டினி.''

''இன்றும் நேற்றைப் போலவே
எதுவும் கிடைக்க வில்லையேல்
என்ன செய்தி ருப்பேன்நான்?
இருந் திருப்பேன் பட்டினி!''


பழைய கதை; புதிய பாடல்!


பாரத நாட்டை ஆண்ட
அரசர்களில் புகழ்
மிகுந்தவர் ஹர்ஷ
வர்த்தனர்.
கன்னோசி தானேஸ்வரம்
இவற்றிலிருந்து
அரசாண்டார்.
இவரைப் பற்றி
ஹியூன் சுவாங்
என்ற சீன யாத்ரீகர்
மிகவும் புகழ்ந்து
எழுதியிருக்கிறார்.
ஹர்ஷ வர்த்தனருடைய
சபையை அலங்கரித்த
பெரும் புலவர்
பாணர்.
அவர் எழுதிய நூல்
ஹர்ஷ சரிதம்.
ஸ்ரீ ஹர்ஷ சரிதம்
இருபைரவாசாரி யாரை அரசர் புஷ்பபூதி வணங்கினர்.
புஷ்பபூதி! உன்னை என் சீடனாக ஏற்றுக்கொண்டேன். இந்த இரத்தினங்கள் இழைத்த வெள்ளித் தாமரை மலர்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.
கதை: ஆனந்தி
படம்: வினு
சுவாமி! தங்களுடைய ஆசியால் எனது ராஜ்யம் செழித்து மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள்.
அட்டஹாசம் என்னும் இந்த வாள் மாமன்னரான தாங்கள் அணிந்து கொள்ளும் தகுதி உடையது.
குருவே! இந்த வாளைக் கொண்டு யாரை வீழ்த்த வேண்டும்?
ஒரு பயங்கரமான பிரும்ம ராக்ஷஸனை இதனால் தாங்கள் வெற்றி கொள்வீர்கள்.


காட்டில் பிரும்ம ராக்ஷஸனைத் தேடிப்போனான் புஷ்பபூதி.
அட்டஹாசம் செய்யும் பிரும்ம ராக்ஷஸனே! அழிந்து போ.
தேவி! என்னுடைய குருவான பைரவாசார்யார் ஒரு வித்யாதரனாக வேண்டுமென்று தவம் செய்து வருகிறார். அவரது விருப்பத்தைத் தாங்கள் நிறை வேற்றவேண்டும்.
வானிலிருந்து வீரலக்ஷ்மி தோன்றினாள்.
புஷ்பபூதி! நீ அஞ்சா நெஞ்சத்துடன் போரிட்டபடியால் வெற்றித் திருமகளான நான் உன்னை வாழ்த்த வந்திருக்கிறேன்.
மன்னனே! உன்னுடைய தன்னலமற்ற செய்கை என்னை மகிழச் செய்கிறது. உன் வம்சம் சூரிய,சந்திர வம்சம் போலக் கீர்த்தி பெறும். உன்னுடைய வம்சத்தில் தோன்றப்போகும் ஹர்ஷ சக்கரவர்த்திக்கு நானே சாமரம் வீசப் போகிறேன்.
வெற்றித் திருமகள் தந்த வரத்தின்படி புஷ்பபூதியின் வம்சத்தில் சிறந்த அரசர்கள் தோன்றினார்கள். அவர்களில் பிரபாகர வர்த்தனர் என்பவர் மகா வீரராக விளங்கினார்.
ஹூணர்களைப் புறமுதுகிடச் செய்தார் பிரபாகர வர்த்தனர்.
ஹூணர்கள் என்ற மான் கூட்டத்திற்கு சிங்கமாக விளங்கும் பிரபாகர வர்த்தனர் வாழ்க! வாழ்க!
பாசறையில்...
வெற்றிமேல் வெற்றிபெற்று வருகிறோம். நமது மன்னருக்கு இணையாகப் பரசுராமரைத் தான் சொல்லலாம்.
சிந்து தேசத்து மன்னனுக்கு நமது மன்னரைப் பற்றி நினைத்தாலே ஜுரம் வந்து விடுமாம். கூர்ஜர நாட்டு மன்னன் தூங்குவதே இல்லையாம்.
தலைநகர் தானேஸ்வரத்தில் வெற்றி ஊர்வலம்.
அரசர் பிரபாகர வர்த்தனர் என்ன கம்பீரமாக இருக்கிறார் பார்த்தாயா?
அரசி யசோமதியும் அரசரும் சேர்ந்திருப்பது சந்திரனும் சூரியனும் அருகருகே வீற்றிருப்பது போல் இருக்கிறது இல்லையா?


மகாவிஷ்ணுவும் லக்ஷ்மி தேவியும் போல் தோன்றுகிறார்கள்.
அன்றிரவு விநோத கனவு கண்டாள் அரசி யசோமதி.
ஆ! என்ன இது?
கனவு வட்டத்தின் மத்தியில் இரண்டு அரசகுமாரர்கள், ஒரு இளங்குமரி நெருங்கி வருகிறார்கள்.
அரசே!
என்ன யசோமதி? கனவு கண்டாயா?
ஆம் அரசே! சூரிய மண்டலத்திலிருந்து இரண்டு அரசிளங் குமாரர்களும் ஒரு இளங்கன்னியும் இறங்கி வந்தார்கள். என் வயிற்றினுள் புகுவதற்கு முயன்றார்கள்.
தேவி! என்ன அற்புதமான கனவு! அதோ! முரசங்கள் முழங்குகின்றன. நல்ல சகுனம்.
நமக்குச் சிறந்த குழந்தைகள் பிறக்கப் போகிறார்கள் என்பதை அறிவிக்கிறது உன் கனவு!
அரசே! உமது இரண்டாவது குமாரன் சக்கரவர்த்திக்குரிய விருதுச் சின்னங்களையும் தரிப்பான். பலவகை யாகங்கள் செய்து தபசும் புகழ் பெறுவான்.
ஒரு குழந்தை பிறந்து அவனுக்கு ஐந்து வயதாகும் போது தம்பி பிறந்தான். சூரிய வழிபாடு செய்யும் ஒருவர் அரண்மனைக்கு வந்தார்.



ராஜ்ய வர்த்தனனுக்குத் தம்பியாகப் பிறந்திருக்கும் இவனை ஹர்ஷ வர்த்தனன் என்று அழைப்போம்.
அண்ணா! நீ பண்டியுடனே விளையாடுவதைப் பார்த்து ராஜ்ய ஸ்ரீ சிரிக்கிறாள் பார்.
நம்மை மன்னர் அழைத்தாராம் போகலாம் வா.
மன்னர் முன்னிலையில்..
ராஜ்ய வர்த்தனா! இவர்கள் மாளவ தேசத்து அரசனின் புதல்வர்கள். நீயும் ஹர்ஷனும் இவர்களோடு வீர விளையாட்டுக்கள் விளையாடித் தேர்ச்சியடையுங்கள்
நாட்கள் சென்றன...
தேவி! ராஜ்யஸ்ரீ மணப் பருவ மடைந்து விட்டாள். கன்யா குப்ஜத்தை ஆண்டு வரும் அவந்தி வர்மனின் மகன் கிரகவர்மனுக்கு ராஜ்யஸ்ரீயை மணம் செய்து தர உத்தேசித்திருக்கிறேன்.
மாவீரன் கிரகவர்மனுக்கும் மகாலக்ஷ்மியைப் போன்ற ராஜ்யஸ்ரீக்கும் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது.
திருமண வைபவங்கள் முடிந்தபிறகு ராஜ்யஸ்ரீ பெற்றோரிடம் விடை பெற்றாள்.
சில காலம் சென்றது...
அரசே! வட திசையில் ஹூணர்கள் படை எடுத்து வரும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் அனைவரும் தங்களைக் காப்பாற்றும்படி விண்ணப்பம் செய்து கொள்கிறார்கள்.


ராஜ்யவர்த்தனன் தந்தையை வணங்கினான்.
அரசே! வடதிசையில் இமயம் வரை சென்று மக்களைத் துன்புறுத்தும் ஹூணர்களை விரட்டியடித்து விட்டு வருகிறேன். அனுமதி தர வேண்டுகிறேன்.
படையுடன் சென்று பகைவரை வென்று புகழுடன், திரும்பு. ராமனுடன் சென்ற லக்ஷ்மணனைப்போல் நீயும் சென்று வா ஹர்ஷா.
ஜெய விஜயீ பவ.
இமய மலைச்சாரலை அடைந்ததும் ராஜ்ய வர்த்தனன், ஹர்ஷனை தாமதிக்கச் செய்தான்.
நான் வடமேற்கு திசை நோக்கிப் படையுடன், செல்கிறேன். நீ இங்கேயே இரு.
ஹர்ஷன் பொழுதுபோக்க வேட்டையாடினான்.
வேட்டையாடி அலுத்து விட்டது. வாயில்லா ஜீவன்களை வதைப்பது மகிழ்ச்சி தரவில்லை. என் மனம் கலங்குகிறது.
கொலுக்குத் திரும்பியபோது தூதன் காத்திருந்தான்..
அரசே! மன்னர் நோயால் பீடிக்கப் பட்டிருக்கிறார். தாங்கள் உடனே தாணேஸ்வரத் துக்குத் திரும்ப வேண்டும்.
உடனே செல்லலாம் இளவரசருக்கும் செய்தி அனுப்புங்கள்.
தலைநகரில் தந்தையை ஹர்ஷன் வணங்கவும்.
ஹர்ஷா! இப்படி மெலிந்து விட்டாயே!
அப்பா! தாங்கள் உடல் நலம் பெற்று எழ வேண்டும்.


அரசன் இறுதி மூச்சுப் பிரிய உடன்கட்டை ஏறத் துணிந்தாள் யசோமதி.
குழந்தாய்! நீ பிறந்ததுமே என் வாழ்க்கையின் பயனை அடைந்து விட்டேன். உலகை ஆளப்பிறந்தவன் நீ. எழுந்திரு. கலங்காதே! அரசனுக்குரிய கடமைகளைத் தவறாமல் செய்வாயாக.
அம்மா! இது என்ன முடிவு? எங்களிடம் கருணை இல்லையா?
குழந்தாய்! என்னைத் தடுக்காதே! மாவீரனின் மனைவி நான். வீரர்களைப் பெற்றெடுத்தவள். உன் தந்தைக்கு முன்னால் சென்று சுவர்க்க வாயிலில் காத்திருப்பேன்.
போர்க்களத்திலிருந்து திரும்பினான் ராஜ்ய வர்த்தனன். வரவேற்றான் தம்பி ஹர்ஷன்.
தாய் தந்தை இருவரையும் ஒன்றாக இழந்து விட்டோம். இருவரும் தெய்வ மானார்கள்.
ராஜ்யவர்த்தனன் மனமுடைந்தான்.
ஹர்ஷா! இந்த வாழ்க்கையே எனக்குப் பிடிக்கவில்லை. இந்த ராஜ்யத்தை ஆளும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். நான் துறவறம் கொள்வதென்று தீர்மானித்து விட்டேன். இனி உடைவாள் எனக்கு எதற்கு?
அண்ணா! பட்டத்தை நான் ஏற்கவேண்டுமென்று கூறுவது நெருப்பைப் போல் என் நெஞ்சைச் சுடுகிறது. தங்களை நம்பி இந்த நாடும் மக்களும் காத்திருக் கிறார்கள்.
அப்போது ஒரு தூதன் ஓடி வந்தான்....
அரசே! மோசம் போனோம். எங்கள் அரசர் கிரகவர்மனை மாளவதேசத்தரசன் நயவஞ்சகமாகக் கொன்று விட்டான்.
ஆ! என் தங்கையின் கதி என்னாயிற்று?


அரசியைச் சிறைப் படுத்தி விட்டார்கள் பிரபு! இந்த நாட்டின் மீதும் படையெடுக்கப் போவதாக வதந்தி.
துறவு பூணுவதற்கு இன்னும் சமயம் வரவில்லை. மாளவ மன்னனைப் பழிக்குப் பழி வாங்கி விட்டு என் அருமைத் தங்கையை விடுதலை செய்து அழைத்து வருவேன்.
நானும் கிளம்புகிறேன்!
ராஜ்யவர்த்தனன் மறுபடி ஹர்ஷனைத் தடுத்தான்.
உனக்கு இங்கே பெரும் பொறுப்பு இருக்கிறது. தலைநகரை விட்டு நாம் இருவரும் சென்றுவிட்டால் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போகும். அரசாங்கக் கடமைகளைச் சரியாகச் செய்து வரவேண்டும்.
நண்பன் பண்டியுடன் கிளம்பினான் ராஜ்யவர்த்தனன்.
பண்டி! வெற்றி அல்லது வீர மரணம்!
உக்கிரமான போரில் மாளவ மன்னன் புறமுதுகிட்டான்.
அரசே! வெற்றி பெற்று விட்டோம். இப்போது ராஜ்யஸ்ரீ இருக்கும் இடத்தைத் தேட வேண்டும்.
உடனே ஆட்களை நான்கு புறமும் அனுப்பு. கன்னோசி முழுவதும் தேடச் சொல்.
பாசறையில் ராஜ்ய வர்த்தனன் ஓய்வெடுத்த போது...
அரசே! கௌட தேசத்தரசர் நிராயுதபாணியாகத் தங்களைக் காண வந்திருக்கிறார்.
உள்ளே அழைத்து வா.
இரு அரசர்களும் சந்தித்தனர்.
கன்னோசி மன்னன் கிருஹவர்மன் என் நண்பன். அவனைக் கொன்ற மாளவ மன்னனைப் போரில் வெற்றி கொண்ட உம்மைப் பாராட்டவே வந்தேன்.
நண்பரே! வாருங்கள். என் தங்கை ராஜ்யஸ்ரீயின் கதி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.


ராஜ்ய ஸ்ரீ! கால்களில் விலங்கிடப்பட்டு காராக்ருஹத்தில் இருக்கிறாள். இதோ இலச்சினை!
இலச்சினை காட்டுவது போல் மறைத்திருந்த குத்து வாளை எடுத்து மாவீரனை ராஜ்ய வர்த்தனரை வஞ்சனையால் கொன்றான்,
தானேச்வரத்தில் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான் ஹர்ஷன்.
இப்படியெல்லாம் நடக்குமா? தந்தை தாய் இருவரையும் ஒன்றாக இழந்தோம். கிருகவர்மனை இழந்தோம். ராஜ்யஸ்ரீ என்ன ஆனாள் என்று தெரியவில்லை. அண்ணா என்னை உடன் வரக்கூடாது என்று கூறி விட்டாரே!
அச்சமயம் ராஜ்ய வர்த்தனரின் மெய்க்காவலர் பதறிய படி வந்தார்.
குந்தளரே! என்ன செய்தி?
மான் கூட்டத்தைக் கலங்கச் செய்யும் சிம்மம் போல மாளவப் படையைச் சிதறி ஓடச் செய்த தங்கள் தமையனாரை கௌட மன்னன் சசாங்கன் வஞ்சனையாகப் பாசறையில் புகுந்து கொன்று விட்டான்.
ஆ! உடனே போருக்கு எழுவோம்.



துயரத்தை மீறி பழிவாங்கும் உணர்வு எழ படை திரட்டினான் ஹர்ஷன். சேனைத்தலைவர் சிம்மநாதர் சித்தமாய் இருப்பதாகக் கூறினார்.
யானைப் படைத்தலைவர் ஸ்கந்தகுப்தர் ஏற்பாடுகள் முடிந்துவிட்டன என்று தெரிவித்தார்.
சமுத்திரமே இடம் பெயர்வது போல் சேனை அலைஅலையாகச் சென்றது.
பாசறையில் ஹர்ஷன் இருக்கையில்
அரசே! பிராக்ஜ்யோதிஷ நாட்டு மன்னரின் தூதரான ஹம்சவேகர் வந்திருக்கிறார். தங்களைக் காண விரும்புகிறார்.
உடனே அழைத்து வா.
பற்பல பரிசுகளைத் தாங்கிவரும் பணியாட்களோடு வந்தார் தூதர்.
வாருங்கள் தூதரே! தங்கள் மன்னர் கூறிய செய்தியைக் கேட்க விரும்புகிறேன்.
அரசே! தங்கள் நட்பைப் பெற விரும்புகிறார் எங்கள் மன்னர். தசரதனும் இந்திரனும் போல, கிருஷ்ணனும் அர்ஜுனனும் போல நட்பு பூண ஆசைப்படுகிறார்.
தாங்களுடைய வீரத்துக்கும் பெருமைக்கும் தகுந்த ஒரு பரிசை அனுப்பியிருக்கிறார். "ஆபோகம்" என்ற இந்தக் குடை வருணனால் அளிக்கப்பட்டது. கடல் சூழ்ந்த இந்த உலகை ஒரு குடையின் கீழ் ஆளப்பிறந்தவரையே இது கௌரவிக்கும். இதை ஏற்றுக் கொள்ளுங்கள்.


அப்போது ஒரு வீரன் பாசறைக்குள் வந்து...
அரசே! தங்கள் நண்பர் பண்டி வருகிறார். மாளவ மன்னனின் சேனை முழுவதையும் சிறைப்படுத்திக் கொண்டு வருகிறார்.
பண்டியை ஆரத்தழுவி மகிழ்ச்சியுடன் வரவேற்றார் ஹர்ஷன்.
பண்டி! வெற்றி அடைந்தும் மோசம் போய் விட்டோமே! ராஜ்ய ஸ்ரீயின் கதி என்ன?
அரசே! கன்யாகுப்ஜத்தின் சிறையிலிருந்து எவ்வாறோ தப்பிச் சென்று விட்டாள்! விந்திய மலைச் சாரலில் ஒளிந்திருக்கலாம்.
பண்டி! கௌட தேசத்தின் மீது படையை நடத்திச் சென்று வஞ்சகனான சசாங்கனைப் பழிவாங்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். நான் விந்திய மலைச் சாரலுக்குச் சென்று ராஜ்ய ஸ்ரீயைக் காப்பாற்ற வேண்டும்.
வீரர்களுடன் சென்று மலைச்சாரலில் தேடினான் ஹர்ஷன்
எவ்வளவு தேடியும் ராஜ்யஸ்ரீயைக் காணவில்லையே!
அரசே! திவாகரமித்திரருடைய ஆசிரமம் அருகிலிருக்கிறது. அங்கே சென்று கேட்டுப் பார்க்கலாம்.
திவாகரமித்திரருடைய ஆசிரமத்தில் சமய வேறுபாடுகள் இன்றிப் பலர் கல்வி பயின்றனர்.
ஹர்ஷரை திவாகரமித்திரர் அன்போடு வரவேற்று உபசரித்தார்.


திவாகரமித்திரரிடம் ஹர்ஷன் வருந்திக் கூறினான்
சுவாமி! என் தங்கையைக் காணாமல் மனம் சஞ்சலப் படுகிறது. எத்தனை துன்பங்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன். ராஜ்யஸ்ரீயையாவது காப்பாற்ற இறைவன் அருள் புரியக் கூடாதா?
வருந்தாதீர் அரசே! நல்ல செய்தி வருமென்று நம்புங்கள்.
அப்போது இடிஷுக்இன் ஒரு புத்த பிக்ஷு வந்தார்
ஆசிரமத்திலிருந்து சற்று தூரத்தில் ஒரு இளம் பெண் தீ மூட்டிக்கொண்டு அழுது கொண்டிருக்கிறாள்.
எங்கே? எங்கே?
தீ மூட்டி அதில் விழ இருந்த ராஜ்யஸ்ரீயை ஓடிச்சென்று காப்பாற்றினார் ஹர்ஷர்.
ராஜ்யஸ்ரீ! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?
நான் எதற்காக உயிர் வாழ வேண்டும்?
எனக்காக! நம் ராஜ்யத்துக்காக. எல்லோரையும் இழந்து விட்ட நான் உன்னையும் இழந்து விட்டு எவ்வாறு உயிர் வாழ முடியும்?
அச்சமயம் கிருகவர்மனுடைய மந்திரிகள் வந்தனர்
அரசரே! எங்கள் அரசியைக் காப்பாற்றி அழைத்து வந்தீர்கள். அவருடைய கணவர் கிருகவர்மன் இறந்து விட்டதால் நீங்களே இந்த ராஜ்யத்தை ஏற்று கன்னோசி முதல் தானேச்வரம் வரையில் சக்கரவர்த்தியாக வேண்டும்.


ஹர்ஷன் சக்கரவர்த்தியாக முடி சூட்டப் பெற்றான்.
ஹர்ஷ வர்த்தன சக்கரவர்த்தி வாழ்க! வாழ்க!
அன்று முதல் ஆறு ஆண்டு காலம் வரை ஹர்ஷ சக்கரவர்த்தியின் வீரர்கள் தங்கள் உடை வாளைக் கீழே வைக்கவில்லை. வெற்றிக்கு மேல் வெற்றி பெற்ற ஹர்ஷர் ஒரு மாபெரும் ராஜ்யத்துக்கு அரசனாக விளங்கினார்.
தெற்கே நர்மதை நதி கரை வரையில் அவரது ராஜ்யம் பரந்திருந்தது.
போர் ஓயாத நிலையில் ஒருநாள் பாசறையில்...
அரசே! சீனதேசத்திலிருந்து ஒரு யாத்ரீகத்துறவி வந்திருக்கிறார். கன்னோசியில் இருக்கிறார்.
அவரை இங்கேயே வரச் சொல்லி அழைத்து வா.
ஹர்ஷரின் பாசறை அக்கரையில் இருக்கிறது. காவேயின் நதியைக் கடப்போம். இப்போது சற்று இளைப்பாற வேண்டும்.
மன்னரின் விருப்பப்படி சீன யாத்ரிகர் ஹியூன் ஸ்சாங் வந்த போது...
அப்படியே! கூடாரம் அமைக்கிறேன்.


நள்ளிரவில்...
இதென்ன சத்தம்? ஏதாவது படை திரண்டு வருகிறதா? அடாடா! சக்கரவர்த்தி அலீஸவா வருகிறார்!
சீனநாட்டிலிருந்து பாரதநாட்டிற்கு வருகை புரிந்துள்ள ஞானியே! தங்களைச் சந்திக்கும் ஆவலினால் இரவோடு இரவாக வந்து விட்டேன்.
அரசரே! தங்கள் ஆர்வம் என் மனதை உ நெகிழச் செய்து விட்டது!
ஹர்ஷர் பின்னோடு வந்தாள் ராஜ்யஸ்ரீ.
சுவாமி! கருணை வடிவமானவர் புத்தபகவான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவருடைய உபதேசங்களைக் கேட்டு மன ஆறுதல் பெற விரும்புகிறேன்.


புத்தம் சரணம் கச்சாமி தர்மம் சரணம் கச்சாமி ஸங்கம் சரணம் கச்சாமி
சீன தேசத்துப் பிக்ஷுவின் உபதேசங்களினால் மனம் தெளிந்த ஹர்ஷ வர்த்தனரும் ராஜ்ய ஸ்ரீயும் புத்தர் பெருமானிடம் பக்தி கொண்டு அஹிம்ஸைக் கொள்கையைக் கடைப் பிடித்தார்கள்.
சுவாமி! புத்தர் பெருமான் கருணையே உங்களை இங்கே வரச் செய்தது. பொன்னால் செய்த இந்த புத்தர் பெருமான் சிலையோடு நாம் கன்னோசிக்குத் திரும்புவோம்.
கன்னோசிக்குத் திரும்பிய சக்கரவர்த்தியை வரவேற்ற மக்கள் அளவற்ற சந்தோஷம் அடைந்தார்கள். பலர் புத்த மதத்தைத் தழுவினார்கள். பிராணிகளை வதைக்கக் கூடாதென்று ஹர்ஷ வர்த்தனர் உத்தரவிட்டார்.


தினந்தோறும் ஆயிரம் புத்த பிக்ஷுக்களும் பிராமணர்களும் அரண்மனையில் உணவும் உடையும் பெற்றார்கள்.
சில காலம் சென்று சீன யாத்திரீகர்...
அரசே! நாலந்தாவிலுள்ள கல்விக் கல்லூரியில் சில காலம் தங்கி விட்டு இந்த நாட்டின் மற்ற அரசர்களையும் சந்திக்க விரும்புகிறேன். விடை தர வேண்டும்.
தாங்கள் சிரமமின்றி யாத்திரை செய்ய ஏற்பாடுகள் செய்கிறேன்.
நர்மதை நதியைத் தாண்டி சாளுக்கிய மன்னனைச் சந்தித்தார் ஹ்யூன் ஸ்சாங்.
அஜந்தா குகைகளில் அழியாத வர்ண ஓவியங்களைத் தீட்டிக் கொண்டிருக்கும் பிக்ஷுக்களைச் சந்தித்து மகிழ்ந்தார்.
ஹர்ஷரின் சபைக்கு ஒரு புலவர் வந்தார்.
அரசே! என் பெயர் பாணன்.
ஆகா! தங்கள் புலமையைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஸரஸ்வதி தேவியின் வம்சத்தில் வந்தவர் நீர். உம்மைக் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.
நண்பர்களே! ஸ்ரீகண்ட நாட்டின் தலைநகரமான தானேசுவரத்திலிருந்து கன்னோசி வரை ஒரு குடையின் கீழ் அரசாண்டு வரும் மாவீரனான ஹர்ஷ மகாராஜனின் சரித்திரத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்.


பாணருடைய ஹர்ஷ சரித்திரத்தின் மூலம் மிகவும் புகழடைந்தார் ஹர்ஷ சக்கரவர்த்தி இசையில் ஈடுபாடுடையவராகவும் விளங்கினார். ஓவியக் கலைக்கும் ஆதரவு அளித்தார். நாடக நூல்களும் எழுதினார்.
ஹர்ஷ சக்கரவர்த்தி தியாகத்தின் சிகரமாகவும் விளங்கினார். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரயாகைக்குச் செல்வார் அரசர். அங்கே தமது உடைமைகள் அனைத்தையும் ஏழை எளியோருக்குத் தானம் செய்து விடுவார்.
நாடு முழுவதும் உம் தியாக சிந்தனையைப் பாராட்டுகிறது. உடுத்தியிருந்த ஆடையைக் கூட தானம் கொடுத்து விட்டீரே!
ஹர்ஷனின் வள்ளன்மையைக் கண்டு ராஜ்யஸ்ரீ நெகிழ்ந்தாள்.
சோதனைக்கு மேல் வந்த சோதனைகளை மன உறுதியுடன் தாங்கிக் கொண்டு மகாவீரனாகவும் கருணையும் மிகுந்த சக்கரவர்த்தியாகவும் விளங்கிய மாமன்னர் ஹர்ஷவர்த்தனர்.
கல்வியும் கலையும் வீரமும் கொடையும் கலையும் நிரம்பிய பொற்காலத்தை உருவாக்கினர். அசோகரையும் ஹர்ஷரையும் போன்ற மகா புருஷர்களைப் பேரரசர்களாகப் பெற்றும் பெருமை பெற்றது நமது
பாரதநாடு.

செத்துப்போன மாடு திரும்பி வந்தது!

எம். ஆர். ராஜன்



கரீம்பாய் வியாபார விஷயமாக, ஒரு மாதம் வெளியூர் போக வேண்டி வந்தது. 'போகிறது தான் போகிறோம், மனைவியையும் அழைத்துக் கொண்டு போகலாமே' என்று எண்ணினார் கரீம்பாய். ஆனால், அதற்குப் பிரச்னையாய் இருந்தது அவர் வளர்த்து வந்த பசுமாடு. நல்ல கொழுகொழுவென்றிருந்தது பசு. ''பேபி'' என்று பெயர். கன்று போட்டு இரண்டு மாதங்கள் தான் ஆயிற்று. எப்படி விட்டுவிட்டுப் போவது?... யார் பொறுப்பில் விட்டுவிட்டுப்போவது?

சட்டென்று சிலுக்கையாவின் நினைவு வந்தது கரீம்பாய்க்கு... 'சிலுக்கையாவிடம் விட்டு விட்டால் என்ன...? அவனுடைய கொட்டடியில் இருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட மாடுகளுடன் இருக்கட்டுமே....'

தீவனச் செலவுகளுக்குக் கொஞ்சம் பணமும் கொடுத்துவிட்டுப் பசுவை, மிகப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுக் கிளம்பினார் கரீம்பாய் தன் மனைவி பாதிமாவுடன்.

வியாபார வேலைகளைக் கவனித்தார் கரீம்பாய்... ஊரெல்லாம் சுற்றிப் பார்த்தார். ஒரு மாதம் ஓடிப் போயிற்று. ஊருக்குத் திரும்பும் வேளையில் பசுவின் நினைவு வந்தது. ஆனால், சிலுக்கையாவுக்கோ அந்தப் பசுவின் மீது ஒரு கண். லக்ஷ்மிகரமாக இருந்த அந்தப் பசுவைத் திருப்பிக் கொடுக்க அவனுக்கு மனமில்லை. கரீம்பாயிடம் மாடு செத்துப் போய்விட்டதாகச் சொல்லி விட்டுக் கன்றை மட்டும் திருப்பிக் கொடுக்கத் தீர்மானித்தான்.

கரீம்பாய் சிலுக்கையாவின் மோசடி வேலையில் இடிந்து போனார். கன்றை மட்டும் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு போனார். பஞ்சாயத்தில் வழக்குப் போட்டார். வழக்கு விசாரணைக்கு வந்தது.

சிலுக்கையா சொன்னான்: ''நான் எதுக்குங்க பொய் சொல்லணும்? என் கிட்ட நூறு நூத்தம்பது மாடுங்க கண்ணுங்க இருக்கு... இவரு பசுவுக்கு ஏங்க ஆசைப்படப் போறேன்...? ஏதோ சொல்லிட்டுப் போனாரே...'

நம்ப மனுஷராச்சே... நம்ம கிரா மத்துக்காரராச்சேன்னு... பாத்துக்கிட் டேன். மாடு செத்துப் போச்சுன்னு நான் என்னங்க செய்வேன்.''

சிலுக்கையா மோசடி செய்திருக் கிறான் என்று தெரிந்தாலும் பஞ்சா யத்துக்காரர்களால் நிரூபிக்க முடிய வில்லை...

வழக்கு சின்னனிடம் போயிற்று... சிக்கலான வழக்குக்குத்தான் இருக் கவே இருக்கிறானே சின்னன்.

சின்னன் தீர விசாரித்தான். பஞ்சா யத்துக்காரர்கள் காதில் ஏதோ கிசு கிசுத்தான்.

தீர்ப்பு மறுநாள் வழங்கப்படும் என்று கூறி விட்டுப் பஞ்சாயத்து கலைக்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்படும் வரை பசுவின் கன்று மட்டும் சின்னனிடம் இருப்ப தென முடிவாயிற்று.

மறுநாள் காலை.

சின்னன், கரீம்பாய் மற்றும் பஞ்சா யத்துக்காரர்களுடன் கன்றை ஓட்டிக் கொண்டு சிலுக்கையாவின் கொட்டி லுக்குப் போனான்.

சிலுக்கையா இதை எதிர்பார்க்க வில்லை. திகைத்தான்.

''ஒண்ணுமில்லே, சிலுக்கைய்யா.... மாடு செத்தப்புறம் கன்றை வச்சுக் கிட்டுக் கரீம்பாய் என்ன செய்யற துன்னு யோசிச்சுக்கிட்டிருந்தாரு. வாங்க, சிலுக்கையா கொட்டிலிலே நாமே கொண்டு போய் விட்டுடு வோம்... மற்ற மாடுங்களோட சேர்ந் தாவது இந்தக் கன்னு கொஞ்சம் ஆறுதலாக இருக்கட்டுமேன்னுதான் கூட்டிக்கிட்டு வந்தேன்....'' என்று சொல்லிக் கொண்டே கையில் பிடித் திருந்த கன்றின் கயிற்றை விட்டு விட்டான் சின்னன். துள்ளிக் கொண்டு ஓடித் தன் தாயின் மடியில் வாய் வைத்துப் பாலைச் சப்பிச் சப்பிக் குடிக்கத் தொடங்கியது கன்றுக்குட்டி.

சின்னன் சொன்னான்: ''சிலுக் கையா, தாயையும் கன்றையும் நம்ப பொய்-புரட்டுனாலே பிரிச்சுடலாம்.... ஆனால், அவங்க பாசத்தை மூடி வைக்க நம்மாலே முடியாது.... பாரு, மாடு செத்துடுச்சுன்னு பொய் சொன்னே... கன்று போய்த் தன் தாயைக் காட்டிக் கொடுத்துடுச்சு.... அதோ பாரு. தாய்ப்பசு தன் கன்றைப் பிரிஞ்ச ஏக்கத்தை எப்படி நக்கிக் கொடுத்துத் தீர்த்துக்கிறது.... மரி யாதையாக மாட்டையும் கன்றையும் கரீம்பாய்க்குக் கொடுத்துடு... தாயை யும் கன்றையும் பிரிச்சு வச்சது தப்புத்தானே.''

சிலுக்கையாவுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. ''தப்புத் தாங்க, மோசடி செய்ய நினைச்சேன். மன்னிச்சிடுங்க'' என்று கெஞ்சினான்.

பஞ்சாயத்தார் அவனுக்கு ஐம்பது ரூபாய் அபராதம் விதித்தார்கள்.

கரீம்பாய் மகிழ்ந்தார். தாயும், கன்றும் மகிழ்ந்தன. பஞ்சாயத்துக் காரர்கள் மகிழ்ந்தார்கள். உங்களுக் கும் மகிழ்ச்சிதானே!

சொல் விளையாட்டு

'ணம்' என்று முடியும் சில சொற்களைக் கண்டுபிடித்து விளையாடு வோம் வாருங்கள்.

வழக்கம் போலக் குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன.



1. ——————காப்பிக்கும் உண்டு.
2. ——————வாசலுக்கு அழகு.
3. ——————ராமர் விட்டது.
4. ——————சிவகாசியின் சிறப்பு.
5. ——————ராகத்தில் ஒன்று.
6. ——————கோயில் நிறைந்த ஊர்.
7. ——————கேரளத்துப் பண்டிகை.
8. ——————ஸ்ரீ வேதாந்த தேசிகர் பிறந்த நட்சத்திரம்.
9. ——————குதிரைக்குப் பூட்டுவது.
10. ——————இயற்கை உரம்.



விடைகள்:

1. மணம், 2. தோரணம், 3. பாணம், 4. வாணம், 5. சங்கராபரணம், 6. கும்பகோணம், 7. ஓணம், 8. திருவோணம், 9. சேணம் 10. சாணம்.

எம். ஆர். ஆர்.



நான் கல்வி அமைச்சரானல்...

— கே. ஜெயலக்ஷ்மி —

தேர்வு எழுதி விட்டு மாணவர்களும், மாணவிகளும் வெளியே வந்தார்கள்.

மணி! பரீட்சையெல்லாம் நன்ருக எழுதியிருக்கிருயாடா'' என்று கேட்டான் ரகு.

''எல்லாப் பரீட்சையும் நன்ருக எழுதியிருக்கிறேன்டா ரகு. புவியியல் தான் ஒரே அறுவை'' என்ருன் மணி எரிச்சலாக.

''ஏண்டா, மணி அப்படிச் சொல்கிருய்?' நான் புவியியலை வெளுத்துக் கட்டிவிட்டேன். கணக்குத்தான் எனக்குத் தகராறு'' என்று கூறிஞன் சோமு.

''ரகு கணக்கைப் பிச்சு வாங்கியிருப்பான்! ஏண்டா ரகு... அப்படித் தானே?'' என்று வினவிஞன் மணி.

''ஆமாண்டா மணி! கணக்கிலே நூற்றுக்கு நூறு வாங்கிவிடுவேன் நிச்சயமாக... ஆனல்...''

''என்னடா இழுக்கிறே...'' என்று பரிகாசம் செய்தான் சோமு.

இச்சமயம் அங்கே வந்த சீதா ''எப்பவுமே ரகுவுக்குத் தமிழ் தகராறு தான்... அதனுல்தான் இழுக்கிருன்'', என்ருள்.

''நீ எல்லாவற்றிலும் ரொம்பக் கெட்டிக்காரி என்கிற நினைப்போ?'' அவள் மீது சீறிஞன் சோமு.

''நான் அப்படி ஒண்ணும் சொல்லிக் கொள்ளவில்லையே! எனக்கு ஆங்கிலம் கொஞ்சம் வராது தான். ஒரே எழுத்துப் பிழைகளாயிருக்கும். என்ன செய்கிறது ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை விட்டுப் போனுங்களே, அப்படியே இந்த ஆங்கிலத்தையும் கூடவே எடுத்துக் கொண்டு போயிருக்கக் கூடாதா?'' என்று தலையில் அடித்துக் கொண்டாள் சீதா.

''நான் மட்டும் பெரியவனுகிக்கல்வி அமைச்சராக வந்தால் என்ன செய்வேன் தெரியுமா? முதலில் இந்தப் புவியியலைப் பாடத் திட்டத்திலிருந்தே எடுத்து விடுவேன்'' என்று கூறிஞன் மணி.

''நான் கல்வி அமைச்சரானல், முதலில் தமிழையும் இலக்கணத்தையும் எடுத்து விடுவேன்'' என்ருன் ரகு எரிச்சலோடு.

''நான் கணக்கை 'கட்' பண்ணி விடுவேன்'' என்ருன் சோமு.

சீதாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ''இன்னும் கொஞ்சம் போனல் பரீட்சையே கூட வேண்டாம் என்று சொல்லி விடுவீர்கள். போலிருக்கே?'' என்ருள்.

''வெரிகுட் ஐடியா! ரொம்ப நிம்மதியாக இருக்கும்!'' என்று கையைத் தட்டினன் சோமு.

''பரீட்சை இல்லாவிட்டால் நாமெல்லாம் புத்தகங்களைத் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டோம்டா. அதனுல் பரீட்சை இருக்கட்டும். புவியியல் மட்டும் வேண்டாம்'' என்ருன் ரகு உரத்த குரலில்.

''டேய்! ரகு, மணி, சோமு, சீதா! உங்களையெல்லாம் நம்ப சார் கூப்பிடுகிருர். சீக்கிரமா வாங்க....'' என்று அழைத்தபடி அங்கு வந்தான் சேகர். எல்லோரும் விரைவாக நடந்தார்கள்.

வகுப்பு அறையிலிருந்து ஒவ்வொருவரும் கைகொள்ளாமல் நோட்டுக்களை அடுக்கி எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்கள்.

''ஏய் சீதா! உனக்கு என்ன பாடம்?'' என்று கேட்டான் சோமு அழாத குறையாக.

''எனக்கே இங்கிலீஷ் என்ருல் பாகற்காய். நம்ப சார் நம் வகுப்புப் பசங்க எழுதிய இங்கிலீஷ் டெஸ்ட் நோட்டுக்கள் பூராவையும் என்னிடமே கொடுத்துத் திருத்திக் கொண்டு வரச் சொல்லியிருக்கிருர். தலையெழுத்து... ஆமாம் — உன் கையிலும் டெஸ்ட் நோட்டுக்கள்தானு?'' என்று திருப்பிக் கேட்டாள் சீதா.

''இங்கேயும் அதே கதைதான்... சீதா! இத்தனையும் நம் வகுப்புப்

பசங்கள் எழுதிய கணக்கு டெஸ்ட் நோட்டுக்கள். எனக்குத்தான் கணக்கு ஒரே தகாராறு 'என்று உனக்குத் தெரியுமே...''

''அதோ பாரு... ரகு... மணி.... இரண்டு பேரும் கூடத் தூக்கமுடியாமல் நோட்டுக்களைத் தூக்கிக் கொண்டு வருகிறார்களே..... பாவம்டா...''

. ''என்னடா ரகு...'' கிண்டலாகக் கேட்டான் சோமு.

''தமிழ். இலக்கணத்தின் டெஸ்ட் நோட்டுக்கள்டா சோமு!'' ரகுவுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

''மணி! உன்னுடையது என்ன நோட்டு?'' சீதா சிரிப்பை அடக்கிக் கொண்டு வினவினாள்.

''தெரியாதா? 'புவியியல்' நோட்டுக்கள்தான்'' சிடுசிடுத்தான் மணி.

''நம்ப சார் எதற்காகவடா இப்படியொரு வேலை கொடுத்திருக்கிறார்?''

''அதுதான் எனச் நம் புரியவில்லையடா...''

''அவர் செய்ய வேண்டிய வேலையை நம் தலையிலே கட்டிவிட்டார். அவ்வளவுதான்! அவர் ஜாலியாக இருக்கலாமே...'' என்றாள் சீதா.

எல்லோரும் ஒன்றாக வீட்டை நோக்கி நடந்தார்கள்.

காலாண்டுத் தேர்வுக்குப் பிறகு ஒருநாள்.

வகுப்பறையில் ஆசிரியர், மாணவ–மாணவிகளின் தேர்வுத் தாள்களை மேஜையின் மேல் அடுக்கி வைத்துக் கொண்டு ஒவ்வொருவரையும் அழைத்து பேசிக் கொண்டிருந்தார்.

''மணி இங்கே வா!''

மணி எழுந்து ஆசிரியரின் எதிரில் போய் நின்றான்.

''நீ இந்தத் தேர்வில் புவியியலில் எத்தனை 'மார்க்' தெரியுமா? அறுபத்தியேழு! பத்துப் பதினைந்து மார்க்குக்கு மேல் நீ இதுவரையில் வாங்கியதே கிடையாது! இப்போது மட்டும்எப்படி அறுபத்தியேழு வாங்கினாய்....''

''எனக்கே தெரியவில்லை சார்.''

''சரி, இப்படியே நில்! சோமு, இங்கே வா''

சோமு வந்து அவர் எதிரில் நின்றான்.

''நீ இந்தத் தேர்வில் கணக்கில் எத்தனை மார்க் தெரியுமா? எழுபத்தி மூன்று. என்னால் நம்பவே முடியவில்லை சோமு. எப்படி உன்னால் இத்தனை மார்க்குகள் வாங்க முடிந்தது?''

''அதுதான் சார் எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது''

''சரி, இரு இங்கேயே...! ரகு? இங்கே வா! உனக்குத் தமிழில் எவ்வளவு மார்க் தெரியுமா? ஐம்பத்தொன்பது! உன்னால் எதனால் இவ்வளவு கூடுதலாக மார்க்குகள் வாங்க



முடிந்தது. டியூஷன் வைத்துக்கொண்டிருக்கிறாயா?''

''இல்லை சார்! அதனால்தான் எனக்கே சந்தேகமாக இருக்கிறது. தேர்வுத் தாளில் நம்பரை மாற்றிப் போட்டு விட்டிருப்பேனோ என்று பயமாக இருக்கிறது சார்.''

''அப்படியெல்லாம் இருக்காது. பயப்படாதே ரகு! சீதா, இங்கே வா!''

சீதா வந்து நின்றாள்.

''சீதா! இங்கிலீஷில் எழுபத்திரண்டு மார்க் வாங்கியிருக்கிறாய். ஸ்பெல்லிங் மிஸ்டேக் இல்லவே இல்லை. ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது எனக்கு. யாரைப் பார்த்துக் காப்பியடித்தாய்''

''ஐயோ, நான் யாரைப் பார்த்தும் காப்பியடிக்கவில்லை சார். முன்பெல்லாம் எனக்கு 'மீனிங்' புரியவே புரியாது சார். இப்போது நன்றாகப் புரிகிறது சார். புரிந்து கொண்டு எழுதுவதால் நிறைய மார்க் கிடைத்திருக்கலாம் சார்...!''

''இதற்கெல்லாம் என்ன காரணம் தெரியுமா?''

''சொல்லுங்க சார்'' என்றான் சோமு.

''போன மாதம் 'மிட் டேர்ம்' டெஸ்ட் வைத்தேனே... உங்களையெல்லாம் கூட 'டெஸ்ட்' நோட்டுக்களைத் திருத்திக் கொண்டு வரச் சொன்னேனே... எதற்காக அப்படிச் சொன்னேன், தெரியுமா?''

''தெரியாது சார்!'' பல மாணவர்கள் சேர்ந்து ஒரே குரலில் கூறினார்கள்.

''யார், யார் எந்தெந்தப் பாடத்தில் குறைவான மார்க் வாங்கினார்களோ அவரவர்களைக் கொண்டே அந்தந்தப் பாடத்தைத் திருத்தச்சொன்னேன். பயன் ... ரொம்பப் பிரமாதமாக அமைந்து விட்டது! இதிலிருந்து என்ன தெரிகிறது...'' என்று உற்சாகமாகக்கேட்டார்.

''பிடிக்காத பாடமாக இருந்தாலும், நோட்டுக்களைத் திருத்தும் போது, மற்றவர்கள் விடைகளைச் சரியாக எழுதியிருக்கிறார்களா, சரியாக எழுதியிருக்கிறார்களா என்று தேடிக் கண்டுபிடித்துப் பார்த்தோம்.''என்றான் மணி. ''ஆமாம் சார், நானும் அப்படிச் செய்ததால், பல கேள்விகளுக்குச் சரியான விடைகளைத் தெரிந்து கொண்டதோடு, அவை என் மனத்திலும் நன்றாகப் பதிந்து விட்டன'' என்றான் சோமு.

''வெரிகுட்! யாருக்குமே எந்த ஒரு பாடமும் வராது என்றோ பிடிக்காது என்றோ கிடையாது. நாமாக நமக்குள் அப்படியொரு எண்ணத்தை ஏற்படுத்திக்கொண்டுவிடுகிறோம். பிறகு, அந்தப் பாடத்தைப் படிக்காமல் அலட்சியப்படுத்துகிறோம். அதனால் தான் தேர்வில் அந்தப் பாடத்தில் மார்க் வாங்கவே முடிவதில்லை. அதனால்... நான் சொல்வது



ஆடுகள் கண்டுபிடித்த பானம்!

'என்ன, இந்த ஆடுகள் தூங்காமல் இப்படி ஓடி ஆடி உற்சாகமாகத் துள்ளித் திரிகின்றனவே! என்ன காரணம் தெரியவில்லையே!'' என்று கவலைப்பட்டார்கள் அராபிய நாட்டைச் சேர்ந்த சில ஆட்டு இடையர்கள்.


காரணத்தைக் கண்டுபிடிக்க முயன்றார்கள்.

மறுநாள் அந்த ஆடுகள் எங்கெங்கே செல்கின்றன, எதை எதைத் தின்கின்றன என்று பார்த்தார்கள்.

அவை புதர்போல் அடர்ந்து வளர்ந்திருந்த ஒருவகைச்செடியிலிருந்த பழங்களைக் கடித்துக் கடித்து ஆவலாகத் தின்றன. அந்தப் பழங்களை அவர்களும் தின்று பார்த்தார்கள். அவை சுவையாக இருந்தன; உடலுக்கு உற்சாகமும் ஊட்டின.

பிறகு, அவர்கள் அந்தப்பழங்களைப் பறித்து, அவற்றின் கொட்டைகளை வெந்நீரில்போட்டு ஒருவகைப் பானம் தயாரித்தார்கள்.

அந்தப் பானம்தான் காப்பி!



விளை, விளை, விளை:

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பல ஊர்ப் பெயர்கள் 'விளை' என்று முடியும். மாதிரிக்குச் சில:

முகிலன்விளை,
இலந்தை விளை,
வாத்தியார் விளை,
சரக்கல் விளை,
புன்னைக்காய் விளை
முருங்கவிளை
கோழிப்போர் விளை
கண்ணாட்டிவிளை
அஞ்சுவீட்டு விளை
குறவன்தட்டு விளை

என்னவென்றால்... எல்லோருக்கும் எல்லாப் பாடங்களுமே வரும்....'' என்ற ஆசிரியர் தம் எதிரில் நின்ற மாணவர்களை ''போய் உட்காருங்கள்' என்று கூறிவிட்டு மறுபடியும் கூறினார்.

''அப்படியும் கொஞ்சம் சந்தேகமாக இருந்தால், அந்தப் பாடத்தில் நாம் அதிகமாகக் கவனம் செலுத்திப் படிக்க வேண்டும். 'முயற்சி திருவினையாக்கும்!' முயன்றால் முடியாதது எதுவுமில்லை.''

''சரி, சார்! இனிமேல், அப்படியே படிக்கிறோம் சார்'' — ஒன்றாகச்சேர்ந்து கொண்டு கூச்சல் போட்டார்கள்.

''அமைதி, அமைதி'' என்று கூறி மேஜையைத் தட்டினார் ஆசிரியர்.

அறை நிசப்தமாயிற்று.

''மணி! உனக்கு நம் தலைநகரமான டில்லியைப் பற்றி — நம் அண்டை மாநிலங்களான கர்நாடகா —கேரளா— ஆந்திரம்... போன்றவைகளைப்பற்றி— அங்குள்ள சிறப்புக்களைப் பற்றித் தெரிந்து கொள்ள உனக்கு விருப்பமில்லையா?''

''நிறைய இருக்கிறது சார்.''

''நீ கல்வி அமைச்சரானால் 'புவியியலை எடுத்து விடுவேன்' என்று சொன்னாயாமே...''

சிரித்துக் கொண்டே சொன்னான் மணி. ''இனிமேல் அப்படி நினைக்க மாட்டேன் சார்!''

ஆசிரியர் ரகுவைப் பார்த்துக்கேட்டார். ''ரகு! உனக்குப் பிழையின்றித் தமிழை எழுதவும், நம் செந்தமிழ் நாட்டின் இணையற்ற செல்வங்களான இலக்கியங்களைப் படித்துச் சுவைக்கவும் விருப்பமில்லையா? வெளிநாட்டினரெல்லாம் எவ்வளவு ஆசையுடன் நம் இலக்கியங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஓடோடி வருகிறார்கள், தெரியுமா? மகாகவி பாரதியாரைப் போலவோ —பேனா மன்னர் கல்கியவர்களைப் போலவோ ஒரு கவிஞராக — ஓர் எழுத்தாளராக வரவேண்டும் என்று நீ ஆசைப்படவில்லையா ரகு?''

ரகு ஒருவினாடி தவித்தான். பிறகு, ''என்னை மன்னிச்சிடுங்க சார். தமிழ் இவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பது எனக்குத் தெரியாமல் போய்விட்டது. இனிமேல் பாருங்களேன்...'' என்றான் உற்சாகமாக.

ஆசிரியர் கேட்பதற்கு முன்பாகவே சீதா எழுந்து சொன்னாள். ''நானும் இனிமேல் ஆங்கிலப் பாடத்தில் நன்றாகக் கவனம் செலுத்திப் படிப்பேன் சார். ஆங்கிலம் தானே நம் நாட்டில் மட்டுமல்லாமல் உலகத்திற்கே கூடப் பொது மொழியாக இருந்து வருகிறது. அது நமக்கெல்லாம் மிக அவசியமென்று தெரிந்துகொண்டேன்.''


சோமுவும் தானாகவே எழுந்துநின்று சொன்னான். ''கணக்கு வாழ்க்கைக்கு மிகமிக அவசியமானது என்பதை நானும் புரிந்து கொண்டு விட்டேன் சார். கணக்கு வரவில்லை என்று நினைத்துக் கொண்டு அதைத்தொடாமலேயே ஒதுக்கி விடக் கூடாது. பல தடவைகள் கணக்கைப் போட்டுப் போட்டுப் பார்த்துப் பயிற்சி பெற்றால் கண்டிப்பாகக் கணக்கில் தேர்ச்சி பெற முடியும் என்பதை நான் தெரிந்து கொண்டேன் சார்.''

''நீங்க நான்குபேர்களும் இப்படியொரு நல்ல மாறுதலை அடைந்தது பற்றி ரொம்ப சந்தோஷம். இன்னும் விமலாவுக்கு 'அறிவியல்' வராது. ராஜுவுக்கு வரலாறு வராது. அவர்களையும் மாற்றியாக வேண்டும்.''

ரகு, மணி, சோமு, சீதா எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு ''ரொம்ப நன்றி சார்'' என்று உற்சாகமாகமொழிந்தார்கள்.


விந்தை உலகம்

செந்தமிழ்ச் செல்வன்




எகிப்தியர்களின் புகழ் பெற்ற 'பிரமிட்' கோபுரங்கள் 'ஃயுடிக்' என்னும் அரசனால் தான் முதன் முதலாகக் கட்டப்பட்டது. அப்போது அதன் உயரம் மட்டும் 481 அடிகள்.

சீனாவில் பரந்து காணப்படும் ஒரு வகை விசித்திர வண்ணத்துப்பூச்சியின் பெயர் 'உலகப் பட வண்ணத்துப் பூச்சி' அதன் இரு பக்கங்களிலும் உள்ள சிறகுகளில் பூமியில் உள்ள எல்லா நிலப்பரப்புகளும் தெளிவாகப் பார்வைக்குத் தெரியும்.



நம் பண்டைத் தமிழர்கள் குளிர் காலங்களில் வெந்நீரை 'சேமச்செப்பு' என்னும் பாத்திரத்தில் வைத்துக் கொள்வர்.




ஒரு கம்பளிப்பூச்சி தன் சுருங்கிய வாழ்நாளில் கிட்டத்தட்ட தன் சொந்த உடல் அளவை விட ஐம்பதினாயிரம் மடங்கு பச்சிலைகளை அரித்துத் தின்பதாக உயிரியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.




என்ன என்ன உருவங்கள்!



இந்தப் பெண்குழந்தை தன் உருவத்திற்குள்ளே வேறு சில உருவங்களை ஒளித்து வைத்திருக்கிறாள். கண்டு பிடியுங்கள்!



தெருவில் சென்றவர்: தம்பி, உண்டி வில்லாலே காக்கையைக் குறி பார்த்துக் கல் விட்டது நீதானே!



கண் டாக்டர்: தம்பி, உனக்குக் கண்ணாடி அப்புறம் போடலாம். முதலிலே இது என்னன்னு சொல்லு.

பையன்: உங்க கையிலே இருக்கிறதுதானே! அது குச்சி!



பல்லால் நூலை அறுக்கலாமா?

கூடாது. இது ஒரு கெட்ட பழக்கம். பல்லால் நூலைக் கடித்து அறுப்பதனால் பல் நுனி பலவீனப்படுகிறது; சிறுசிறு வெடிப்புக்களும் ஏற்படலாம். நாம் வளர வளர பல் சொத்தையாவதற்கும் இது ஒரு காரணமாகும்.



பலசாலிகள் இருவர்!

நா.கோ.வி

சடையன்பட்டியும், வேப்பம்பட்டியும் பக்கத்துப் பக்கத்துக் கிராமங்கள்.

சடையன்பட்டியில் வடிவேலு என்கிற பெயரில் ஒருவன் வாழ்ந்துவந்தான். வேப்பம்பட்டியில் முத்து என்கிற பெயரில் ஒருவன் வாழ்ந்து வந்தான்.

இருவரும் நன்றாகக் கொழுத்திருந்தாரகள். ஊராரை மிரட்டிக் காரியங்களைச் சாதித்துக் கொண்டார்கள். உலகில் தங்களை வெல்ல ஒருவருமில்லை என்று கூறி ஒன்றுமறியாத அப்பாவி ஊர் மக்களுக்குத் தாங்கொணாத தொல்லைகளைக் கொடுத்துவந்தார்கள்.

ஒருநாள்—

இருவரும் எதிருக்கெதிராக ஒரு வரப்பில் சந்தித்துக் கொண்டார்கள். வரப்பின் இருபக்கங்களிலும் நன்கு வளர்ந்த பயிர்கள் இருந்தன. இருவரில் யாராவது ஒருவர் சற்று ஒதுங்கி வழிவிட்டால் தான் மற்றவர் செல்ல முடியும்.

''அவன் ஒதுங்கட்டுமே... நாம் ஏன் ஒதுங்கி வழி விட வேண்டும்?' என்ற வீராப்பில் தன்னுடைய மீசையின் நுனியை முறுக்கிக் கொண்டு அலட்சியமாக முத்துவைப் பார்த்தான் வடிவேலு.

''அவனுக்கென்ன வழிவிடுவது? அவனாக ஒதுங்கி வழிவிடட்டுமே!'' என்று மமதையோடு நின்றான் முத்து.

ஆக, ஒருவருக்கு மற்றவர் வழி விடுவதாக இல்லை.

இதைச் சற்றுத் தொலைவில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் ஊர் மக்களில் சிலர்.

ஒருவழிப் பாதையில் எதிரும் புதிருமாக இரு நல்லவர்கள் சந்தித்துக் கொண்டால், ''இந்தப் பாதையில் அவரே செல்லட்டும்: நாம்தான் சற்று ஒதுங்கிச் செல்வோமே!'' என்று எண்ணி இருநல்லவர்களும்தாங்கள் வந்த பாதையை விட்டு இறங்கிச் செல்வார்கள். ஒற்றையடிப்பாதை மூன்று பாதைகளாகி விடும்!

எதிரும் புதிருமாக, ஒரு நல்லவரும், ஒரு கெட்டவனும் சந்தித்துக் கொண்டால், நல்லவர் ஒதுங்கி — பாதையை விட்டு இறங்கிச் செல்வார். கெட்டவன், தான் வந்த வழியிலேயே தொடர்ந்து செல்ல, பாதை இரண்டாகி விடும்.

எதிரும் புதிருமாக இரு கெட்டவர்கள் சந்தித்துக் கொண்டால், ஒருவரும் பாதையை விட்டு விலக மாட்டார்கள் பாதை ஒன்றாகத்தான் இருக்கும்!

'தான்' — என்ற அகந்தை, முத்துவையும், வடிவேலுவையும் ஆட்டிப் படைக்கவே, ''நான்தான் பலசாலி... நீ கீழே இறங்கி வழி விடுடா!'' என்று முத்துவும், ''போடா போ... இந்த அகில உலகத்தில் என்னைவிடப்பல சாலி ஒருவருமில்லை. நீ இறங்கி வழி

விடடா...'' என வடிவேலுவும் கூக்குர விட்டபடி சண்டை போட ஆரம்பித் தார்கள்.

அப்போது—


மந்தையை விட்டுப் பிரிந்துவிட்ட ஓர் எருமை மாடு மிரண்டு போய், ''ஞொய்... ஞொய்...'' என்று சப்த மிட்டுக் கொண்டே வடிவேலுவும்முத்து வும் சண்டை போட்டுக் கொண்டிருந்த ஒற்றையடிப் பாதையில் தலைதெறிக்க ஓடிவந்தது. அதைக் கண்ட இருவரும் ''அய்யோ'' என்று அலறி அடித்துக் கொண்டு, வயலில் விழுந்து மூலைக் கொருவராக ஓடினார்கள்:

'கேவலம் — எருமை மாட்டைக் கண்டு பயந்தோடும் இந்தப் பயங் கொள்ளிப் பயல்களைப் பார்த்தா நாம் இவ்வளவு நாட்களும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தோம்'' என்று எண்ணிய ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து முத்துவையும், வடிவேலுவையும் ஊரை விட்டே விரட்டி விட்டார்கள்.


தெரியாது போனால் தெரிந்து கொள்ளுங்கள்!

விளையாட்டுச் செய்திகள்









1. ஒலிம்பிக் கழகக் கொடி 1920—ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.
2. 1912—ம் வருடம் முதல் பெண்கள் ஒலிம்பிக் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.
3. எரிபந்து, திருமதி மேரி பெக் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட விளை யாட்டாகும். இது 'நியூகேம்' என்ற மேல்நாட்டு விளையாட்டின் அடிப்படையில் உருவானதாகும்.
4. கைப்பந்து முதன் முதலில் திரு. வில்லியம் மார்கன் ,என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட விளையாட் டாகும். ஆரம்பத்தில் விதிமுறைகள் இல்லாமல் ஆடிய இந்த விளை யாட்டிற்கு, டாக்டர் ஏ. டி. கால்ஸ்டெட் என்பவர் சில விதி முறை களை ஏற்படுத்தி 'வாலிபால்' எனப் பெயரிட்டார்.
5. கூடைப்பந்து விளையாட்டை முதன் முதலாக டாக்டர் ஜேம்ஸ். ஏ. நெயகமித் என்பவர் 1891—ம் வருடம் கண்டுபிடித்தார்.
6. ஒலிம்பிக் போட்டிக்கான ஐந்து வளையச் சின்னங்கள் ஐந்து கண்டங்களைக் குறிப்பதாகும்.
7. ஒலிம்பிக் போட்டி விளையாட்டுக்கள் முதன் முதலில் கிரீஸ் நாட்டி லுள்ள 'ஒலிம்பியா'வில் தோன்றின. எனவே இவ்விளையாட்டுப் போட் டிக்கு 'ஒலிம்பிக்' எனப்பெயர் வழங்கலாயிற்று. முற்காலத்தில் ஒலிம்பிக்கில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு ஆலிவ் இலை வளையங்களைச் சூட்டுவார்கள் பிறகு ஊர்வலமாக அழைத்து வந்து பொன்னும், பொரு ளும் பரிசாகக் கொடுத்து, அவ்வீரனுக்குச் சிலை எழுப்புவார்கள்.
8. 'விஜயலட்சுமி' கோப்பை, மகளிற்கான மேஜைப் பந்தாட்டப் போட் டிக்கு அளிக்கப்படும் தேசியக் கோப்பையாகும். 'பஸலட்ஜா' கோப்பை யானது மகளிர் டென்னிஸ் போட்டிக்கு அளிக்கப்படும் தேசியக் கோப்பையாகும். மகளிர் பூப்பந்தாட்டப் போட்டிக்கு அளிக்கப்படும் தேசியக் கோப்பையின் பெயர் 'சதா.'
9. ஆரம்பகாலத்தில் கிரிக்கெட் ஆட்டப் பந்தை வெகுதூரம் அடித்துவிட்டு வட்ட வடிவமாகவும் ஓடி எண்ணிக்கை எடுத்தனர்.
10. மராத்தான் ஓட்டப் பந்தயத்தில் ஓடவேண்டிய தூரம் 40,000மீட்டர்.
11. 1744—ஆம் ஆண்டுதான் கிரிக்கெட் சட்டங்கள் அமுலுக்கு வந்தன.
12. அயர்லாந்தில் பிரபலமான கிரிக்கெட் ஆட்டத்தை முதலாம் எலிச பெத் ராணி காலத்தில் துருப்புக்கள் பார்த்துவிட்டு வந்து, அதனை இங்கிலாந்துக்குக் குடியேற்றினர்.

தொகுப்பு: **எஸ். விஜயா சீனிவாசன்**

அலாவுதீனின் அற்புத விளக்கு!

தில்லையாடி ராஜா



"டேய். அலாவுதீன்! அந்தவிளக்கை எனக்குக் கொஞ்ச நேரம் கொடுடா."

"கொடுப்பேன். நீ தகராறு பண்ணாமல் திருப்பிக் கொடுப்பதாகச் சத்தியம் செய்தால் தான் கொடுப்பேன்."

"அப்படியே சத்தியம் செய்கிறேன், கொடுடா."

அலாவுதீன் கொடுக்க—

குமார் விளக்கைத் தேய்த்தான்.

பூதம் வந்தது.

"என்ன வேண்டும்?" அதிகாரக் குரலில் கேட்டது பூதம்.

"கடச்கட இட்லியும் தக்காளி சட்னியும் வேண்டும்." எதையும் கேட்கத் தெரியாமல் அவசரம் அவசரமாய் உளறினான்.

"பூ... இவ்வளவு தானா! இதோ ஒரு நொடியில் வருகிறேன்" — பூதம்.

தும்பைப்பூ இட்லியும் மணக்கும் தக்காளி சட்னியும் ஒரு நொடியில் வந்தது.

சுவைத்துச் சாப்பிட்டான் குமார்.

"வேறு என்ன வேண்டும்?" மீண்டும் குரலிட்டது பூதம்.

"நேற்று மாலை நானும் அப்பாவும் கடைத் தெரு போகும் போது ஒரு கடையில் பளபளக்கும் விலையுயர்ந்த சட்டை பார்த்தேன். அதில் ஒரு சட்டை வேண்டும்."

"ஹ ஹா... ...ஹா... இவ்வளவுதானா? இதோ வருகிறேன்."

அடுத்த விநாடி ஒரு டஜன் சட்டைகள் குமாரின் எதிரே குவிந்தன.

"ஒன்று கேட்டால் ஒரு டஜன் சட்டைகளா?" — அவன் ஆச்சரியம் நீங்கவில்லை.

"இன்னும் என்ன வேண்டும்கேள்" அயராமல் கேட்டது பூதம்.

என்ன கேட்கலாம்? குமார் சிந்தித்தான்.

முந்தின நாள் தேங்காய் மிட்டாய் தராமல் கொக்கு காட்டிவிட்டுத்தின்ற சங்கரின் நினைவு வந்தது.

"ஏ பூதமே, தேரடி வீதி 13–ம் நம்பர் வீட்டில் என்னோடு மூன்றும் வகுப்பில் படிக்கும் சங்கர் இருக்கிறான். அவனை ஓங்கி ஒரு குத்துவிட வேண்டும். செய்வாயா?"

"இதோ பார் உன் கண்ணெதிரே அவன் கோலத்தை", என்றது பூதம்.

மறுவிநாடி சங்கர் மூக்கு உடைந்து ரத்தம் சொட்டச் சொட்டப் பரிதாபமாய் நின்றான்.

"இன்னும் என்ன செய்யவேண்டும்?" பூதம் உறுமியது.

"எப்போதுமே வகுப்பில் கடைசி மார்க் வாங்கும் நான் முதல் மார்க் வாங்க வேண்டும்."

"அப்படியா?" மறைந்தது பூதம்.

அது மீண்டும் தோன்றும் போது வகுப்பாசிரியர் குமாரின் முதுகில் தட்டிக் கொடுத்து இந்தத் தேர்வில் 'க்ளாஸ் ஃபர்ஸ்ட் நீதான்', என்றார்.

அப்பொழுது அங்கு வந்த அலாவுதீன், "விளக்கைக் கொடுடா." என்றான்.

பூதத்தை வேலை வாங்கும் ஆசையில், "விளக்கைத் தர முடியாது" என்று குமார் சாதித்தான்.

"சத்தியம் செய்திருக்கிறாய். சத்தியத்தை மீறாமல் திருப்பிக் கொடுத்து விடு", அலாவுதீன் எச்சரித்தான்.

முடியாது என்று மறுக்க, அலாவுதீன் பிடுங்க விளக்கு எகிறி விழுந்து நொறுங்கியது.

பூதம் மறைந்தது.

"என்னடா அங்கே சப்தம்?" அப்பா அதட்டினார்.

தூக்கத்தில் காலால் உதைத்துப் பூஜாடியை நொறுக்கிவிட்டான்குமார்.

இவ்வளவும் கனவா?

கடவுளைப் பற்றி... உலகப் பழமொழிகள்

கத்திதலைக்குமேல்தொங்கும்போதுதான் மனிதன் ஆண்டவனைப் பற்றி நினைக்கிறான்.

—ஆப்கானிஸ்தானப் பழமொழி.

ஆண்டவனுக்கு அஞ்சு. அடுத்தபடியாக ஆண்டவனுக்கு அஞ்சாதவனைக் கண்டு அஞ்சு.

—போலந்துப் பழமொழி.

கடவுள் அடிக்கடி நம்மிடம் வருகிறார். ஆனால், அவர் வரும் சமயங்களில் நாம்தான் இருப்பதில்லை.

—பிரான்சு நாட்டுப் பழமொழி.

கடவுள் நாம் செய்யும் பாவங்களை மன்னிக்கிறார். இல்லாவிடில் சொர்க்கம் எப்போதும் காலியாகவே இருக்கும்.

—ஜெர்மனி நாட்டுப் பழமொழி.

ஆண்டவர் ஏழைக்கு இன்பமளிக்க விரும்பினால் முதலில் அவனுடைய ஆட்டைக் காணாமல் போகச் செய்து, மறுபடி ஆடு கிடைக்கும்படி செய்கிறார்.

—துருக்கியப் பழமொழி.

கடவுளின் கருணை இருந்தால், சிலந்தி வலையே சுவராகும். இல்லையெனில், சுவர்கூடச் சிலந்தி வலையாகிவிடும்.

—இத்தாலியப் பழமொழி.

ஆண்டவன் ஒரு கரத்தால், தண்டித்தாலும் மறு கரத்தால் அணைத்துக் கொள்கிறான்.

—யூதர் பழமொழி.

எல்லாத் துன்பங்களுக்கும் மருந்து ஆண்டவனே.

—ஆப்பிரிக்கப் பழமொழி.

தொகுப்பு: கிருஷ்ணாசங்கர்



மழைத் துளிகள்

கொ.மா.கோதண்டம்


ஒருநாள் மழையும் பெய்ததுவாம்.
ஊரே கூடி மகிழ்ந்ததுவாம்.
திருநாள் போல, சிறுவரெலாம்
தெருவில் ஓடி ஆடினராம்.

ஒருதுளி கொல்லன் காய்ச்சிட்ட
ஊதுலை இரும்பில் பட்டதுவாம்;
சுருசுரு எனவே நீத்ததுவாம்;
சத்தமாய் மறைந்தே போனதுவாம்!

ஒருதுளி ஊரின் நடுவினிலே
உள்ள குளத்தில் விழுந்ததுவாம்;
உருவம் இழந்து நீரோடு
ஒன்றாய்க் கலந்தே போனதுவாம்.

ஒருதுளி கடலில் வாய்திறந்தே
ஊரும் சிப்பியில் விழுந்ததுவாம்;
அருமை முத்தாய் ஆனதுவாம்;
அழகும் திருவும் சேர்ந்ததுவாம்.

சிறுவரே, இதனை உணர்ந்திடுவீர்!
சேரிடம் அறிந்து சேர்ந்திடுவீர்!
பெருமை பெற்ற முத்தெனவே
பெரும்புகழ் பெற்று வாழ்ந்திடுவீர்!



மணி அடிக்கும் மனித பொம்மை!

எம். சோலையன்

சாலார்ஜங் மியூசியத்தின் வாசலில் பேருந்து வண்டி வந்து குலுங்கிக் கொண்டு நின்றது.

கதவைத் திறந்து கொண்டு ஒருவர் பின் ஒருவராகச் சிறுவர்கள் கீழே குதித்தார்கள். அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து ஹைதராபாத்திற்குச் சுற்றுலா வந்த மாணவர்கள். ஹைதராபாத்தில் அவர்கள் முக்கியமான இடங்களை எல்லாம் பார்த்து முடித்து விட்டிருந்தார்கள்.

சார்மினாரின் படிகளிலே குடுகுடு வென்று ஏறிக் கும்மாளமிட்டாயிற்று. பிர்லா மந்திரில் தேங்காய்த் துணுக்குகளும், கற்கண்டும் பிரசாதமாகப் பெற்றுக்கொண்டு வேங்கடாஜலபதியை வணங்கி வந்தாயிற்று! கோல்கொண்டா கோட்டைக்குச் சென்று கைதட்டி அலுத்தாயிற்று!

கோட்டையிலே ஏன் கைதட்டினார்கள் என்று கேட்கிறீர்களா?கோட்டையின் நுழைவாயிலில் இருந்து கொண்டு கைதட்டினால் அந்த ஓசை கோட்டையின் உச்சியில் எதிரொலிக்கும். அக்காலத்தில் எதிரிகளின் வரவை மேலே உள்ளவர்களுக்கு இவ்வாறு உணர்த்தினராம்.

ஆயிற்று இனி அவர்கள் பார்க்க வேண்டியது மியூசியம்தான்! பேருந்தை விட்டுக் கீழே குதித்த மாதவனின் உள்ளத்தில் எதிர்வீட்டுப் பாட்டி கூறிய சொற்கள் ஒலித்துக்கொண்டிருந்தன.

மொட்டைத் தலையும், தொந்தி வயிறும், இளித்தவாயுமாக ஒரு ஜப்பானியப் பொம்மை மியூசியத்தில் இருக்குமாம். அதன் வயிற்றைத் தடவிவந்தால் அதிர்ஷ்டமாம்!

பக்கத்து வீட்டுத் தாத்தா தம்முடைய அனுபவத்தை வேறு கூறியிருந்தார். தாத்தா மியூசியத்திற்குப் போன போது சூட்டும், ஹாட்டும், டையுமாக நவீன உடையில் ஒருவர் செய்தித் தாளைப் படித்தபடி அமர்ந்திருந்தாராம். தாத்தாவிற்கு ஓசிப் பேப்பர் படிப்பதில் ஆர்வம் அதிகம்.

எனவே, ''சார்! அந்தப் பேப்பரை இப்படிக் கொஞ்சம் கொடுங்கள்'' என்று கேட்டுவிட்டாராம்.

ஆனால், அந்த ஆள் ஆடவில்லை. அசையவில்லை! 'கஞ்சப் பயல்' என்று தாத்தா முணுமுணுத்தபடி நகர்ந்த போது, கூட இருந்தவர், ''ஐயா, அது பொம்மை'' என்றாராம்! தாத்தாவின் முகத்தில் அசடு வழிந்ததாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களை அழைத்து வந்திருந்த ஆசிரியர் அதிசயக் கடிகாரத்தைப் பற்றிக் கூறியிருந்தார்.

''நன்றாகக் கவனியுங்கள்! இப்பொழுது மணி பதினொன்றரை? நுழைவுச் சீட்டை வாங்கிக்கொண்டு எல்லோரும் கடிகாரத்தின் எதிரிலே போய் நில்லுங்கள். சரியாகப் பன்னிரண்டு மணிக்குக் கடிகாரத்திற்குள்ளிருந்து கதவைத் திறந்து கொண்டு ஓர் ஆள் வெளியே வருவான்! பன்னிரண்டு முறை மணியடித்து விட்டு மீண்டும் உள்ளே போய்விடுவான்! கதவும் மூடிக் கொள்ளும்! முதலில் இந்த வேடிக்கையை எல்லோரும் பாருங்கள்! பிறகு மற்றவற்றைப் பார்க்கலாம். சீக்கிரம் பார்த்து முடியுங்கள். சரியாக ஒரு மணிக்குப் பேருந்து புறப்படும் தெரிகிறதா?'' என்று அவர் கீழே இறங்கும்முன் அறிவித்திருந்தார்.

எல்லோரும் நுழைவுச் சீட்டை வாங்கிய பிறகு அதிசயக் கடிகாரம் இருக்குமிடத்தை விசாரித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாக மாதவன் நுழைவுச் சீட்டை வாங்கப் போகிற நேரத்தில்—

''ஐயா, என்னைக் காப்பாத்துங்க! அண்ணே, என்னைக் காப்பாத்துங்க!'' என்று யாரோ இந்தியில் அலறும் குரல் கேட்டது.

மாதவன் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு இந்தி நன்றாகத் தெரியும்.

வியர்க்க விறுவிறுக்க எட்டு வயதுள்ள சிறுமி ஒருத்தி ஓடிவந்து கொண்டிருந்தாள். கைகளை முன்னால் நீட்டியபடி ஓடி வந்தாள். ஓ! அவள் பார்வை இழந்தவளா?

மாதவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. காலையில் பிர்லா மந்திருக்கு முன்னால் அந்தப் பெண்ணைப் பார்த்த நினைவு வந்தது. ஆனால், அப்போது அவள் கண்களை மூடிக்கொண்டு ஹார்மோனியத்தை இசைத்து, இந்திப் பாட்டு ஒன்றைப் பாடிக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றி ஒரு கும்பல் நின்று பாடலை ரசித்துக் கொண்டிருந்தது. அவள் முன்னால் விரித்திருந்த துணியில் காசுகள் சிதறிக் கிடந்தன.

ஆனால், இப்போது —

ஏதோ கண்ணாமூச்சி விளையாட்டில் கண்கள் கட்டிவிடப்பட்டவள்போலத் தட்டுத் தடுமாறி ஓடி வருகிறாளே?

மூச்சிரைக்க ஓடி வந்தவள் ஒரு கணம் தள்ளாடிக் கீழே மயங்கி விழுந்தாள். அவளுக்கு உதவ யாரும் முன் வரவில்லை.

மாதவன் மணியைப் பார்த்தான். மணி பதினொன்று ஐம்பது இன்னும் பத்தே நிமிடங்கள்தாம் அதன்பிறகு அந்தப் பொம்மை மணியடித்துவிட்டு உள்ளே மறைந்து விடும்.

மீண்டும் அந்தப் பொம்மை மணி அடிப்பதை மாதவன் காண முடியாது. ஏனெனில் சரியாக ஒருமணிக்கு அவர்கள் வந்த பேருந்து புறப்பட்டு விடும்.

மாதவன் இருதலைக்கொள்ளி எறும்பானான்.

'யாராவது இந்தப் பெண்ணுக்கு உதவி செய்ய மாட்டார்களா' என்று அவன் மனம் ஏங்கியது. ஆனால், அந்த வழியே வந்தவர்கள் எல்லோரும் மணியடிக்கும் காட்சியைக் காண உள்ளே ஓடிக் கொண்டிருந்தார்கள்.

மாதவனின் நெஞ்சத்தில் உறுதி பிறந்து விட்டது. வெளியே அவசரமாக ஓடி ஒரு நொடியில் ஒரு சோடா பாட்டிலுடன் திரும்பிவந்தான்.

அச்சிறுமியின் முகத்திலே சோடா நீரைத் தெளித்து வாயிலே ஊற்றினான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவள் இமைகள் பட்டாம்பூச்சியின் சிறகுகளைப் போலப் படபடத்தன.

''தங்கச்சி, ஏன் இப்படி ஓடி வந்தாய்?'' என்று மாதவன் அன்போடு கேட்டான்.

''அண்ணே, என்னைத் தேடிக்கிட்டு இரு தடியர்கள் வருகிறார்களே, நான் என்ன செய்வேன்?'' என்று கடகடவென நடுங்கியபடி பேசினாள் அவள்.



ஏதோ அபாயம் காத்திருப்பதை உணர்ந்து கொண்டான் அவன். அவளைத் தாங்கலாக அணைத்தவாறு தாங்கள் ஏறி வந்த பேருந்திற்குக் கூட்டிச் சென்றான். பேருந்தில் ஏறி, ஓர் இருக்கையின் கீழே மறைவாக ஒளித்து வைத்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கரா முரா என்று இந்தியில் கத்தியபடி இரண்டு பேர் ஓடி வந்தார்கள். ஒருவன் கத்தரிக்காய்க்குக் கையும், காலும் முளைத்தாற்போலத் தோற்றம் அளித்தான். மற்றவனோ கிருதாவும் மீசையுமாக அய்யனார் கோயில்சிலையை நினைவூட்டினான்.

அங்கும் இங்கும் தேடிப்பார்த்தார்கள். பிறகு ஒருவரை ஒருவர் ஏசிக் கொண்டே போனார்கள்

அவர்கள் தலை மறைந்ததும், ''தங்கச்சி! அவங்க போயிட்டாங்க! நீ வெளியே வரலாம்!'' என்று கூறிய மாதவன் அவளை இருக்கையில் அமர வைத்தான்.

''அண்ணே, உனக்கு ரொம்ப நன்றி'' என்று நாத்தழுதழுக்கக் கூறினாள் அச்சிறுமி.

''அதிருக்கட்டும். நீ யார்? அவர்கள் ஏன் துரத்தி வந்தார்கள்'' என்று கேட்டான் மாதவன்.

''அது ஒரு பெரிய கதை'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் அவள்.

அவளுடைய சொந்த ஊர் எது வென்று அவளுக்குத் தெரியவில்லை. அப்பா, அம்மாவின் பெயரும் நினைவில் இல்லை. புஷ்பா என்ற தன்னுடைய பெயரை மட்டும் அவள் மறக்கவில்லை. நான்கு வயதிலேயே பிச்சைக்காரன் ஒருவன் அவளைத் தூக்கிக் கொண்டு போய் வளர்த்து வந்தான். ஓராண்டு கழித்ததும் வேறு யாருக்கோ அவளை அவன் விற்றுவிட்டான்.

புதிதாக வாங்கியவர்கள் அவள் கண்களைக் கெடுத்து, ஆடிப்பாடிப் பிச்சையெடுக்கும் பழக்கத்தைக்கற்றுத் தந்தார்கள்! சிறிது நேரங்கூட அவளுக்கு ஓய்வு கொடுப்பதில்லை. நாள் முழுவதும் ஆட வேண்டும்! பாட வேண்டும்!

இன்று அவர்கள் அயர்ந்திருந்த வேளையில் எப்படியோ தப்பி ஓடிவந்து விட்டாள்! இனி என்ன செய்வாள்?

மாதவனோ தந்தையை இழந்தவன். வயதான தாயோ நாலு வீட்டில் வேலை செய்து அரை வயிற்றுக்கு ஆக்கிப் போடுபவள்! மாதவன் மாலையில் ஒரு வடநாட்டு டாக்டரிடம் எடுபிடிப் பையனாக வேலை பார்த்து வருவதால் பள்ளியில் படிக்கவும் முடிகிறது! இச்சுற்றுலாவிற்குக் கூடப் பணம் தந்து அனுப்பியவர் அந்த டாக்டர்தான்!

மாணவர்களும் ஆசிரியர்களும் பேருந்திற்குத் திரும்பி வந்தபோது மாதவனுடன் இருந்த சிறுமியைக் கண்டு மலைத்தார்கள். மாதவன் நடந்ததைக் கூறினான். அதிசயக் கடிகாரத்தையும், அற்புதப் பொருள்களையும் பார்க்காமல், அனாதைப்பெண்ணைக் காப்பாற்றிய மாதவனை வாழ்த்தினார். அவனுக்காக மேலும் ஒரு மணிநேரம் தாமதித்துப் புறப்பட ஆசிரியர் முடிவு செய்தார்.

ஆனால் அவனோ, ''வேண்டாம் ஐயா! உடனே புறப்படுவது நல்லது! அந்த முரடர்கள் புஷ்பாவைத்தேடிக் கொண்டு திரும்ப வந்தாலும் வருவார்கள்!'' என்று கூறினான்.

ஆசிரியரும், ''அதுதான் சரி! வழியில் ஒரு காவல் நிலையத்தில் இப்பெண்ணைச் சேர்த்து விடுவோம்! அவர்கள் எப்படியும் அவளுடையபெற்றோரைக் கண்டுபிடித்து விடுவார்கள்!'' என்றார்.

பனிச்சிவலிங்கம்!



இமயமலையில் அமர்நாத் குகை இருக்கிறது. அதன் உயரம் தரைமட்டத்திலிருந்து 3880 மீட்டர். அந்தக் குகையில் பனியால் ஆன சிவலிங்கம் இருக்கிறது! இது இயற்கையாக உண்டானது!

இந்தப் பனிச் சிவலிங்கம் எப்போதும் ஒரே மாதிரி இராது. வளர்பிறையில் வளரும்; தேய்பிறையில் குறையும்.

ஒவ்வோராண்டும் சிரவணப் பௌர்ணமி தினத்தில், இச்சிவலிங்கத்தைக் கண்டு வணங்கி மகிழ ஆயிரக் கணக்கான மக்கள் வருகிறார்கள்.

மாதவன் உடனே, ''ஐயா, இச்சிறுமியைப் பார்க்கும்போது இறந்து போன என் தங்கை புவனாவின் நினைவு எனக்கு வருகிறது! காவல்நிலையத்தினர் அப்படியே இவளுடைய பெற்றோரைக் கண்டுபிடித்தாலும், அவர்கள் ஏழையாக இருந்தால் இவளுடைய கண் பார்வை திரும்பப்போவதில்லை! ஆனால், நான் வேலைபார்க்கும் டாக்டர் இந்தியாவிலேயே மிகச் சிறந்த கண் டாக்டர்! எனக்காக இப்பெண்ணுக்கு அவர் இலவசமாகச் சிகிச்சை செய்வார்! அதன் பிறகு நாம் காவல் நிலையத்தாரை அணுகலாம்!'' என்று கூறினான்.

ஆசிரியரால் அவனுடைய கருத்தை மறுக்க முடியவில்லை.

பேருந்து சென்னையை நோக்கிப் புறப்பட்டது!

இரண்டு நாட்கள் கழிந்தன!

மயிலாப்பூரில் தெப்பக்குளத்தை ஒட்டியிருந்த டாக்டர் சர்மாவின் வீட்டின் முன் புஷ்பாவுடன் நின்று கொண்டிருந்தான் மாதவன்!

அழைப்பு மணியின் ஒலியைக்கேட்டு டாக்டர் வந்து கதவைத் திறந்தார்.

''அடேடே! மாதவனா! வாப்பா வா! ஹைதராபாத் சுற்றுலா சுகமாக முடிந்ததா?'' என்று ஆர்வமாக விசாரித்தார்.

''எல்லாம் நல்லபடியாக முடிந்தது டாக்டர்! ஒரு முக்கியமான வேண்டுகோள்! எவ்வளவோ பேருக்குக் கண் பார்வையைத் தந்திருக்கிறீர்கள்! என் தங்கை புஷ்பாவிற்கும் கண்ணொளிதர வேண்டும்!'' என்று மாதவன் கூறிய போது அவர் திரும்பிப் பார்த்தார்.

சற்றுத் தள்ளி நின்றிருந்த புஷ்பா முதல் முறையாக அவர் கண்ணில்பட்டாள்..

புஷ்பாவா?

அவருடைய மனத்திரையில் மின்னல்போல் ஏதோ பளிச்சிட்டது. இதயம் படபடவென அடித்துக் கொண்டது.

சிறுமியின் அருகில் ஓடி அவளுடைய கையை உயர்த்திப் பார்த்தார்.

கடவுளே! அதே ஆறு விரல்கள்!

''ஆ, புஷ்பா, என் மகள் புஷ்பா! என் மகள் புஷ்பாவேதான்!'' என்று கதறிய வண்ணம் அவளைத் தூக்கிக் கொண்டு தட்டாமாலை சுற்றினார் டாக்டர்.

ஓசை கேட்டு உள்ளேயிருந்து ஓடி வந்தாள் டாக்டரின் மனைவி. புஷ்பாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டாள்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் பம்பாயில் வசித்தபோது காணாமல் போன அவர்களுடைய பெண் புஷ்பாதான் அச்சிறுமி.


எவ்வளவோ முயன்று தேடியும் மகள் கிடைக்காத துயரத்தில் ஊரை மாற்றிக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தார்களாம்.

மாதவன் மலைத்து நின்றான். டாக்டருக்கு ஒரு மகள் இருந்ததும், காணாமற் போனதும் இதுவரை அவன் அறியாத செய்திகள்.

''மாதவா, உன்னுடைய உதவிக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்ய முடியும்!'' என்று விம்மினார் டாக்டர்.

''கூடிய சீக்கிரம் உங்கள் மகளுக்கு, என் தங்கைக்குக் கண் பார்வையைத் தாருங்கள்'' என்று வேண்டினான் அவன்.

ஹைதராபாத்தில் மணியடிக்கும் மனிதப் பொம்மையைக் காணும் பாக்கியம் அவனுக்கில்லை. போகட்டும். புஷ்பாவின் கண்மணிகளில் வீசப் போகும் ஒளியையும், டாக்டரின் இல்லத்தில் மலர்ந்திருக்கும் மகிழ்ச்சியையும் காணும் பேறு அவனுக்குக் கிடைத்திருக்கிறதே, அதுவே போதும்!



கண்டத்தின் கால்கள்!

“கால் இல்லாத கண்டங்களே கிடையாதுடா”

“எப்படிடா?”

“ஆசியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா, ஐரோப்பா எல்லாத்திலேயும் கடைசியிலே கால் இருக்குதுடா”

—கீதா

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 .
(Phone: 431543)
Editor: K. Rajendran



பாவேந்தர் பாரதிதாசன்

பிறந்த நாள் - ஏப்ரல். 29

REGISTERED N 211
Registered as a Ne

